
ஆசை
வெள்ளம்
சுகி
காதல் வெளியீடு

404— A/69

காதல் வெளியீடு : 2

நாவல்

# ஆசை வெள்ளம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
சுகி
தமிழியல் துறை.



## காதல் வெளியீடுகள்

காதல் காரியாலயம்
கன்டோன்மெண்ட் :: திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை வாய்ந்தது

விலை அணா 12

முதற்பதிப்பு: ஜனவரி, 1952.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27-1-1979**

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 650
நன்கொடை எண்: 650

அச்சிட்டோர்:
சிட்டி பிரஸ்,
திருச்சிராப்பள்ளி.

# பதிப்புரை

'சுகி'யின் 'ஆசைவெள்ளம்' படிப்பவர் நெஞ்சில் உணர்ச்சி வெள்ளமாய் பாய்வதோடு அறிஞர்களின் சிந்தனையையும் தூண்டும் நாவல்.

பாவம் மற்ருெரு பாவத்தைத் தூண்டுமா என்ற சிந்தனையைக் கிளறும் டால்ஸ்டாய் மகானின் 'இருளின் வலிமை' நாடகத்திற்கும், மூதாதையரது பாவத்தின் நிழல்கள் சந்ததிமீது விழுமா என்ற சிந்தனையைக் கிளறும் இப்ஸனின் 'நிழல்கள்' நாடகத்திற்கும் நேர்மாருன பாதையில் செல்லுகிறது 'சுகி'யின் இந்த நாவல்.

தமிழ் குடும்பப் பண்பில் நடமாடும் ஒருவன், ஒரு பெண்ணுக்குத் தந்தையானதும் பாவத்தின் வலிமையிலிருந்து விடுபட முயல்கிருன் என்ற கருத்தையும், தந்தையின் குண இயல்புகளின் நிழலாக விளங்கினுலும் ஒரு தமிழ்ப் பெண், தந்தையின் பாவத்திற்குமட்டும் நிழலாக விளங்குவதில்லை என்ற கருத்தையும் தூண்டும் முறையில் இந்நாவல் சுவையாகச் செல்லுகிறது.

கதைப் பின்னலிலும், விறு விறுப்பிலும், தமிழ் நடையின் இலக்கியமெருகிலும், தத்ருப மான பாத்திர சிருஷ்டிகளிலும், ஒரு புதுமுறை யைக் கையாண்டு, தமிழ்நாட்டின் பிரபல ஹாஸ்ய எழுத்தாளரான 'சுகி' இந்நாவலை முற்றிலும் புதியதொரு வழியில் 'உணர்ச்சிச் சித்திரமாக' உருவாக்கியிருக்கிறார்.

இதைப் பெருமையுடன் தமிழகத்திற்கு விருந்தளிக்கிறோம்.

**அரு. ராமநாதன்,**
காதல் காரியாலயம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

# ஆசை வெள்ளம்

இன்னார் தான் பெற்றோராக இருக்க வேண்டுமெனச் சொல்லும் உரிமையை யாருக்குத்தான் கடவுள் கொடுத்தார்? யாருக்குமே பெற்றோரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் கொடுக்கவில்லை. ஆனால் வாழ்க்கைப் பசி தீர, இன்னார் மனைவி இன்னார் புருஷன் என்று தேர்ந்தெடுக்கும் உரிமையைத் தடை செய்யக் கடவுளால் தான் முடியுமா? மலையிலே பிறந்த சந்தனக் கட்டையும், கண்ணுக் கெட்டாத கடலுக்குள்ளாக விளைந்த முத்தும், தரைக்கு வந்து விளையாடுகின்றன, பணி செய்கின்றன. மலையிலே பிறந்தேன், என்று பள்ளத்தாக்குக்கு வராமல் இருந்தால் சந்தனம் பிறந்ததின் பயனை அடையுமா? முத்து கடலுக்குள் இருந்தால் தன் அழகை வெளிக் காட்ட முடியுமா?

இந்தநிலைதான் ரோகிணியின் நிலை. ஜமீன்தார் சாம்பசிவத்தின் அருந்தவப் புதல்வியின் நிலைமை பரிதாபகரமாக இருந்தது.

* * *

முப்பது வருஷங்களுக்கு முந்திய காலம்.

சென்னை அரசாங்கம் ஜமீன் - ஒழிப்பு மசோதாவைப் புனராலோசனை பண்ணுவதற்கு முப்பது வருஷத்திற்கு முன்னாலேயே ஜமீன்தார் சாம்பசிவம், ஜமீன் வருமானங்களையும் மூதாதையர்கள் சேமித்து வைத்திருந்த பொருள்களையும் சுகபோகங்களில் சூறையிட்டு, 'ஆயிரத்தைக் காலே மாகாணி' ஆக்கிய பெரும் புள்ளி. ஆனாலும் அவரிடமுள்ள மிடுக்கு நடை, அதிகாரக் குரல் போகவில்லை. சாம்பசிவத்தின் உடல் தளர்ந்தும் அவருடைய மீசையின் முறுக்கு நிமிர்ந்தே நின்றது. பல வேலைக்காரர்கள் நாலா பக்கமும் கை கட்டிச் சேவகம் செய்த காலம் கனவாகி விட்டது.

குதிரை லாயம் இருந்தது, குதிரைகள் போய்விட்டன. ஒடிந்துபோன குதிரை வண்டிகளின் வில்லையையும், பித்தளைத் தகடுகளையும் எப்போதாவது பழைய விலைக்கு விற்பனை செய்ய முயற்சிகள் நடக்கும். இரண்டு பசுமாடுகளும், அநேக பக்கங்களில்இடிந்து சிதலமான அரண்மனையும், சுற்றுப் புறத் தோட்டத்தில், ஒரு காலத்தில் நந்தவனங்களும், பூங்காவனங்களும் செழித்து வளர்ந்ததின் சின்னங்களே எஞ்சின. ஜமீன்தார் சாம்பசிவப் பாண்டியர், உடம்பிலே இளமை ரத்தமும், பணச் செழிப்பும் இருந்த நாளில், எதிரே தெரிகிற தாமரைத் தடாகத்தில், பூர்ணச் சந்திரன் வான வீதியில் பவனி வரும்போது, தோட்டத்தின் மெல்லிய பூங்காற்று தவழ்ந்து விளையாடி வரத் தம்முடைய அன்புக்கும் ஆசைக்கும் பாத்திரமான எத்தனையோ அப்சரஸ் நபர்களில் ஒருத்தியோடு நீச்சலடித்து உல்லாசமாக விளையாடிக் கொண்டிருப்பார்; அதாவது அந்தக் காலத்தில்!

இளமையும் இன்பக் குது குதுப்பும் அவர் உடலில் எதிர் நீச்சு ஆடிக்கொண்டிருந்தவை. இப்போது கை ஓய்ந்துவிட்டன.

இப்போது அந்த அரண்மனை மட்டுமே குடும்ப வாரிசின் சொத்தாக மிஞ்சியது. முன்னோர் எழுதி வைக்காமல் போயிருந்தால், சாம்பசிவம் அதையும் யாராவது ஒருத்திக்குத் தானம் செய்திருப்பார். சாம்பசிவம் பெண்ணுசையிலும் சிங்காரப் பொழுது போக்கிலுமே காலத்தைக் கடத்தி விட்டதால் வணங்கி யாரிடமும் வேலைக்குப் போகமுடியாத மகாராஜாவாக இருந்தார்.

வெள்ளை அரசாங்கத்திடம் போராடிப் போராடி மக்கள் மன வெழுச்சியால் ராஜாக்களெல்லாம் கிள்ளுக்கீரையாகத் தோன்ற ஆரம்பிக்கவே, 'ஐயோ பாவம், ஒரு காலத்தில் வாழ்ந்தவன்' என இரக்கச் சித்தம் கொண்டு உதவிய இரண்டொருவரும் பணமோ நெல்லோ புல்லோ ஜமீந்தார் சாம்பசிவத்துக்குக் கொடுப்பது கிடையாது. வாய்ச் சொல் வீரர்களாகவே இருந்தனர்.

சாம்பசிவப் பாண்டியரிடம் ஊரில் எல்லோருக்கும் கௌரவம் அதிகம். பாம்பைக் கண்டால் பத்தடி விலகுபவர்கள், இவரைக் கண்டால் இருபதடி விலகி ஓடுவார்கள். தமது வாலிபத்தை இழந்தாலும் அதன் பயனுய்க் கிடைத்த ஓயாத இருமல் மட்டும் அவரை விட்டு நீங்கவில்லை. நொடித்துப்போன ஜமீன்தார் சாம்பசிவப் பாண்டியர் சொந்தம் பாராட்டக் கூடிய பொருள்கள் ஆறு.

அருமை மகள்; வீட்டு வேலைக்கார அழகம்மா; இடிந்து விழும் வீடு; மஸ்லின் வேஷ்டி மஸ்லின் ஜிப்பா; புகை பிடிக்கும் குழாய்; குலப் பெருமை.

காலை வேளையில் டீ சாப்பிடுவது அவர் வழக்கம். அன்று சாம்பசிவப் பாண்டியர் சாய்வு நாற்காலியில் படுத்துக்கிடந்தார். ஒரு காலத்தில் பிரம்பு வேலைப்பாடுகளை ஸ்பரிசம் செய்த அது, தற்சமயம் ஜாதிக்காய் பலகைகளால் அதிலே மேடும் பள்ளமுமாக அடிக்கப்பட்டிருந்தன. பலகை முதுகில் உறுத்தாதபடி மெல்லிய கித்தான் சாக்கு மடித்து விரிக்கப்பட்டிருந்தது...ஆகா...அந்த நாளில் அவருடைய நாய்க் குட்டிகள் வெல்வெட்டைத்த மெத்தையில் தூங்கின; குதிரைகள் கம்பளிப் போர்வை போர்த்தி உறங்கின; மாடுகள் ரெட்டுத் துணிகள் அணிந்தே ஜல் ஜல் என்று வண்டிகளில் புறப்படும். காதலிமார்கள் வண்டிகளில் புறப்பட்டால் ஜிகினு வேலைப்பாடமைந்த வண்டிகளில் அல்லவா வருவார்கள்? அந்தக் காலம்...போச்சு...! போயே போச்சு!

இப்போது சாய்வு நாற்காலியில் ஜாதிக்காய்ப் பலகையாவது கொடுத்து வைத்திருக்கிறதே! ஆனாலும் தமது பாரம்பர்யத்தின் மீது ஜமீன்தாருக்கு அடங்காதமோகம்! ஒருகாலத்தில் மன்னாதி மன்னர்களாக விளங்கிய பாண்டிய வம்சத்தவர்களின் பெருமை குறுகித் தன்னோடு வார்சு முடிந்து விட்டதாக நினைப்பார். எந்தக் குலத்து ஆண் மகனும் தமக்குத் தாழ்ந்தவன் என்ற மனப்பான்மை, பேச்சு, வீராப்பு—இவை வண்டி வண்டியாக உண்டு.

சூரியோதயம் அந்தப் பாழடைந்த பங்களாவிற்குள் ஆயிற்று...இன்னும் டீ வரவில்லை. ஜமீன்தார் சாம்பசிவத்துக்கு எல்லாம் போயும் கோபம் மட்டும் போகவில்லை...

"நாசமாப்போக, தடிச்சி!"

தடிச்சி! இப்படித்தான் வேலைக்கார அழகம்மாவை அழைக்கும் பண்பாடு பெற்றவர். ஆனல் முப்பது வருஷத்திற்குமுன்னல் சுவரேறிக் குதித்துச் சந்து பொந்துகளைக் கடந்து அழகம்மாவின் குடிசைக்குள் அவர் நுழைந்தபோது, அவர் கண்களிலே இதே அழகம்மா புத்தம்புதுசாய் சொர்ண விக்கிரகமாகப் பட்டாள். அழகின் ஜ்வாலையாகத் தகித்தாள்: இன்பத்தின் உருவாக இருந்தாள். அழகம்மா அந்த ஜமீன் காட்டைக் கடந்த சிற்றூரில் ஒரு குடியானவன் மனைவி. முயல் வேட்டைக்குப் போன இடத்தில் சிக்கிய மான் அவள். அழகம்மா, வயசில் அவரைவிடப்பத்து

வயது அதிகம் உள்ளவள். எப்படித்தான் அழகம்மாவின் வலையில் ஜமீன்தார் வந்து விழுந்தாரோ என்று அந்தக் காலத்தில் பேசிக் கொண்டார்கள்.

அழகம்மா அழகாக மட்டுமல்ல; தேகக் கட்டும் கவர்ச்சியும் வாய்ந்த பெண்ணாக, நாலு பிள்ளைகள் பெற்ற பிறகும் இருக்கவே, ஜமீன்தார் அவள் வனப்பில் கட்டுண்டார்...அழகம்மாவின் பிள்ளைகளும் சுற்றத்தாரும் அவளை ஜாதியைவிட்டு விலக்கி விட்டனர். அதைத் தவிர்த்துப் பணக்கார ஜமீன்தாரோடு வஞ்சம் தீர்க்க முடியுமா? ஏழை அழகம்மாவோ குடிசையிலிருந்து, குபேர மாளிகைக்குள் நுழைந்தாள்!

அழகம்மா அரண்மனை வாசி ஆகி விட்டாள். அவள் கண் எதிராகவே, பதினாறு வயதுப்பெண்கள் பலர் வந்து போனதைக் கண்டாள். நாளடைவில் ஜமீன்தாரின் காதலியாக மட்டுமில்லாமல், கையாளாகவும் பணிவிடை செய்யும் செவிலித் தாயாகவும் வளர்ந்து விட்டாள்......அழகம்மாவின் தலைவிதி அப்படி!

குடும்பத்தையும் குலத்தையும் மறந்து ஜமீன்தாரே கதியென்ற வகையில் முப்பது வருஷமாக உழைத்து வந்த புண்ய வதியைத்தான் "தடிச்சி" என அருமையாக அழைத்தார். அழகம்மா இந்த ஏச்சுக்குக் கோபம் கொள்ளுகிறவள் அல்ல. இதைவிட மட்டரகமான பேச்சுக்களைக் காதால் கேட்டுப் பழகிப்போயிருப்பதால் அவள் அடுப்பங்கரையில் சிரித்துக் கொண்டாள்.

"டீ......ஏடீ......" என்று அந்த நிலையிலும் அவருக்குச் சிங்காரரசம், சிலேடை நயம்.

"டீயா? ஏடி வருது"...என்று சொல்லிக் கொண்டே அழகம்மா வந்தாள்.

ஜமீன்தாருக்குப் பழைய முறுக்கு. குழாய்க்குப் புகையிலைத் தூள் இல்லை; குடிக்க 'டீ' இல்லை. கோபம் வராதா?

"வீட்டில் — மன்னிக்கணும் மவராசா. அரண்மனையில் ஒன்றும் கிடையாது!"

"கிழவி ... கிழவி ..."

"இப்போ கிழவிதான். உங்களுக்கும் வெள்ளிக் கம்பி முளைக்குதே. ஆசாரி வீட்டிலே போய் உருக்கி, வாங்கி வாங்கய்யா வெள்ளிக்கட்டியை!"

அழகம்மா மாஜி உரிமைப்படியே பேசுவாள். ஜமீன்தாருக்கு, ஆலையில்லா ஊருக்கு இலுப்பப்பூச் சக்கரை என்ற ரீதியில் வாயெல்லாம் பல்லாக மாறும். இன்று டீ குடிக்காத கோபம்.

“கிழட்டுச் சவமே. போய்த் தொலை. எம் மூஞ்சியில் முழிக்காதே”.

“இப்போ அப்படித்தான் இருக்கும். எம் பெண், பிள்ளைகளை மறந்து இங்கே வந்தேனில்லே. அட போதும் போதும் உன் சங்காத்தம்” என்றாள் அழகம்மா.

தனிப்பட சந்திக்கிறபோது தான் “நீ நான்” என்று ஏக வசனத்தில் பேச்சுக் கிளம்பும். இளவரசி ரோகிணி தேவி இருந்து விட்டால், ரொம்ப கௌரவமாகப் பேசுவாள் கிழவி. ரோகிணிதேவி ஜமீந்தாருக்கு ஒரே மகள். வயசு பதினாறாகியும் அந்தப் பாழடைந்த கட்டடத்தை விட்டு அக்கம் பக்கம் போய் அறியாத பெண். எவ்வளவோ செயலாக இருக்க வேண்டும் என்ற நினைவு தெரியும். ஆனால் என்ன செய்கிறது?

மகள் ரோகிணிக்கு அதிகப்படியான கஷ்டங்கள் இல்லாமல் ஜமீன்தார் சாம்பசிவம் வளர்த்தார். அவளுக்கு வயசு வந்தும், திருமணத்தைப்பற்றி அவர் சிந்திக்கவேயில்லை. ஜாடைமாடையாக, அழகம்மா சொல்லுவாள். ஜமீன்தார் காதில் வாங்க மாட்டார். இன்று டீ குடிக்காமல் கோபமாக இருக்கிற நிலையறிந்து பாணத்தைத் தூக்கிப் போட்டாள்.

“இளவரசியம்மா பேரைச் சொல்லியாவது, நல்ல சாப்பாடு சாப்பிடலாம்.”

“எப்படி?”

“உங்கள் மகளைச் செயலான இடத்தில் கட்டிக் கொடுத்தால், உங்களுக்கும் சௌக்கியம், எனக்கும் சௌக்கியம்!”

“அவளை மணம் செய்ய எந்தப் பயல் இந்த உலகில் பிறந்திருக்கிறான்? அவள் ராஜ வம்சம். ராஜ வம்சத்தில் எவனும் இன்று உயிரோடு இல்லை!”

“தொலையுது. வாட்ட சாட்டமான ஆம்பிளையாப் பாத்து கட்டிவச்சாப் போவுது!”

“பார்க்கலாம்.”

"தலையும் மீசையும் நரைச்சாச்சு ... காடு வான்னு கூப்பிட்டால், அவள் தலைவிதி என்னுகும்? இதுவோ பொல்லாத உலகம். உங்களை மாதிரி எத்தனை பேர் இருப்பாங்க ...,?"

ஜமீன்தார் செவியில் "உங்களை மாதிரி எத்தனை பேர் இருப்பாங்க?" என்ற சொல் ஈட்டியாகப் பாய்ந்தது. அருமை மகள், காப்பாற்ற முடியும். எத்தனை நாளைக்குக் காப்பாற்றமுடியும்? தமது பழைய அனுபவங்கள் மனக்கண்ணில் வந்து நின்றன.

குளத்தூரிலுள்ள குடும்பப்பெண் ஒருத்தியைத் தன் பணத் திமிரினல் தூக்கிவந்த காட்சி எழுந்தது. அந்தப் பெண் புலி நகத்தால் பிராண்டிய வடு இன்னும் மறையவில்லை. அவள் சுட்ட வடு. "அடே சண்டாளா? உன் மகள் போல நான். என்னை விட்டு விடு பாவி .... டேய் பாவி ...." என்ற கூக்குரல் எதிரே தெரிகிற பன்னீர் மரத்தைப் பார்க்கும் போதெல்லாம் இன்னும் ஒலிக்கிறது. அந்தப் பெண் யாருமற்ற அனுதியாக இருந்ததால்தான் தூக்கிவந்து பாழாக்க முடிந்தது .... தமது மகள் தனிமையாக விடப்பட்டால்? உலகம் என்ன செய்யும். தன்னைப் போலப் பேர்வழிகள் எத்தனைபேர் இருப்பார்கள் ... அந்தோ? தலை வெடிப்பது போல் இருந்தது ஜமீன்தார் சாம்பசிவப் பாண்டியருக்கு.

"ரோகிணி வயசுப் பெண்ணு, நான் சொல்வதைக் கேளுங்கள். கடுகாய்ப்பட்டி ஜமீன்தாருக்கு ..." என்று ஆரம்பித்தாள் அழகம்மா.

"அவன் ஒரு ஜமீனு? பிச்சைக்காரப் பயல். அவன் ஜாதி என்ன? என் ஜாதி என்ன? ... என் மகளையா அவன் வீட்டில் கொடுப்பது? இதை மட்டும் பேசாதே. டீ கொண்டுவா டீ ... ...;"

"வீட்டில் ஒன்றுமேயில்லை. ஏதேனும் கொண்டு போய் அடகு வைத்து நாலைந்து ரூபாய் கொண்டுவந்தால் தான் உண்டு ...!"

அடகு வைக்கப் பாத்திரங்கள், மாட்டுச் சலங்கைகள், மாட்டு மணிகள் நிறையக் கிடந்தன. வெள்ளியும் தங்கமும் விற்று முடிந்து விட்டன. பித்தளையைக் காசாக்குகிற படலத்தில் இருந்தார்கள். டவுன் பக்கம் போய் வட்டிக் கடையில் ஏதேனும் புரட்டி வர வேண்டுமென்ற நினைப்போடியது.

"உங்கள் பொண்ணு ரோகிணிக்கு வயசு பதினறு. எந்தச் சந்திரனையோ, இந்திரனையே பார்த்துக் கட்டிக்கொடுத்து விடுங்

கள். இப்போது அவளைப் பார்த்தால் செந்தாமரைபோல் இருக்கிருள். அவள் பருவம்; அவள் ஆசை; காதலுக்கு ஏங்கி நிற்கிறது. உடல் எப்படித் துடி துடிக்கும் தெரியுமா? ஆண் வாடை பட்டால் போச்சு!'' என்று குறிப்புக் கொடுத்தாள் அழகம்மாள். பாம்பின்கால் பாம்பறிந்தால் பெண்ணின் மனம் பெண்ணுக்குத்தானே தெரியும்?

"வாயை மூடு கிழமே. உன்னைப்போல் அவளையும் நினைக்காதே.''

"பெண்ணின் மனம் பெண்ணுக்குத் தான் தெரியும்''

"உன்னிடம் சொன்னுளா?'' ஜமீன்தாருக்கு முதுகுநிமிர்ந்து ஆவல் பிறந்தது.

"சொல்லித் தெரிகிற விஷயமா? பெண் முழிக்கிற முழியில் தெரிய வில்லையா?''

"சும்மா அளக்காதே. போ உள்ளே''

"நானும் இந்த வயதில் குறுகுறு வென்றுதான் இருந்தேன். எப்படி நடைபோடுவேன்? யாராவது ஆண்பிள்ளைகள் நம்மைப் பார்த்துச் சந்தோஷம் கொள்ளக் கூடாதா, என்று ஏங்குவேன். இது பருவத்தின் கோளாறு, மகராஜா!''

"பழைய பாட்டிக் கிழவி போல இல்லாமல் புதுசாப் பள்ளிக்கூடத்திலே படிக்கிற பெண்போலப் பேச ஆரம்பிக்கிறயே?''

"ரோகிணி புத்தகம் படிக்கிருளா? அவ்வப்போது என் காதிலும் இப்படிப்பட்ட வார்த்தைகள் விழுகிறதே?''

சாம்பசிவம், தன் குமாரியின் வருங்காலத்தைச் சிந்தனை செய்தார். அழகம்மா குறுக்கிட்டு, "ரோகிணியின் வாழ்வு, உங்களுக்குப் பின் என்னுவது?'' என்று கேட்டாள்.

சாம்பசிவம் பதில் பேசவில்லை. நிமிர்ந்து பார்த்தார். அழகம்மையின், கேள்வி திடுக்கிடவைத்தது. மூளையில் அதிர்ச்சி ஏற்பட்டது.

"வீடு இடிந்து விழலாம். யாருக்காவது விற்றுவிடுங்கள். எங்கும் எலியும், பூச்சியும் பொட்டும் குடியிருக்கின்றன. இந்த வீட்டினுல் என்ன பயன்? ரோகிணியை எங்காவது கலியாணம் கட்டிக் கொடுத்துவிட்டு நாம் எங்காவது கண் காணுத

சீமைக்குப்போய் வாழலாம். சீக்கிரம் முடிவு செய்யவேண்டும்!" என்றுள் அழகம்மா.

"நீ தான் எனக்கு எமனாக இருக்கிருய்"

"வாதுமைப் பருப்பு நாளாகி விட்டால் கசக்கும். அந்த நியதிதான் பெண்களுக்கும், சொல்லுங்கள், என்னைப் போல, அவளும் ஒரு வீட்டில் போய் மானமில்லாமல் வயிறு வளர்க்கும் நிலை வர வேண்டாம் ... ... ..."

"போதுமே ... போய்த் தொலை" என்று கண்ணை மூடிக் கொண்டார் சாம்பசிவம். ஆனால் அவர் மனக் கண் திறந்து கொண்டது. அவர் ஜமீன் சொத்தையெல்லாம் மாடத் தெருப் பெண்களிடம் வாரியிறைத்துக் கொண்டிருந்த பழைய கால நினைவு வந்தது.

திருநெல்வேலி அழகு மாடத் தெரு, அந்த நாளில் இன்பத்தின் எல்லை. 'அழகு ராணி'களின் கொலு மண்டபம். பருவ மங்கையரின் உல்லாஸ வனம். மன்மதனின் போர் அரங்கமே அத் தெரு தான். கோவிலுக்குச் சுற்றுப்புற முள்ள ஒரு வீதி.

அழகுமாடத் தெரு – தேவதாசிகளின் வீடுகள்; மயக்கந் தரும், மன மோகினிகளின் வாசஸ்தலம். மனிதத் தன்மையின் கசப்பு நிறைந்த சாக்கடை. பெண் ஆசையின் மட்டரகமான நிலைக்களம். ஜமீன்தாருக்குத் தெரியும். அந்தக் காலத்தில் அங்கே இவர் கைக்குள் சிக்காத மாடப்புருக்கள் கிடையாது. அவ்வளவு செல்வாக்குப் பெற்றிருந்தவர் சாம்பசிவப் பாண்டியர்.

அத் தெருவில் உள்ள இரண்டொரு பெண்கள் மானத்தையும், கற்பையும், எப்படி விற்க நேர்ந்தன, துஷ்டர்கள் மத்தியில் ஜீவனம் ஏன் நடத்துகிருர்கள்? – அக் கதைகள் நினைவுச் சக்கரத்தில் உருவாயின. தாய்க் கிழவிகள் கோணவாய் நிறைய, காவி கசியும் வெற்றிலைத் தம்பலங்களோடு நிற்பார்கள். இளம் பெண்கள் நெற்றியிலே பெரிய குங்குமம் சகிதம் நிற்பார்கள். என்றும் அவர்கள் நித்ய சுமங்கலிப் பெண்கள் என்பதற்கு விளம்பர சாதனம் இது. கசாப்புக் கடைக்காரன் பேரத்திற்கு காத்து நிற்கும் ஆடு மாடுகளைப்போல வரிசை வரிசையாக இருந்தார்கள், அந்தக் காலத்தில் இளம் பெண்கள். மின்னல் மின்னுவது போன்று இருளடர்ந்த அவ் வீடுகளில் ஆடியோடிக் கொண்டிருந்தனர்.

என்ன வாசனை? என்ன சுகந்தம்? அழகை அதிகப் படுத்தவா? இல்லை அலங்கோலத்தை மறைக்கவா? நாற்றத்தை மெழுகிப் பூச உயர்தரச் செண்டுகள், பன்னீர்கள், தாய்க் கிழவிகளின், பாட்டிகள் கூட அந்த வயதிலும் வாய்ப் பேச்சில் இன்பங்காண ஆசைப்படுவார்கள். வீடுகளின் கதவுகள் என்றும் அடையா நெடுங் கதவுகள்தாம்!—விம்பல்களுக்கு ஊடாகப் பார்த்தால்...... மெல்லிய மஸ்லின் திரைகள் ஊசலாடும், சல்லாச் சேலைகள் மின்னும் அறைக்குள்ளே சீப்புகளும் கண்ணாடிகளும் சிதறிக் கிடக்கும். குங்குமச் சிமிழ்கள் திறந்து கிடக்கும். துணிமணிகள் விரித்தும் மடித்தும் விரவி நிற்கும். ஆனால், எப்போதும் வெளிக் கதவுகள் திறந்தே கிடக்கும். அடைத்திருக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏது? ஆனால், அவர்களின் இதயக் கதவுகள் திறந்திருப்பதில்லை. பாபக் கதவுகள் திறந்திருக்கும்போது, இதயக்கதவுகள் எப்படித் திறந்திருக்கும். அங்கே பெண்ணாசைத் திராசைத்தவிர இதயம் ஏது?

நெடி வீசும் உயர்தரச் செண்டுகள்: தலையைச் சுற்றும் மலரினங்கள்.

தேவமகளிரின் அந்த அழகு மாடத் தெரு...

அவமானத்தின் பிறப்பிடம்.........

*　　　　*　　　　*

சுருள் சுருளான பழங்கால நினைவுப் புகைப் படலத்தின் சுழலில் சாம்பசிவம் ஒரு பெண்ணினைச் சுற்றிச் சுழன்றார். பாப்பா என்ற அந்த மலர்ச் செண்டின் அதரங்கள், வேல் விழிகள்......

காலிலே கொலுசுகள் கலீர் கலீர் என ஒலிக்கக், கை வளையல்கள் கட்டியம் கூற, வந்தாள். மோகனப் புன் முறுவல்! சாம்பசிவம், பல மரங் கண்ட சிற்பியான அவரே மயங்கி விட்டார்! அவள் பேச்சும்மிருதுவான சுபாவமும் நெஞ்சைக் கிளுகிளுக்க வைத்தது. அந்தக் காலத்தில் 'பாப்பா' சிரித்துச் சிங்காரம் தந்து அவரைப் பாப்பாவாக்கி விடுவதில் கெட்டிக்காரி!

அவள் குரலின் நாதம், வீணைபோல் ஒலிக்கும். நினைக்க நினைக்க மயிர் சிலிர்க்கும்! அந்த மாயக்கிளி, பருவத்தின் துடிப்பால்; தன் தகப்பனார் குடிகாரப் பாவி, தமது பெண்ணை மணஞ்

செய்து கொடுக்காத ஒரு காரணத்தால், மகளுடைய மன நிலையை அறியாத தவறினுல், யாரோ ஒருவன் வலையில் விழ; அவன் பாப்பாவை வழுக்கி விழுந்த காரணம் காட்டி, அதையே தொழிலாகச் செய்யத் தூண்டினுன்.

செம்படவன், தனது வலையில் விழ்ந்த மீனைத் தனக்காக வைத்துக் கொள்ளுகிருனு? அதிகக்காசு கொடுப்பவனுக்கே விற்பனை செய்கிருன். சேல்விழியும் பலரின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து பல படிகள் கடந்து வந்தாள். மயானம் மட்டும் வரும் உறவுபோல் ஆசையாகப்பேசி; மறுநாள் மறந்த பல அறிமுகமில்லாத முகங்கள் பல, அனுபவங்கள் வாழ்வுக்கடலில் பிடிபட்ட மீன் தத்தளித்துத் தடுமாறி நின்றது, முடிவில்?

மாடத்தெரு அவளை அரவணைத்தது. அவள் பூவுக்கும்செண்டுக்கும் பலருடைய பணப்பவுசிற்கும், பலி பீடத்தில் நிற்கும் ஆடு ஆனுள்.

பாப்பாவைப்போல் தனது மகள் ரோகிணியும் தன் காலத்திற்குப் பிறகு எவன் கையிலாவது பலியாகி விடுவாளா? அவளுக்கும் மாடத்தெரு தான் கதியாகி விடுமோ? சாம்பசிவம் திடுக்கிட்டார்.

மாடத் தெருவில் தமது மகள் ரோகிணி—அவள் ஜமீன் தாரின் மகள்! சிறிது தயக்கம். மீண்டும் மன உறுதி. இறுமாப்பு. ஆனுல் பெண்தானே? யாராவது அவளை ஏமாற்றிவிட்டால்...? வஞ்சித்து விட்டால்...! அபலைப் பெண்ணை வஞ்சிப்பதற்குத் தன்னைப்போல் எத்தனை ஆடவர்கள் இந்தக் குரூர உலகத்தில் இருக்கிருர்கள்?

அவர் மனம் மீண்டும் மீண்டும் குழம்பிற்று. திரும்பி மீண்டும் மனக்குரங்கு ஒரு திருப்பத்தில் வந்து நின்றது...

அதே பழைய காலத்தில்,...அதோ தெருக்கோடி. அடுத்தது பூக்கடை, வாசனைத் திரவியங்களின் நெடி.

அந்த வீட்டில் அம்புஜம். தாமரை மலரின் வெளிறிய சிவந்த மேனி; பேரழகி! அவளுடைய நெளி நெளியான கூந்தல் புரளும் கன்னக் கதுப்பு...சிரிக்கும்போது குழி விழுமே அந்த ரோஜாப்பூக் கன்னத்தை மெதுவாகக் கிள்ளும்போது, எங்கோ வானத்தில் மிதப்பது போன்ற ஒரு பிரமை தட்டும் அந்தக் காலத்தில்...மறக்கக் கூடிய முகமா? அம்புஜம் அவர் புஜத்தில் மாலையாக வந்து விழுந்த நறுமலர்...அந்தக்காலத்தில்!

அம்புஜத்தின் அந்த உருவம், தங்கம் உருக்கித் தழல் வார்த்த உருவம்...அவள் கதையும் என்ன ?

வேண்டாத பையனுக்கு மணமுடிக்கப் பட்டதால், சச்சர வில் ஓடி ஒளிந்து, பிறகு தனித்து வாழ்வதற்காக மாடத்தெரு வில் வந்து அடைக்கலம் புகுந்தாள். ஒரு பேயின் கரத்திலிருந்து, விடுபட்ட பாவையைப் பல பேய்கள் சூழ்ந்து கொண்டன.

ரோஜாவின் ஸ்பரிசத்தைவிட இன்பம் தந்த மாதுளை மலரின் வர்ணங் கொண்ட அந்த இதழ்கள்....சை...

அந்த அம்புஜத்தைப் போல தம்மகள் ரோகிணியையும் வேண்டாத ஒருவனுக்கு மணமுடித்தால் மாடத் தெருவுக்கு வந்துவிடுவாளோ ...?

அதே தெருவில் தமது மகள் ? ரோகிணிக்கு அந்தக் கதி வருமா ? தாமரையை இதழ் இதழாகப் பிய்த்துக் கட்டுகிருனே விலை கூறும் பூக்கடைக்காரன், அந்தக் கதி ஏன் வரக் கூடாது ? பாவம் புண்ணியம் என்ற இரு உருவங்கள், நிழலாடியபடி எழுந்தன அவர் மனக்குளத்திலே. மனத்தளவின் சிந்தனை உயரத்திற்குப் பாவ இலைகள் சாய்ந்தன. மறக்க முடியாத மொட்டுகள். மலர்ந்த புஷ்பங்கள், உதிர்ந்த மலர்கள் அலை மோதின !

தலையை உதறிவிட்டு "சை" என்ன கோரமான எண்ணங் கள். "எனது பாப நிழலாக அவள் வாழக்கூடாது." என்ற வைராக்கியம் பிறந்தது. உலகம் பொல்லாத உலகம் என்ற முடிவுக்கு வந்தார். அந்த உலகத்தைப் பொல்லாததாக ஆக் கியவர் தாமும் தம்போன்ற மனமுடைய செல்வந்தருந்தான் என்று நினைக்கவில்லை !

மகளை விரைவில் பரம்பரை மாருமல் எவனுவது ஒருவ னுக்குக் கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென நினைப்பார்.

ஆனுல் மறுகணம் சாம்பசிவப் பாண்டியர் ரத்தத்திலே தோய்ந்திருந்த அகம், குலப் பெருமை, மகாராஜா மனப் பான்மை உருப்பெறும். உள்ளத்தை நிமிர்த்தி வைத்துச்சாரம் கட்டி விளையாடும். பால்யமுதலே 'தான்' என்ற நோக்கத்திலே எழுந்து விளையாடி, அழுந்தி, எழுந்தவர் இன்னும் அந்த மம தையின் பிடிக்குள் ஆடிக் கொண்டிருந்தார் .... ...

அவர் ரத்தத் துளிகளில், எலும்புப் பிடிப்புகளில், எண் ணச் செறிவுகளில் இந்த 'ஜமீன்' எண்ணம் குறையவில்லை நிமிர்ந்து பார்த்தார்.

எதிரேவந்துநின்ருள், ரோகிணி. அவளைப்பார்த்ததும் தகப்பனுருக்கு மாடத்தெரு அழகு ராணிகள், தேவதைகள் நினைப்பு வரவே பொல பொலவெனக் கண்ணீர் வடித்தார். தந்தையின் கண்ணீரைக் கண்டறியாத மகள் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"ஏன் அழுகிறீர்கள் அப்பா?"

ரோகிணியின் குரலில் சாந்தம், அமைதி, அன்பு, கனிவு இருந்தன. வேட்டையாடி நிமிர்ந்த அந்த மாஜி வீரர் சமாளித்து "ஒன்றுமில்லையம்மா. நமது தலைவிதியை நினைத்தேன்" என்று மழுப்பினுர்.

ரோகிணி கலகலவெனச் சிரித்துக்கொண்டு தோட்டத்தின் பின்புறம் இடிந்தும் சரிந்தும் கிடந்த இடத்தை நோக்கி நடந்தாள்.

## அத்தியாயம் – 2

கம்மியன்கை யாலடித்துக் காய்ச்சி வெட்டித் தீராமல்
செம்மலரோன் கைம்மலரால் செய்து விட்ட பொற்பாவை;

கையாற் பிடித் தொருவர் கட்ட இதழ் குன்ருமல்
மையார் குழலார் மடியிருக்கும் பூமாலை

கொஞ்சி மொழி குழறிக் கூட்டிற் கிடவாமல்
செஞ்சொல் மதன கலை செப்புங் கிளிப்பேடு

மேல் காற்று இனிமையாகச் சுமந்து வந்த அந்தக் கவிதைகளின் அடிகள், ரோகிணியின் காதில் சில தினங்களாக விழுந்துகொண்டிருந்தன. அதிலும் நேற்று வந்த சிருங்காரக் கவிதை அடிகள் அவள் நினைவில் பதிந்திருந்தன. அதே நேரத்தில் இன்றும் பாட்டுக் கேட்கவே அவளை யறியாமல் ரோகிணி அவ்விடமிருந்து நடந்தாள்.

ஊருக்கு ஒதுக்குப் புறமாக இருந்த காரணத்தால் அங்கே ஜன நடமாட்டம் இல்லை. அடுத்த பக்கம் சிறிய இறவைத் தோட்டம். மா மரங்கள் பூத்துக் கம்மென்று மணத்தது. பசிய சோளப் பயிர்கள் தலை சாய்த்துக் காற்றிலே அலை மோதிக்

கொண்டிருந்தன. அவள் நெஞ்சிலே கனல் மூட்டிய அந்த வாலிபன் குரலும், காதலைக் கிளறிய கவிதையும், பாடுகிற நபரைப் பார்க்கத்தான் தூண்டியது. அந்தச் சிருங்காரக் கவிதைகளைப் பாடும் வாலிபன் எப்படியிருப்பான் என்று பார்க்க ரோகிணி வேகமாய் பாழடைந்த தோட்டத்துக்குள், ஓடினாள்.

தனது சேலைத்தலைப்பு அருகருகே வளர்ந்து நின்ற முட் செடிகளில் படாமல் ஒதுங்கி ஒதுங்கிச் செல்லும் போது, மான் ஒன்று மிரண்டு குதிப்பதைப் போல் இருந்தது. ரோகிணி வருவதை அறியாத அவ் வாலிபன் பாடிக் கொண்டிருந்தான். பாட்டின் அடிகள் விரைவான சந்தத்தில் போய்க் கொண் டிருக்க, செவ்விளநீர் மரத்திற்கு அப்பால் நின்று கருவண்டுக் கண்களால் பார்த்தாள். தென்னோலைக் கிடுக்கில் சப்பளம் கூட்டி உட்கார்ந்து கொண்டு தனது கையிலுள்ள கிழிந்த புஸ்த கத்தைப் பார்த்துப் பாடிக் கொண்டிருந்தான் அந்த வாலி பன். சிருங்கார ரசம் காணும்ருதமாகக் கவிதைகளில் பொழிந்து கொண்டிருந்தது.

கேட்டுக் கிறு கிறுத்துப் போனாள் ரோகிணி. தன் ஆசை யெல்லாம் கண்களிலே துள்ள, "ஆஹா ஆஹா" என்று குரல் கொடுக்கவே, வாலிபன் திரும்பினான். அவள் சடக்கெனச் செவ் விளநீர்க் கன்றின் மறைவில் தலையை இழுத்துக் கொண்டாள். மனப் பிரமையோ என்ற யோசனையில் மீண்டும் அவன் கவி தைப்புஸ்தகத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

ரோகிணி கலகல வெனச்சிரித்தாள்.

அந்தத் தோட்டமெங்கும் சிரிப்பொலி கேட்டது!

கனவோ, நனவோ என்று வாலிபன் எழுந்து சிரிப்புக் கேட்டதிசை நோக்கி வரவே, ரோகிணி பயந்து விட்டாள். அது வரை, ஜமீன் பழக்கப் பிரகாரம் ஆடவர் கண்களில் விழித்த வள் அல்ல. அதிலும் தகப்பனார், அவர் தோழர்கள் இரண் டொருவரைத் தவிர அவள் வேறு எந்த ஆடவனோடும் பேசிய தில்லை. அந்த இளங்காளை எழுந்து வரவே ரோகிணிக்கு உடல் புல்லரித்து வியர்வைத் துளிகள் அரும்பின. குளிர்ந்த அச் சோலைக்குள் அவ்வளவு உஷ்ணமா? அவள் நெஞ்சுக் கனல் அப்படித் தகித்தது. மேலும் ஒருவிதப் பயம் வேறு!

ரோகிணியின் சந்திர பிம்ப முகத்தைக் கண்டு மோகி னியோ என்று அச்ச முற்றான், கவிதை பாடிய வாலிபன்.

அவள் நடுங்குவதைக் கண்டதும், "ஏனம்மா, நீ யார்?" என்றான்.

"நான் ... நான் ......"

அவளுக்குத் தான் யாரெனச் சொல்ல முடியவில்லை. திணறினாள்.

"பெண்ணே என்பெயர் சந்திரன்! யான் பாடியது கூளப்பநாயக்கன் காதல் பிரபந்தம். யான் இவ்வூர்ப் பாவலர் செந்திருக் குமார் அவர்கள் மருமகன். அவரிடம் பாடம் கேட்பதற்காக வந்திருக்கிறேன். எனது சொந்த ஊர், பத்து மைலுக்கு அப்பாலுள்ள அயலூர்!

ரோகிணி தன்னைக் கண்டு பயப்படுவதன் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. அவளுக்கோ பிறந்தது முதலே அண்டை அயல் போய்ப் பழக்கமில்லை. அன்னிய இடத்தில், அன்னிய மனிதனோடு நிற்பதே ... பயங்கரமாக இருந்தது. தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

"உன்னைப் பார்த்தால், அழகான பெண்ணாகத் தோன்றுகிறது. இந்தப் பட்டிக்காட்டில் நீ எப்படி வந்தாய்?" என்றான் பாவலன் மருமகன் சந்திரன்.

"நான் அடுத்துள்ள பங்களாவில் உள்ளவள். ஒரு வாரமாக நீங்கள் பாடுகிற பாட்டுக்களைக் கேட்டு வந்தேன். உங்கள் குரலும், பாட்டுக்களும், ..."

"கர்ண கடூரமாக இருந்தன. அதனால் நேரில் தண்டிக்க வந்தீர்கள். இல்லையா? ... ஆமாம், இந்த அரண்மனையில் ஒரு ஜமீன்தார் இருக்கிறாரே, அவருக்குத் தாங்கள் யார்?"

"அவருடைய புதல்வி."

"ஜமீன்தாரிணி!" என்று கண்விழி பிதுங்கக் கேட்டான் பாவலர் மருமகன் சந்திரன்"

"பரிகாசம் செய்யாதீர்கள். எங்களுக்கு இந்தப் பரந்த உலகில் சொந்தம் இந்த "இடிந்துவிழும் அரண்மனை" ஒன்று தான். வேறு சொத்துக்கள் கிடையாது." என்று குறைப் பட்டாள் ரோகிணி.

"ஜமீன்தாரிணி என்று கேலி செய்து விட்டேனோ? மன்னிக்கவும். இந்தத் தோட்டத்திற்கு நான் வந்ததின் காரணத்

தைச் சொல்லிவிடுகிறேன்! இத்தோட்டம் ஊரைவிட்டு ஒதுங்கி இருப்பதால், படிக்கவும் பாடவும் உத்சாகமாக இருக்கிறது. நான் பாவலர் செந்திருக்குமார் அவர்களிடம் தமிழ் கற்று வருகிறேன்!''

''எனக்கும் தமிழில் அன்பு உண்டு. என் பாட்டனுர்கள் காலத்தில் அநேக புலவர்கள் இந்த ஜமீனில் இருந்தார்களாம்!''

''என் மாமா செந்திருக் குமாரரும் சொன்னுர். இப்போது பழஞ்சுவடிகள் கூட உங்கள் ஜமீனில் இல்லையாமே?''

''ஏதோ சில புத்தகங்கள் கிடக்கின்றன. எனக்கு நேரப் போக்குத்தரும் நண்பர்கள், சிநேகிதைகள் அந்நூல்களே!'' என்று சிரித்தாள் ரோகிணி.

''நான் பாடுவது தங்களுக்கு இடையூருக இருந்ததோ?'' என்று சிரித்தான் வாலிபப்பாவலன்.

அவள் நாணத்தால் தலை கவிழ்ந்து கொண்டாள். அடுத்த விநாடி என்ன நினைத்தாளோ, மறு கணம் மிரண்ட மான்போல அத் தோட்டத்தின் ஒத்தையடிப் பாதை வழியே திரும்பிப் பார்க்காமல் ஓடினுள்.

''பெண்ணே ... ஜமீன்தார் மகளே ... உன் பெயர் ... உன் பெயர்?''

சந்திரனுக்கு ஏன் கேட்கிருேம் என்று தெரியவில்லை. அவள் அங்கிருந்து மறைந்ததும், அந்தப் பசிய சோலை பாலை வனமாகத் தெரிந்தது. மயில் தோகைபோலக் காற்றில் அலைந்த தென்னேலைகள் கள்ளிச் செடியாகவும், உலகமே சூன்யமாகவும் தோன்றின. கையிலே இருந்த கூளப்ப நாயக்கன் காதல் புஸ்தகம் நழுவி விழுந்தது. படிக்கப் படிக்க இளமை முறுக் கேறி, உச்ச வெறியில் தள்ளிக்கொண்டு போன அந்தக் கவிதை வரிகளில் கவனம் செல்லவில்லை ... அவன் எத்தனையோ யுக யுகாந்திரமாக அறிமுகமான நட்பின் செல்வத்தை இழந்தவன் போல் ஏங்கி நின்ருன். மறு கணம். ''ஒருவேளை பைத்தி யமோ? ஏன் பெயரைச் சொல்லாமல் குடு குடுவென்று ஓடு கிருள்? உலகத்திலே அழகு வெள்ளமாகப் பிறக்கிற பெண்கள் பாதிக்குமேல் பைத்தியமாகவே இருக்கின்றன. அப்படித் தானே இவளும்?'' என்ற எண்ணம் எழுந்தது.

பித்துப் பிடித்தவன் போல ரோகிணியின் சௌந்தர்ய உருவத்தைக் கண்ணில் தேக்கி இமைகளை மூடிக் கொண்டு உட்கார்ந்தான், பாவலர் செந்திருக்குமாரர் மருமகன் சந்திரன்.

ஃ ஃ ஃ

திருமணத்தின்மூலம் மகளுடைய வருங்கால வாழ்வுக்கு வகை வகுக்க முயன்று முயன்று ஒரு முடிவுக்கும் வரமுடியாமல் ஜமீன்தார் சாம்பசிவப் பாண்டியர் திண்டாடியபோது, ஒரு நீண்ட குரல் கேட்டது.

கழுத்திலே உருத்திராக்ஷ மணி மாலை .... எடுத்துக் கட்டிய இடுப்பு வேஷ்டி, பக்தியையும் மரியாதையையும் விளம்பரப் படுத்தும் வகையில் காட்ட, நெற்றியில் திருநீறு துலங்க, உடலை வளைத்து, "வணக்கம் திரு சாம்பசிவப் பாண்டியரவர்களே" என்று சொல்லியபடி வந்தார் பாவலர் செந்திருக்குமார்.

பழைய விசுவாசத்தை மறந்து விடாமல், பரம்பரையாகத் தமிழ் கற்ற பாவலர், ஜமீன்தாரிடம் வந்து நின்றார்.

யாரிடமாவது தனது மனக் கொதிப்பை ஆற்றப்பாத்திரம் தேடிக் கொண்டிருந்த ஜமீன்தாருக்குப் பாவலரைக் கண்டதும் ஆறுதலாக இருந்தது.

"நீங்களும் கம்பரைப் போலக் காவியங்கள் எழுதக் கூடியவர்கள்தாம், நானும் ஒரு சடையப்ப வள்ளலாக இருந்திருந்தால் ?"

"ஜமீன்தார் அவர்கள் என்றும் ஜமீன்தார் அவர்கள் தான்."

"இப்படி அமருங்கள் புலவர்வாள். நல்ல சமயத்தில் வந்தீர்கள். என் மனப்புண்ணுக்கு ..."

"அமிழ்தினும் இனிய தமிழ்ச் சொல்லே எதற்கும் மருந்து" என்று குறுக்கிட்டும் ஜமீன்தார் சாம்பசிவப் பாண்டியர் பேசவே செய்தார்.

"எனது மகள் ரோகினி ...."

"அவ்வம்மையார் மாது சிரோன்மணி, பெண்களுக்குள் ரத்தினம். மாசறுபொன்; வலம்புரி முத்து ..."

"இருக்கட்டும். அவளை மணம் செய்ய இந்தத் தமிழகத்தில் எந்தப் பாண்டியன் இருக்கிறான் ? என்னோடு பாண்டிய வேந்

தர் மரபே, இரத்தமே வற்றிப் போய்விட்டது. அவளை யார் மணப்பது?

ரோகிணியைப் பற்றி ஜமீன்தார் ஒரு நாளும் பேசாதவர் தம்மிடம் பேசுகிறார். என்ன பதில் கழறுவது, அல்லது நவில்வது என்ற யோசனையில் ஆழ்ந்தார் புலவர். பௌராணிக காலத்திலும் கடைச் சங்க நூல்களிலும் வர்ணிக்கப்பட்ட கன்னிமாடங்கள் இல்லையென்ற சேதி நினைப்பில் எழவே, “பாண்டிய மன்னரின் கடைசித் தோன்றலேறே, அற்றை நாளில் கன்னி மாடங்கள் இருந்தன. இது போழ்து அவை இல. இருக்குமிடம் தேடி ஜமீன்தாரிணி அம்மையாரைச் சேர்த்து விடுவதே சாலச் சிறந்தது...” என்றார்.

பாண்டியருக்கு, கிறிஸ்துவக் கன்னிமாடங்கள் பாளையங் கோட்டையில் இருப்பது தெரியும். அங்கே கொண்டுபோய் விட்டால் மகள் கல்யாணத்தைப்பற்றிக் கவலை இல்லை. தன் பரம்பரைக்கு ஏற்றவன் கிடைக்கவில்லையே என்று வருந்த வேண்டாமே! பாண்டியர்கள் வம்சம் புனிதமான வழியிலே மறைந்துவிடும். கன்னிமாடத்தில் சேர்த்துவிட்டால்...? ஆனால் பரம்பரையாக ரத்தத்திலேயே வளர்ந்துவந்த பரம்பரை அணுக்கள் ‘வேண்டாம் பக்தனே வேண்டாம்! மகளைக் கன்னியாக்காமல் மணமகளாக்கு’ என்று சொல்லின.

“யாது யோசிக்கிறீர்கள்?” என்றார் பவ்வியமாகப்பாவலர்.

“அக்கம் பக்கம் ஜமீன்களில்...”

அதற்குமேலாக அவருக்குப் பேச்சு எழவில்லை. மற்ற ஜமீன்தார்கள் எல்லாருமே தன்னைவிட மட்டம், தமது மகளை மணக்க அருகதையற்றவர்கள் என்ற திட்டமான முடிவு உருப் பெற்றது. இதை யூகித்த செந்திருகுமார் பாவலர், ‘மேலச் சிவல் பட்டி இளைய ஜமீந்தார், பிரமச்சாரி’ என்றார்.

‘பிரமச்சாரிதான். கலியாணமாகாதவனுக்கு அது ஒரு போர்வை – அவன் பேச்சை எடாதீர்கள். சுத்தக் காலிப்பயல்...’

‘அவ்விடம் தெரிந்திருக்க நியாயமுண்டு. பெரிய இடப் பேச்சு’

ஜமீந்தாரின் நடவடிக்கைகளை அந்தப் பெரிய இடம் அடக்கிவிட்டது. தமது சிலேடைப் பெருமையில் பாவலர் சிரித்துக் கொண்டார். ஜமீந்தாருக்குப் பாவலர் கவிதைகள் மீதோ அவர் கல்வி மீதோ விருப்பம் கிடையாது; அவர் அப்பாவித்தனத்திடந்தான் அளவற்ற மதிப்பு!



மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.

"சரி, எதற்கும் நம் குழந்தை ரோகிணிக்கு நாலெழுத்துச் சொல்லிவையுங்கள். உலகம் தெரியட்டும்," என்ருர் ஜமீன்தார். பாவலர், என்றுமே கஷ்டப்படுகிற பேர்வழி. அதிகப்படியான ஊதியம் கிடைக்காதெனத் தெரியும். இருந்தாலும், என்ருவது ஜமீன்தார்களுக்கு நல்ல மாப்பிள்ளை கிடைத்தால், தமது கஷ்டம் விடியும் என்று நம்பினுர். அவளுக்குத் தமிழ் கற்பிக்க ஒப்புக்கொண்டார்.

"எனக்குத் தெரிந்த உலக விவகாரங்களைப் போதிக்கிறேன். பாண்டியர்கள் கொடுத்த பரிசு கொடுக்கட்டும். உங்கள் தோப்பிலே ஒரு பட்டமரம் நிற்கிறது. என் வீட்டிலே விறகுப் பஞ்சம்.....!"

"சரி, சரி, வெட்டிக்கொண்டு போங்கள். கர்ணன் தனது வீட்டு உத்திரத்தை எரி விறகாகக் கொடுத்தான். இன்னும் நாலு வருஷம் போனுல், இந்த இடிந்த கட்டிடத்தில் அதுதான் மிஞ்சும்!"

"கடவுள் வழி விடுவார்... திருச்சிற்றம்பலம்"

உருத்திராக்ஷ மாலையை உருட்டியபடியே பாவலர் அங்கிருந்து நகர்ந்தார். வழி நெடுக ஊவாஞ்செடியும், எருக்கும் குறுக்கும் முளைத்திருந்த இலைந்தைச் செடி முட்களைத் தாண்டித் தாண்டி, தோட்ட எல்லையில் நின்ற பட்ட மரத்தைப் பார்த்தபோது அவர் மனங் குளிர்ந்தது. வரப்போகிற மழைக் காலத்திய கஷ்டம் நீங்கிற்று!

"மனிதனும் இந்தப் பட்ட மரத்தைப் போல் எரிந்து சாம்பலாகப் போகிற ஒரு சாம்பல் தானே" என்ற எண்ணத்தில் திளைத்தபோது ... ... யாரோ பெரு மூச்சு விட்டுப் பின்னுல் ஓடி வருவதைக் கண்டு திரும்பினுர். தம்மிடம் நாளை முதல் பாடம் கேட்கப் போகும் ரோகிணி.

"எங்கேயிருந்து ஓடி வருகிறீர்கள்? யான் அறியலாமோ?"

தகப்பனுருடைய நண்பரான பாவலரைக் கண்டதும், "நமஸ்காரம் ஐயா, தமிழில் உங்களிடம் ... ... ஒரு நூல் இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"எந்த நூல் வேண்டுமானுலும் கேள். நாளைக் காலையில் வருகிறேன். எந்த நூல்? கம்பராமாயணமா? நன்னூலா? சங்க இலக்கியமா? பெரும்பாணுற்றுப் படையா?"

அப்போது தான், பாவலர் மருமகனிடம் அவன் பாடிய சிருங்காரக் காதல் கவிதைப் புஸ்தகத்தின் பெயரைக் கேட்கத் தான் மறந்து போய் ஓடி வந்துவிட்டதின் தவறு அவளுக்குப் புலனாகியது. சமாளித்துக் கொண்டாள். "நாளை அவசியம் வாருங்கள் ஐயன்மீர்" என்றவளுக்கு ஒரு சந்தேகம் தோன்றி, "ஐயன்மீர் தவறாக இருந்தால், என்ன வார்த்தை சொல்வது ஐயன்மீர்?" என்று கேட்டாள். பாவலர் சிரித்துக் கொண்டு பட்ட மரத்தை நோக்கினார். பட்ட மரம் தந்த இன்பத்தை, நன்னூலும் அகத்தியமும் அவருக்குத் தரவில்லை என்பதை உணர்ந்தார். இலக்கணச் சுவையைவிட அப் பட்ட மரம் அவ்வளவு ரஸமாக இருந்தது.

அடுக்களைப் பிரதேசத்திலிருந்து "ரோகிணி, ரோகிணியம்மா" என்று அழகம்மா குரல் கொடுக்கவே, "வணக்கம் ஐயா" என்று கரங்குவித்துத் துள்ளி ஓடினாள். பாவலர் ஒரு காலத்தில் தமது தாத்தாக்களும், கொள்ளுத் தாத்தாக்களும், அந்த அரண்மனையிலே ஜமீன்தார்களுடன் அரியாசனத்தில் அமர்ந்த அந்தப் பூர்வீகப் பெருமிதக் காட்சியை மனமார நினைத்துத் தம் தலைவிதி இப்படியும் நொடித்துப் போன ஜமீன்தாரிடம் சேர்ந்ததை நினைக்க நினைக்க ... ... ...

நினைத்தால் திரப்போகிறதா?

## அத்தியாயம் 3

திருநெல்வேலி பூரத வீதியில் தேரடிக்கு அருகாக இருக்கும் கடை பெயர் பெற்றது.

அது லேவாதேவிக் கடை!

சிந்தாமணிப் பெரியார் தம் கடை பூட்டி, இரும்புப் பெட்டிகளை இழுத்துப் பார்த்துக் கொண்டிருந்த சமயம் சுருட்டுப் புகை நாற்றம் அடிக்கவே திரும்பிப் பார்த்தார். பின்னெக் காய் எண்ணெய் வழிந்து தொங்கிய சர விளக்கின் ஐந்து முகத்தில், ஒரு திரியே எரிந்து கொண்டிருந்ததால், வந்த உருவம் யார் எனச் சிந்தாமணியார் கண்ணில் விழவில்லை.

"என்ன கடை பூட்டியாச்சா?"

குரலிலிருந்து அடையாளம் கண்டு கொள்வதைவிட சுருட்டுப் புகையின் மணம்?

"அடடா, ஜமீந்தார்வாளா? வரணும் வரணும். ஏது இந்த அர்த்த ராத்திரியிலே?"

"வேறே வழியில்லே. இந்த மோதிரம் இருக்கிறது. ஏதாவது பணம் வேணும்,"

"பணமா? இல்லையே?"

சிந்தாமணியார் பல கேள்வி, உப கேள்விகளில் ஆளை நோட்டம் பார்த்து, ஜமீந்தார் சொத்துக்களை ரகஸியமாக விற்க வருவதை வாங்கி வாங்கிப் பழக்கம் உள்ளவர்.

"எவ்வளவு வேணும்?"

"ரூ. 200 வேணும்"

"அம்மாடியோவ். வழியில்லே"

பேரம் நடந்து கொண்டிருந்தது. கடைசியில் லேவாதேவி சிந்தாமணியாரிடம் மோதிரம் கைமாறியது. நல்ல உயர்ந்த ரகப்பச்சை ... ... ... 500 ரூபாயாவது விலைபோகும். அந்த நிலையில் ரூ. 100ஐ ஜமீன்தாரிடம் கொடுத்தார். அதுவும் மிகுந்த மனக் கஷ்டத்தோடு. சிந்தாமணியார் நூற்றுக்குப் பத்து மதிப்புப்போட்டு ஒன்பதுதான் கொடுப்பது வாடிக்கை!

ஜமீந்தாரோ, அழகம்மாளின் இடைவிடாத போதனையாலும் தமது மகளின் வருங்காலத்திய மண வாழ்க்கையை வகுத்து விட வேண்டுமென்ற கடமை யுணர்ச்சியாலும் சந்திக்கிற நபர்களிடம், யோசனைகள் கேட்பது நல்லதென நினைத்தார்.

"ஆமாம். ஒரு யோசனையில்லே. உங்கள் மார்பத்திலே ... ... கல்யாண மாகவேண்டிய ஜமீன் பிள்ளைகள் யாராவது தெரியுமா?"

"தெரியுமே. உங்கள் மகள் வயசு என்ன?"

"பதினாறு போய் பதினேழு"

"பதினேழு" பல்லைக் கடித்துக் கொண்டார். பிறகு, "உங்க இனத்திலே நம்ம துப்பிலே யாரும் இல்லை!" என்றார் சிந்தாமணியார்.

"அத்திப்பட்டி ஜமீன் எப்படி?"

சிந்தாமணியார் சிரித்தார். சிரிப்பில் சில கோடையிடி போலக் கேட்டன. ஒரு சில வெத்து வேட்டாகப் போய் அமுத்தலாக நின்றன.

“என்ன சிரிக்கிறீங்க? பெரிய இடமாச்சென்னு நினைக்கிறீங்களோ?” என்று தயங்கினர் ஜமீந்தார்.

சிந்தாமணியார் குனிந்து காதைத்தன் பக்கம் இழுத்து, “அது வைப்பு மகன்; சொந்த மகன் இல்லே, ஐயா பாண்டியரே” என்று சொன்னர்.

“அப்படியா? ரொம்ப நல்லது. சிந்தாமணியாரே, நம்ப வசம் இன்னும் ஒரு பெரிய ஐட்டம் இருக்கு; அப்புறம் அப்படி அப்படித்தான் ... ... ... உங்க பேச்சிலே ...”

“பத்தரைமாத்துக்குப் பழுது கிடையாது. உலகம் என்னத்தைக் கண்டது? சொந்த மகன் போல, அதிகாரப் பட்டத்தையும் இறக்கிப் போட்டார்கள். வெள்ளைக்காரனுக்கு என்ன கட்டிய மனைவியின் மகன்தான் ஜமீன் ஆள வேண்டுமென்று கரிசனையா? ... அத்திப்பட்டி பெரிய ஜமீன்தாருக்கு இப்போ உள்ள இளைய ஜமீன்தாரின் தாய் பேரிலே உயிர்; அந்த அம்மாவுக்கோ ... ... மாட்டுத் தொழுவிலே சாணி பொருக்கிறதிலே உயிர் ...”

“சை ... சை. அப்படி வந்த சரக்கா? அப்பறம் விட்டுத் தள்ளுங்கள். பாளையங்கோட்டை கன்னிமாடம் இருக்கவே இருக்கு ... ....”

மனக் கதவு அடைத்துக் கொள்ள லேவாதேவிக் கடையிலிருந்து, ஜமீன்தார் திருநெல்வேலி ரத வீதிக்குள் இறங்கினர்.

இரட்டை மாட்டு வண்டி ஜில் ஜில் எனச் சதங்கை ஒலி தூளைப் பறக்கச் சவாரி போன அதே மனிதர் கால்கள் பூமியில் பாவ வேண்டியிருந்தது. அந்த நிலையில் தன்னை அடையாளம் கண்டுகொள்ள முடியாத வகையில் நடந்து சென்முர். இன்றைய நாகரிக மின்சார வெளிச்சங்களோ, முனிசிபல் தர்ம விளக்குகளோ இல்லை!

வீட்டுக்காரர்கள் தருமத்திற்கு அவரவர் வீட்டு வாசலில் விளக்கு வைத்திருந்தால் உண்டு; இல்லையென்ருல் நிலாக் காலம் தவிர்த்து எங்கும் இருள் தன் கரிய போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டுவிடும். கோவிலின் சுற்றுத் தெருவில் இன்னும் அந்தத் ‘தொழிலாளிகள்’ இருக்கத்தான் செய்தார்கள். மல்லிகைப்பூக்களின் நெடியும், இளம் பெண்களின் குரலொலியும் கேட்டுக்கொண்டுதான் இருந்தன. ஒரு சிலர் வண்டிகளில் திரையிட்டும் இடாமலும், ஜோடி ஜோடி

யாகவோ, ஜோடிக்காகவோ, மைனர்களும் செல்வந்தர்களும் போவதைப் பார்த்தார்.

பாவம்! உலகம் இன்று புலனுகிற அவரது ஞானக் கண்ணின் பார்வை வேறு. அந்தக் காலக்தில் தெரிந்த போகக்கண் பார்வையும் வேறு. மலக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்! காறி உமிழ்ந்து விட்டு, பூங்குழல் மாடத்தெரு வீதியில் தூசி காலில் படாமல் நடந்து கொண்டிருந்தார். ஏங்கித் தவிக்கும் உதடுகள், பணம் விரும்பும் தளிர்க் கரங்கள், மோகக் கனல் தெரிக்கும் கமலக் கண்கள் .... அவருக்கு விளம்பரம் செய்து நின்றன.

ஆனுல், அவர் அத்தெருக்களிலிருந்து விலகிச் செல்ல நினைத்தும், அவருடைய விட்டகுறை தொட்டகுறை அவரை விடவில்லை. அந்தக் கருக்கிருட்டில் நகரத்தின் சந்தடிகளையும், அங்காடிக் கடைகளையும் தாண்டிச் செல்லும் போது சின்னஞ்சிறிய வீட்டிற்குள் கவலையே உருவாக, வயதான பெண்–கிட்டத்தட்ட கிழவி, அப்படியும் பூவுக்கும் பொட்டுக்கும் குறைச்சல் இல்லை—வாயிற்படியில் சோர்வாக உட்கார்ந்திருந்தாள். ஜமீன்தாருக்கு எங்கோபார்த்த முகம். பார்த்த இடங்களிளெல்லாம்... அவர் என்றென்றே பார்த்த பெண் முகங்கள்; வர்ணித்த கரங்கள்; இப்படியே தோற்றம் தந்தன. அவளும் தனக்கு அந்தக் காலத்தில் தெரிந்த புள்ளியோ என்னவோ...செல்பவரை, இறையைப் பிடிக்க வரும் பாம்பு போல, அவள் ஓடி வந்து கரம் பற்றிணுள்.

"சீ...சீ...விடு...விடு...!"

"என்ன ஜமீன்தாரய்யா. நானு யாரு. சுப்பம்மை இல்லே. அந்தக் காலத்தை மறந்து விட்டீர்களா?"

அந்தக் காலத்தில் சுப்பம்மா அவருடைய அன்புப் பாத்திரங்களில் ஒன்று!

"நீ யாரம்மா?" என்று தட்டிக் கழிக்க முயன்றுலும் மனத்துள்ளே அவள் ஜவ்வாது பொட்டகலம் இடம் பெற்றது. ஜவ்வாதுப் பிரியை சுப்பம்மா.

"என்னைத் தெரியலே? உங்கள் ஜவ்வாது சுப்பம்மை" என்ற அவள் பிடி விரியம் பாம்பு போலச் சுற்றியது.

"அது எங்க தாத்தாவாக இருக்கும். நானில்லை, என்னைப் போக விடு" என்று இருளில் சிரித்தார் ஜமீன்தார். அதுவரை வைராக்கியமாக இருந்த அந்தக் கிழவரின் மனசில் இளமையின்

லாகிரி துள்ளிற்று. பழைய எண்ணங்கள் ; சபலங்கள்; கூடைக் குள்ளிருந்து எழும் சர்ப்பங்கள் போலத் தலைத் தூக்கின. வய தான சுப்பம்மை, பழை நினைப்பைச் சொல்லி வீசிய வலையைச் சும்மா விடவில்லை.

அவள் எதிர் பார்த்தது ஒரு ரூபாய்தான்! ரூபாய் அகலம் ஜவ்வாது அரகஜா வைத்த பிறை நெற்றி விரும்பிய காசு பதினாறு அணுக்கள்!

"வாங்களேன், சும்மா வெற்றிலை பாக்குப் போடறது;" என்றாள் பழங்காலத்து அழகி சுப்பம்மா.

பாம்பென்று மிதிக்கவும் முடியவில்லை; பழுதையென்று தள்ளவும் முடியாத தர்ம சங்கடம் ஜமீன்தாருக்கு. சுப்பம்மை யின் தளர்ந்த முகத்தில் குறிகள் ஒன்றும் அந்த இருட்டிலே புலனாகவில்லை. மந்திரத்தில் கட்டுண்டவர் போல அவள் வீட் டிற்குள் அவளைப் பின் தொடர்ந்தார். அறிவு, நியாயம், தர்மம் என்ற உணர்ச்சிகளை இருள் அரக்கன் தன் போர்வைக்குள் ஐக்கியப்படுத்தி விட்டான். ஜமீன்தார் சாம்பசிவம் சுப்பம்மை யின் குச்சு வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்ததும், அங்கே திரைக்குப் பின்னால்?...

பிஞ்சிலே பழுத்த கனியொன்று, முகம் வெளுத்து அந்தச் சோகையை மறைக்கப் பவுடர் பூசிக் கண்ணுக்கு மையிட்டு திரள மிரளாக நின்றது. அசட்டுச் சிரிப்பைச் சிரித்தது.

"என்ன சுப்பம்மா? உனக்கு வளர்ப்புப் பெண் வேறே உண்டா?"

"நம்ம காலம் மலையேறிப் போச்சு!"

"நீ தாய்க் கிழவி?" அவர் குரலில் என்றும் காய கல்பம் சாப்பிட்ட குமரியாக இருக்க வேண்டியவள் கிழவியாகி விட் டாளே என்ற ஏக்கம்!

"குமரியாக எப்போதும் இருக்க முடியுமா பெண்ணாலே...? ஆண்பிள்ளை என்றைக்கும் ஆண்பிள்ளைதான். நீங்கள் சிங்கம்" என்று சுப்பம்மாள் விளையாட்டாக, ஜமீன்தார் முதுகில் தட்டி னாள். அப்படித் தட்டும்போது பையிலே உள்ள, பணத்தின் கனம் அவள் கவனத்தைக் கவர்ந்தது. ஆனால் அவர் கவனத்தை, திரைமறைவில் கருத்த கூந்தலில் சிரித்து நின்ற மல்லிகை கவர்ந்தது. பட்டுக் குங்குமம்; வளையம் வளையமான தலைரோமச் சுருள்கள்; உடலோடு ஒட்டியிருந்த புள்ளிப் புடவை ரவிக்கை

கள், ரோஜா மொட்டுப்போலத் திறந்திருந்த பல் இதழ்வரிசை, மேகத்திற்கு அப்பால் பதுங்கிநின்று காட்சிதரும் வெண்ணிலவு, திரைமறைவில் நின்ற புது அழகு எல்லாம் சேர்ந்து அவரை மயக்கின. அவர் மயங்கி வீட்டுக்குள் போனார்.

சுப்பம்மை "இருங்கள்! முன்னாளில் ஆயிரம் இரண்டாயிரம் கொடுத்து என்னைக் காப்பாற்றியது கூடப் பெரிதல்ல. இப்போது ஒரு வாரமாகச் சாப்பாட்டுக்கு வழியில்லை. நீங்கள் மனசு வைத்தால்தான் எனக்கும் இந்தப் பெண்ணுக்கும் சாப்பாட்டுக்கு வழி, இனி நீங்கள் எங்களை ஆயுள் முழுதும் காப்பாற்றவேண்டும்!" என்றாள். உண்மையும் அதுவே. தர்க்க ரீதியான எண்ணக் கலவைகள் எழுந்தன. ஜமீன்தார் யோசித்தார். மோதிரத்தை விற்று வாங்கிய 100 ரூபாய் பணம் ஜெமீன் வீட்டுச் செலவுக்கு வேண்டும். வீட்டுக்குப் போனதும் அழகம்மா கேட்பாள்.

"வேண்டாம். நான் போய்விடுகிறேன்."

"நான் அழகாக இல்லை; உங்களைப் போன்ற ரசிகர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய நிலை என்னிடம் இல்லை. சின்னப் பையன்கள் கிழவிகளிடம் ஏமாறுவார்கள். சின்னப் பெண்களிடம் நீங்கள் ஏமாறுவீர்கள்!"

அவள், திரையை விலக்கினாள். ஒல்கி ஒசிந்து நின்ற இளம் பெண்ணின் தேககாந்தி, அவர் மனதைக் கவர்ந்தன. அந்த இளம் பெண்ணை வாழ்வு முழுதும் வைத்துக் காப்பாற்றினால் என்ன? அவர் மனம் பால்ய தசையில் இறங்கிற்று.

விலகியதிரை மீண்டும் யதாஸ்தானத்தை அடைந்தது.

அந்த வீதி; மணங்களின் சம்மேளன நெடி; பழைய நினைவு உறவு; அந்த வேளையில் அவர் ஆண்; திரைக்குள்ளே இளம் பெண்; வாழ்வு முழுதும் ஒருவன் காலடி நிழலில் நிம்மதியாக வாழக் காத்துக்கிடப்பவள்......

* * *

அதே தினம் மாலை வேளையில் புலவர் மருமகன் சந்திரனும் ஜமீன்தார் மகள் ரோகிணியும், இறவைத் தோட்டத்தில் சந்தித்ததைத் தெய்வச் செயல் என்றோ, விதியின் கூற்று என்றோ எப்படியாவது சொல்லிக் கொள்ளலாம். அங்கே அவர்கள் சந்திக்கவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. புலவர் சிகாமணி பாவலர் செந்திருக் குமார், மாலை நேரங்களில் வந்து பாடங்கள் சொல்லிவைத்தார்.

ஒருநாள் ரோகிணி, "ஆசிரியரவர்களே, கம்பராமாயணமும் மகா பாரதமும் எதற்கு? உங்களிடம் 'கூளப்ப நாய்க்கன் காதல்' இருக்கிறதா" என்று கேட்டாள். பாவலர் ஒரு கணம் திரு திருவெனத் திகைத்து, "அம்மா, தமிழில் காதல் பிரபந்தங்கள் பல உள. அதிலே 'விரலி விடு தூது.' 'கூளப்ப நாயக்கன் காதல்.' இரண்டும் உன் போன்றவர்கள் படிக்கக் கூடாத புஸ்தகங்கள். உயர்ந்த கருத்துக்கள் நிறைந்த, நன் மார்க்க நெறியுள்ள நூல்களையே படித்தல் வேண்டும்" என்று சமாதானம் சொன்னார்.

"என் அப்பாவின் படுக்கையில், இந்த இரு நூல்கள் தான் இருந்தன. நேற்று அவைகளைப்படித்தேன். எனக்கு எளிதாகப் புரியக்கூடிய அளவு ரொம்பவும் சரளமாக இருந்தன. எனக்குத் தனியாக அந்த நூல்கள் இருந்தால் நலம்!"

"தந்தையார் கோபத்திற்கு ஆளாக வேண்டும். அம்மா, திருக்குறள் கொண்டு தந்தேனே?"

"திருக்குறளில் காதற் சுவை நிறைய இருக்கிறது. நூல்கள், வயசின் தரத்திற்கும் அனுபவத்திற்கும் தகுந்த மாதிரியே ரஸமாகப்படும்."

மாணவியின் பண்பாட்டை அறிந்த பாவலர் அன்றைய வகுப்பை அதற்குமேல் நடத்த விரும்பாமல் போய்விட்டார். அவருக்குக் கவலை,... தோட்டத்தில் நின்ற பட்ட மரத்தை வெட்டிச் சிறிது சிறிதாகப் பிளந்து, வீட்டிற்குச் சரிவர அனுப்புகிறார்களோ என்ற தயக்கத்தில் மேற்பார்வையிடப் புறப்பட்டார். மரத்தை வெட்டிக் கொண்டிருந்தவன், அடி மரத்தைத் தரையொட்ட வெட்டவில்லை. 'அடி முடிச்சு, கஷ்டம்' என்றான். பாவலருக்குச் செய்யுள்களில், சந்திகளை உடைத்தெறிந்து பழக்கமே தவிர, மரத்தின் முண்டு முடிச்சுக்களை வெட்டிப் பழக்கமில்லை. தன்னைக் கூலியாள் ஏமாற்றுவதாக நினைத்து,"கொண்டா நான் வெட்டிக்காண்பிக்கிறேன்!" என்று கோடாரியை வாங்கினார்.

அவர் மரத்தை வெட்டிக் காண்பிக்காமல் காலை ஒட்டிக் கோடாரியைப் போட்டுக் கொள்ளவே நடக்க முடியாத நிலையேற்பட்டது. பாவலர் செந்திருக்குமார், தமது காலில் பட்ட காயத்தின் கஷ்டம் தீர இன்னும் இருபது தினங்கள் வரை பிடிக்குமென்ற சேதியை மூன்றாம் மனுஷன் மூலம் தெரிவித்தும் தமது மருமகனும் மாணாக்கனுமான சந்திரனை ஜமீந்தார் அனுமதித்தால் அவரது மகளுக்குப் பாடம் சொல்லித்தர தாம்

அனுப்பச் சித்தமாக இருப்பதாகவும் தெரிவிக்கவே, ஜமீந்தாரும் ஒப்புக் கொண்டார் - அவரது விதி ஒப்புக் கொள்ள வைத்தது !

இந்தப் படு காயத்தின் விளைவினுல் - பாவலரின் மருமகன் சந்திரன் ரோகிணிக்குப் பாடஞ் சொல்லி வைக்க வந்துபோக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஜமீந்தார் சாம்பசிவம் இருக்கிற போதும் இல்லாத போதும் சந்திரன் ஆசிரியனுக 'அந்தப் பாழடைந்த பங்களாவிற்குள் நுழையும் போது' அவன் மனம்? ... ... ... ?

என்ருே ஒரு காலத்தில் பில்ஹணன் - யாமினிக்குப் பாடம் சொல்லப் போன காவிய காலம் மனசிலே எழும் !

சோழ நாட்டின் தனிப் பெரும் செல்வி அரசிளங் குமாரி அமராவதிக்குப் பாடமும் காதலும் சொல்லித்தர, கம்பர் மகன் அம்பிகாபதி சோழ மன்னர் அரண்மனைக்குள் செல்லும்போது அடைந்த பெருமையை விடப் பன்மடங்காக உணர்ந்தான் சந்திரன். தனக்கும் அப்பேர்ப்பட்ட உறவும் ... ... ... ஆனுல் பயங்கர முடிவும் நேருமோ என்ற உள்ளூர திகில் பிறக்கும்.

ஆனுல் இந்த அரண்மனையில் ரோகிணியும் சந்திரனும் அன்னியர்களாகச் சந்தித்தனர். சில தினங்களுக்கு முன்னர் பாழடைந்த அந்தக் கட்டிடத்தின் பழம் பெருமைகளைக் கற்பனை செய்தான் சந்திரன். "ஆகா, மேலே ஒரு மாடி இருந்து அதில் நின்று தன் வரவை ரோகிணி எதிர் பார்த்தால்?" அவள் அப்படி எதிர்பார்க்கவில்லை. இருந்த அறைகளில் கூடுமான வரை சுத்தமாக இருந்த அறையொன்றில் அவர்கள் கல்வி கற்றனர். அடிக்கடி ஆசிரியர் மாணவியின் கீழ்க் கண்ட சம்பாஷணையை ஜமீன்தார் கேட்பார். முதல் நாள் சந்தித்த போது ரோகிணி நடந்து கொண்ட விதம் ... ... ?

"அப்படி உட்காருங்கள் !"

சந்திரன் வியர்த்த உடலோடு நடுங்கியபடியே அமர்ந்தான்.

"உங்கள் பெயர் ?"

"சந்திரன்"

"பாவலருக்கு நீங்கள் என்ன உறவு ?"

"மருமகன்"

"எத்தனை நாளில் பாவலர் பாடம் சொல்ல வருவார் ?"

"இருபது நாள் பிடிக்கலாம்"

அவன் கடைக் கண்ணுல் பார்த்தான். ராஜ்ய பாரம் செய்யும் ராணி கூண்டில் நிற்கும் கைதியை அலக்ஷியமாகப் பார்ப்பது போல அவள் பார்த்தாள். மெல்லிய தந்தக் குச்சி போன்ற விரல்கள்; தந்தப் பதுமையான உடல்; மிரட்சியும் கவர்ச்சியும் நிறைந்து கதை சொல்லத் துடிக்கும் காவியக் கண்கள்.

"சரி, பாடம் சொல்லித் தொலையுங்கள்!" என்ருள் ரோகிணி. மீண்டும் சந்திரன் திடுக்கிட்டான். சில தினங்களுக்கு முன் தன்னை அன்பொழுகச் சந்தித்த அதே பெண், இன்று அதிகாரம் செய்யும் காரணம் என்ன? தந்தைக்குத் தெரியக் கூடாது என்ற நடிப்பா?

"ஏன், என் மீது வெறுப்பு?"

"காரணம் சொல்ல வேண்டியதில்லை!"

சந்திரன் புண்பட்ட மனசோடு பாடம் ஆரம்பித்தான். எப்படியாவது வாக்குச் சாதுர்யத்தால் அவள் மனசைக் கவர எண்ணினுன். அந்த எண்ணம், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் நிறைவேறியது.

வர வர, அவன் வரவும், குரலும் அவளுக்கு எங்கோ மிதக்க எடுத்துச்செல்வது போன்ற பிரமையைத் தந்தன பாடம் சொல்லிவைக்க வரும் அந்தப் பொழுதை ஆவலோடு விரும்பினுள். ஆனுல் சந்திரன், தன் வித்வத் திறமையைக் காட்ட ஆரம்பித்தான்.

மகளுடைய பரம்பரையான காம்பீர்யக் குரலையும், பம்மிப் பதுங்கி ஏழ்மையைப் பறையடிக்கும் ஆசானின் குரலையும் கண்டு ஜமீந்தார் சிரித்துக் கொள்வார்.

ஒரு வார காலமாகப் பாவலர் முன்பு சொல்லிய அதே இலக்கண விளக்கங்களையும் மிகக் கடுமையான நூல்களையுமே சந்திரன் பாடம் சொல்லிக் கொடுத்தான். ரோகிணிக்கு முதல் நாளே ஒற்றைத் தலைவலி; மறுநாள் இரட்டைத் தலைவலியாகப் பிடித்துக் கொண்டது. தமிழ் மீது அவளுக்கு ஆங்காரம் பிறந்தது. சந்திரன் மீது அடங்காத வெறுப்பு ஏற்பட்டது. 'தொல்காப்பிய'மும் 'இலக்கண விளக்க'மும் சொன்னுல் அவளுக்குத் தலை சுற்ருதா? பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ரோகிணி, "தயவுசெய்து பதவுரை, பொழிப்புரை, இலக்கண விளக்கங்கள் சொல்லாமல், நயத்தை மட்டும் விளக்கம் செய்யுங்கள். தமிழ்

என்ருல் தலைவலி என்று உணர்த்த வேண்டாம்'' என அவள் அதிகாரத்தோடு ஆக்ஞையிடவே பயந்து போனுன். அந்த அறைச் சுவர்களிலே செல்லரித்துப்போன காட்டெருமைக் கொம்புகளும், மான் கொம்புகளும் ஒரு மூலையில் ஒரு பழைய துப்பாக்கியும் தெரிந்தன. துப்பாக்கியைக் கண்டதும், ஜமீந் தாரின் வலிமை எப்படி இருக்குமென்ற கற்பனை ஓடியது சந்திரனுக்கு.

"ரோகிணி அம்மையாரே, தங்களுக்குத் துப்பாக்கி சுடத் தெரியுமா?''

"தெரியாது, நாளையே தெரிந்து கொண்டால் போச்சு. ஏன்?''

"ரஸமாகச் சொல்லிக் கொடுக்கத் தெரியவில்லையென்று, சுட்டுத் தள்ளிவிடக் கூடாதல்லவா?''

"பெண்களுக்குத் துப்பாக்கியும், பீரங்கியும் தேவையில்லை. கண்கள் போதாதா?''

கண்கள்! சிறிய வார்த்தை. கடலினும் பெரிய புதை பொருள்கள் அடக்கிய ஆழ்கடல் அல்லவா கண்கள்? ரோகிணி யின் முகத்தில் எதற்கோ ஏங்கிச் சுற்றும் கருவண்டுகளைக் கண்டான். சிரிப்பு வந்தது.

"கண்களால் சுட்டெரிக்க முடியும் என்பதை வள்ளுவர், 'பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன் பெண் தகையற் பேரமர்க் கட்டு' என்று சொல்லுகிருரே, உங்களுக்கு தெரியாதா? கண் தானே எமன் என்கிருர் வள்ளுவர்!'' என்ருள் ரோகிணி

"'எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு' என்று அதே வள்ளுவர் சொல்லியிருக்கிருர்!'' என்ருன் சந்திரன்.

ரோகிணி முகம் சிவந்தது. தனது கண்களைப் பலஹீன மானது என்று சொல்லுகிறதா? 'எமனை எங்கே கண்டாய்?' என்ருல், 'உன் கண்களில்தான்' என்பதாகச் சொல்வதை விட்டுத் தனது யௌவன ஆசிரியர்—சந்திரன் மறுப்பதா?

"போதும், போதும். எழுந்து போகலாம்!''

திடுக்கிட்டான் சந்திரன். தன் பேச்சில் குற்றமிருப்பதை உணர்ந்து, "ஜமீன்தாரிணி, மன்னிக்கவும். தவருயின்'' என

அவன் முடிக்குமுன் அவள், "நான் குருடியல்ல. என் கண்களின் சக்தியை நம்புவீர்கள்" என்ருள். மள மளவென அவள் நீர் மல்கும் கண்களுடன் அவனைப் பார்த்து "போங்கள். நாளை முதல் இந்த 'அரண்மனை'யில் நுழையக் கூடாது" என்ருள்.

பங்களாவில் சாம்பசிவப் பாண்டியரும் இல்லை. அடகுக் கடையைத் தேடிக் கொண்டு போய்விட்டார். அழகம்மா ஏதோ சாமான்கள் வாங்க ஊருக்குள் போயிருந்த வேளை. வீட்டில் நடைபெற்ற இந்த இளம் ஆசிரியர் மாணவியின் வாக்குவாதம், சுவர்களுக்குத்தான் வெளிச்சம்! ரோகிணியின் மனப் போக்கும், மன உளைச்சலும் குறையட்டும், உடனே பேச வேண்டாமென்ற நினைப்போடு அங்கிருந்து சந்திரன் நகர்ந்தான். பெண் புலி, தனது இறையை நகர்ந்து போகும்படி விட்டு விட்டு, அலக்ஷிய மாகப் பதுங்குவது போல ஜன்னலுக்குள் தலையை இழுத்துக் கொண்டாள் ரோகிணி.

அவர்கள் நட்பு — அதாவது காதல், சண்டையில் ஆரம் பித்தது!

* * *

மஞ்சொக்கும் அளக ஓதி மழை ஒக்கும் வடித்த கூந்தல்
பஞ்சொக்கும் அடிகள் செய்ய பவளத்தின் விரல்கள் ஐய
அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவள் வதனம் மைதீர்
கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்.

அடுத்த தோட்டத்திலிருந்து அடிபட்ட பறவையின் ஏக்க ஒலி போலக் கம்பரின் பாடல் மிதந்து வந்தது. மேற்கே வானத் தில் யுத்த அணிவகுப்புப் போலப் படை படையான மேகங்கள் அந்திச் சூரியன் முன் அணிவகுத்தன. மந்த மாருதம்; அடுத்த தோட்டத்தின் பயிர்ப் பச்சைகளின் சுகந்தம், எங்கோ ஒரு குயிலின் குரலோடு இன்னொரு குரல் பிணைந்தது. தூரத்தே தெரிந்த, தப்பி முளைத்துத் தலை நீட்டிய மாதுளைப் பூக்களிலே கிரணங்கள் பட்டுப் பளபளவென மின்னின.

அந்த வேளையில்,

கோல முக மதிலே — கொச்சிமஞ்சள்
குமு கு மென உடம்பு கமகமென
நீலமலர் விழியாள் — என் மனதை
நெருப்புக்குள் நெய்யென வுருக்கினுள்

என்ற தெம்மாங்கு ரோகிணியாள் காதிலே விழ விழ, "ஐய்யோ ஒரு பாவமும் அறியாத அவரை ஏன் நான் கோபிக்க வேண்டும்? அப்பாவுக்குள்ள பரம்பரைக் கர்வம் எனக்கும் வந்து விட்டது!" என்ற மனத் தளர்ச்சியில் மன்னிப்புக் கோரப்புறப்பட்டாள். பாழடைந்த அந்த பங்களாவை விட்டுக் காலெடுத்து வைத்த போது ... ....

வெளி உலகம்! "வீட்டுக்குள் இன்பமில்லை; வெளியே தான் இன்பம். வா பெண்ணே" என்று அழைத்தது அந்தி வெயில். கூண்டுக்கிளி சுதந்திரமாகப் பறப்பது போலப்பறந்தாள். அவளுக்கு விடுதலை. அவளுக்கு அக்கம் பக்கம் யாரும் இல்லை. விரைவாக நடந்தாள். அவளைத் தடுக்கவோ பார்க்கவோ, யாரும் இல்லை. கூட்டுக்கு வெளியே சிறகடித்து வான வீதி யெங்கும் பறந்து வட்டமிட எண்ணங்கொண்ட இளம் பறவை போல மனம் அலை பாய்ந்தது.

அதே தென்னேலைத் தடுக்கில், சோக நாடகம் நடத்தும் அந்தி வெயிலைப் பார்த்தபடியே, புலவர் மருமகன் சந்திரன் ஏதோ முனங்கிக் கொண்டிருந்தான். முகத்திலும் குரலிலும் சோகம், அவமானம் இச்சின்னங்களை அரைத்து அப்பின மாதிரி சந்திரன் முகம் அவள் கண்களில் பட்டது. காதலை வெளிப்படையாகச் சொல்லாத அந்த இளைஞன் மனசைப் புண்படுத்தியதற்கு வருந்தினுள்.

ரோகிணி, "மன்னிக்கவும்" என்று வாய்விட்டுச் செவ்விளநீர் மரத்தின் பின்புறம் வந்து நின்று சொன்னுள். அவனது சோர்ந்த இதயத்தில் அக் குரல் இடம் பெறவில்லை. பெருமூச்சும் அழுகைக் குரலும், விசுப்பும் கேட்கவே, திடுக்கிட்டு எழுந்தான். சோகப் பெருமூச்சில் அவன் தசைநார்கள் அகண்ட மார்புகள் துடித்தன.

அப்படியே புலி, ஆட்டுக்குட்டியைக் கவ்வி முதுகில் தூக்கிக்கொள்வதை போலத் தூக்க நினைத்தான். அடுத்த கணம், உடம்பின் கட்டுகள் வெல வெலக்கும். காலடியில் வீழ்ந்து கண்ணீர் விட்டுக் கெஞ்சும் குரலில் "பெண்ணே. என்னை மறந்து விடு ..." என்று சொல்லத் துடிக்கும் உதடு.

குழப்பம், சிக்கல் நிறைந்த எண்ணச் சங்கலி. உள்ளும் புறமும் சிந்தனைப் போர். வலிமை வாய்ந்த தேகத்தில் உபாதைக்கும், மெல்லிய உள்ளத்திற்கும் போர். மறு கணம் கண்ணை மூடிக் கொண்டான், அவளுடைய ஆசை ததும்பும் கண்களைப்பார்க்கச் சக்தியற்று.

அவள், மெல்ல நகர்ந்தாள் - கண் மூடியிருந்தும் செவியி ஞல் காலடி ஓசையை அவன் உணர்ந்தான். இருவரும் பேச வில்லை. கண்கள் சந்தித்தன. நாணித் தலை கவிழ்ந்தனர். மீண்டும் நயனக் கலப்பு. அவள், சந்திரனின் கண்களிலே புதிய தோற்றத்தையும் ஆசையையும் கண்டாள். ஆகையால் மறுகணம் முகம் குப்பெனச் சிவந்தது. மலரும் புஷ்பத்தின் தேனைப்பருக வந்த வண்டுபோலக் கண்கள் சுழன்றன. அந்த மலர்ச்சி, சுகந்தம், இப்போது தான் அறிய முடிந்தது! அவளுடைய ரத்த நாளங் கள், புஷ்பத்தின் இதழ்களை ஸ்பர்சம் செய்யும், தேனினும் இனிய அந்த இன்பமான வண்டுச் சிறகின் உஷ்ணத்தை அவளால் உணர முடிந்தது. சுற்றுப் புறம் இயற்கையின் பிரமே கீதம் பாடும் வண்டுகள்; அசைந்தோடும் ஓடையின் குமிழிகள்; தெளிக்கும் கல கலப்பு; இன்பத்தின் அறை கூவல். ... ... அவளும் அவனும் அருகருகே.

அங்கே அந்த மன்மத பூமியில் அவன் ஆண் மகன்; அவள் இளம் பெண்!

மனித ஜன்மத்திற்கு வாய்க்கின்ற தெய்வீகப் பொழுது, வாழப் பிறந்ததின் உச்ச நிலை, இன்ப வாழ்வில் முன்னேட்டம், அந்த விநாடியில் வெறுப்புற்று விருப்புச் சொல்லிவிட்டால், அவன் யாரோ அவள் யாரோ? இருவர் வாழ்வும் இரு துரு வங்கள் ஆகும் ... ... ஆனல்? ... ...

அவன் முந்திக் கொண்டான். நெருங்கி வந்தான். இத யங்கள் ஆசை வெள்ளத்தில் பிணைந்தன. வாய்ச் சொற்கள் எழ வில்லை. அவளும் பேச முடியாமல் நாணத்தினுல் விடுப் பட்டு ஓட முடியாமல் சிலையாகச் சமைந்தாள். அவள் கண் களில், குரோதமல்ல, அன்பு தவழ்ந்ததைச் சந்திரன் கண்டான். குவிந்து பாதி மூடிய கண்களோடு ஆனந்தத்தையும் அன்பு வெள்ளத்தையும் மயக்கம் தரும் தலைக் கிறக்கத்தையும் அறிந் தான். அவர்கள் நின்ற இடம்? ... ...

பழைய இறவைக் கிணறு அல்ல; வெளி உலகம். வேறு இடையாது; அக்கம் பக்கமுள்ள முட் செடிகளை எல்லாம் மறந்து சொர்க்க பூமி வந்தது. வானத்துச் சூரியனும், வர்ண நிலாச் சந்திரனும் மறைந்து விட்டனர். அவன், அவள், ஆணும் பெண்ணும். தங்களைத் தவிர அவர்களுக்கு வேறு எதுவும் தெரியவில்லை!

இதயத் துடிப்பின் வேகத்தை, காதலின் கொந்தளிப்பை இருவரும் இதயம் மாறி அறிந்தனர். சிரிப்பு, வெட்கம் இரு

வேறு உலகமுள்ளவர்கள். வித்தியாச மனப்பண்பு எல்லாம் மறந்து ஒற்றுமை கண்டார்கள்.

விக்கல்களிடையே, "இதுதான், புலவர்களும் வேதாந்தி களும் போற்றும் சொர்க்கம்..." என்றான் சந்திரன்.

பிறகு "காதல்...!" என்று முடித்தான்.

"உங்களை நான்..." என்று அவள் குழறினாள் ஆசை மயக்கத்தோடு.

"நான் உன்னை உங்களை.... இல்லை... தாங்களே தெய்வம்" என்று அவனும் குழறினான் அதே ஆசை மயக்கத்தோடு.

"தெய்வத்தின் மறு பெயர் காதல்!" ரோகிணி உடல் புளகாங்கிதமடைய விடுபட்டு எழுந்து சிரித்தாள்.

"ஏன் இந்த மன மாற்றம்?" என்றான் சந்திரன்.

"மனம் மாறுவதற்காகத்தான் இருக்கிறது. பச்சைக் களி மண் போல! சுட்ட களிமண் அல்ல மனம்! மனம் மாற வேண்டும். என்னை மன்னியுங்கள்."

"ஆகா, பெரிய ரஸிகை!"

தன்னை வைததும் அவமானம் செய்ததும் பறந்தோடி விட் டன. அவன் கனவுலகினில் நீந்திக் கொண்டிருந்தான்.

"ஏன் என்னைக் காதலித்தீர்கள்?" என்று கேட்டாள் ரோகிணி.

"அதுதான் நான் உனக்குக் கொடுக்ககூடிய தண்டனை. அதைத் தவிர்த்துத் தண்டிக்க வேறு வழியில்லை."

அந்த வேளையில் அரண்மனைப் பங்களா காம்பவுண்டுச் சுவர்ப் பக்கமிருந்து அழகம்மாளின் குரல் நாலா திசையும் விரவிச் சென்றன.

"ஏ... ரோகிணியம்மா... ரோகிணியம்மா."

"அழகம்மா தேடுகிறாள்... போகிறேன்."

அவள் திரும்பினாள், போக. விளையாட்டாகச் சந்திரன் கையிலிருந்து தன் பின்னல் சருளைப் பறித்துக்கொண்டு ஓட யத்தனம் செய்தாள்.

"வேண்டாம்! போகாதே" என்றான் சந்திரன்.

"நம்மிருவரையும் இந்த இடத்தில் சுப்பம்மா பார்த்து, என் கோபக்கார அப்பாவிடம் சொன்னால்......? என்னைப் போக விடுங்கள்!"

"நாளை ஜமீந்தாரைச் சந்திக்கிறேன்!"

"அவர்கள், திருநெல்வேலி போய் இரு தினங்கள் ஆகி விட்டன......ஆனால் அவர் ரொம்ப ரொம்பப் பொல்லாதவர்" என்று பதறினாள் ரோகிணி.

அவளுடைய கண்களின் குறிப்பறிந்து, "ரோகிணி, உன் தந்தைக்குப் பயந்தவன் நானல்ல! இளம்புலிநான்! கிழபுலி தான் அவர்!" என்றான்.

"எனக்கே நீங்கள் பயப்படவில்லையே" என்று அவள் குறும்பாகச் சிரித்து, சந்திரன் கையை எடுத்துத்தன் கண்ணிலே ஒற்றிக்கொண்டு வெடுக்கென ஓடிவிட்டாள்.

* * *

அழகம்மா கோபித்துக் கொண்டாள். ரோகிணி எங்கே போனாள்; ஏன் போனாள் என்று தொளைத்துத் தொளைத்துக் கேட்டாள். ஜமீன்தாரின் கௌரவம் தலை குப்புறக் கவிழ்ந்து விட்டதாக நினைப்பு. யாராவது அந்தப் பங்களாவைத் தாண்டி ரோகிணி போவதைப் பார்த்திருந்தால் என்னாகும்? பூமி இரண்டாகப் பிளந்து கட்டிடத்துடன் ரோகிணியை விழுங்கி விடும் என்று எண்ணமிட்டாள்.

"தனியாக அங்கே போகலாமா?"

"ஒரு பட்டுப் பூச்சி...அழகாக இருந்தது. பிடிக்கப் போனேன். பறந்து பறந்து அடுத்த தோட்டத்திற்குள் போய்விட்டது. அந்த ஆசையில் பின் தொடர்ந்தேன்."

காதல் நோய்கொண்டால் புளுகு மூட்டைகளையும் கற்பனை என்று - மெழுகலாம், ஆனால் இயற்கையாகி விடுமா? ரோகிணியின் வேல்விழி சரியாக இல்லை. அதில் ஏக்கத்தின் மிதப்பு இருந்தது. அவள் தகப்பனாரும் இன்னும் வந்தபாடாக இல்லை. எங்கிருந்து வருவார்? அவர்தான், ஜவ்வாது சுப்பம்மாவின் வலையில் சிக்கி இருக்கிறாரே!

மாலை மயக்கம் போய் இருள் சூழ ஆரம்பிக்கவே ரோகிணிக்கு, என்றுமில்லாத தாபம் தகித்தது, ஓடியே போய்ப்

பாவலர் மருமகன் சந்திரன் வீட்டிற்குள் புகுந்தால் என்ன? சை, உலகம் என்ன சொல்லும்? ஆனல் அடுத்த விநாடி மண்ணுகப் போன உலகத்தில் எது நித்தியம்? காலையில் சந்திரன் வருவதாக வாக்களித்த விபரம் ஞாபகம் வரவே, குத்து விளக்கின் முன்னுல் அமர்ந்தாள். வீட்டிற்குள் வெளிச்சம். மனசிற்குள் இருள். படிப்பிலும், சாப்பாட்டிலும் பிடிப்புச் செல்லவில்லை. செல்வத்தைப் பறி கொடுத்த லோபி போல இருந்தாள் ரோகிணி.

"அழகம்மா எனக்கு ஒரு கதை சொல்லேன்" என்று ரோகிணி அழகம்மாளிடம் கொஞ்சினுள்.

"கதையா?" என்று அடுக்களை வேலைகளை முடித்து விட்டு நிலா முற்றத்தில் வந்து உட்கார்ந்தாள் மாஜி ஒய்யாரி அழகம்மா. நிலா – கிருஷ்ண பட்சத்து நிலவு, மெதுவாகக் கரு மேகத்துக்குள்ளிருந்து எட்டிப் பார்த்து பவள மல்லிகைச் செடியின் அடியில், மான் புள்ளிபோல நிலவொளியில் பூக்கள் தெரிந்தன. வாடைக் காற்றின் குதூகல அசைப்பிலே மரங்கள் ஆடின. மங்கிய நிலவொளி மனச் சந்துஷ்ட்டிக்கு ஏங்கும் வகையில் காய்ந்தது.

"என்ன கதை சொல்ல? வளர்ந்த கதையா? பிறந்த கதையா?" என்ருள் அழகம்மா.

"நீ கூட. ஒரு காலத்தில் காதலித்திருப்பாய்......" என்று குசாலாக வம்புக்கு இழுத்தாள் ரோகிணி.

"ஏன் ரோகிணி நீ இந்த மாதிரிப் பேச ஆரம்பித்து விட்டாய்?"

கெஞ்சுதலாக, அழகம்மாளின் மடியிலே ரோகிணி படுத்துக் கொண்டு, "சொல்லுவாயா மாட்டாயா?" என்று பிகு செய்தாள். மேகத்திலிருந்த நிலா—விடுபட்ட நிலா, அவள் முகத்தில் பட்டது. அழகம்மா ரோகிணியின் மூக்கைக் கிள்ளி விட்டுச் சிரித்துக்கொண்டாள்.

"என்ன அழகம்மா சிரிக்கிருய்?"

"இப்படித்தான், நானும் இவரும் காதலித்தோம். நான் ஒய்யாரமாகப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தேன். அந்த நினைப்பு...அப்பப்பா இப்போது நினைத்தாலும் எலும்பைக் கூடச் சிலிர்க்க வைக்கிறது..." என்று அழகம்மா பழைய காலச் சுகந்த நினைவில் சஞ்சரித்தாள்.

" அவர் என்றால் யார் அழகம்மா ? யார் உன்னை அந்தக் காலத்தில் காதலித்தார்கள் ?"

" நேரமாகிவிட்டது...நாளை சொல்லுகிறேன். அந்த நாளில் எனக்குக் கல்யாணமானதும் என் புருஷன் அருகில் சிறு குடிசையில், வேப்ப மரத்து அடியிலே நிலவின் நிழலில் அமர்ந்திருப்போம். தனியான குடிசை. அவருக்குத்தான் என்ன உடல் கட்டு ? உடம்பு கரளை கரளையாக பளபளவென்று மின்னும்!"

அழகம்மா தன் பூர்வோத்திரங்களைச் சொல்லச் சொல்ல ரோகிணி ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்தாள். அழகம்மாவோ, கூட்டியும் குறைத்தும் தனது வாழ்க்கை மர்மங்களைக் கூறிக்கொண்டிருந்தாள். கடைசியில் ஜமீன்தார், - அதுதான் ரோகிணியின் அப்பா - தன்னைக் கண்டதையும், காதல்கொண்டதையுங்கூடச் சொல்லிவிட்டாள்.

நிலா நேரே நின்று கேட்க நினைப்பது போன்று வானத்து உச்சிக் தவந்ததும் சுய சரிதம் உச்ச நிலையடையவில்லை. வளர்ந்து கொண்டேயிருந்தது.

## அத்தியாயம் 4

விடிந்தது. பொழுது புலரும் வேளையில் கிழ்த் திசையில் பார்த்தாள் ரோகிணி. ஜமீன்தார் சாம்பசிவம் ஓய்ந்துபோன நடையுடன் வாசற்படி ஏறியவர் மகளைப் பார்த்தார் ; மகள் தகப்பனைப் பார்த்தாள்.

தகப்பனும் மகளும், தனித்தனியே முந்திய நாள் சம்பவத்தை நினைத்து மனங் குன்றினார்கள். ஜவ்வாது சுப்பம்மா ஏமாற்றிப் பணம் பறித்த நினைவு உடம்பை எரித்தது அவருக்கு. இவளோ தனது சந்திரனோடு முந்திய நாள் நடந்து கொண்ட செயலை நினைத்துத் தகப்பனைக் கண்டு அச்சம் கொண்டாள்.

இருவரும் சொல்லி வைத்தாற் போல மனக் குரங்கின் சேஷ்டை தாளாமல் பேச முற்பட்டனர். தவறுகளைச் சொல்லி மன்னிப்புக் கோர முயற்சி செய்தார்கள்.

'அப்பா ... ... ...'

'அம்மா ரோகிணி.'

மீண்டும் மௌனம். ஒவ்வொருவர் மனத்திலும் பிறர் என்ன சொல்ல வந்தார்கள் என்ற கேள்வி பிறந்ததோடு சரி, கேட்க மனம் துணியவில்லை.

இருவர் பார்வையிலும் களங்கம்; விநோதமான பச்சாத் தாபம், ஒளிந்திருந்தது. ரொம்பவும் வாய்ப்பான சந்திப்பு; விசித்திரமான தந்தையும் அவரது மகளும் தலை கவிழ்ந்தனர். அவர்களுக்குள்ளே பாசத் தொடர்பு, அன்புப் பிணைப்பு அதிகம். தகப்பனைத் தெய்வமாக நினைத்தாள் ரோகிணி. குழந்தையை. மழைக் காலப் பயிர் போலப் பசுமையாக வளர்த்தார் ஜமீன் தார்,

மூளையிலே சுழிப்பு ஏற்பட்டு, சிந்தாமணியார் கொடுத்த பணத்தைத் தாம் மாடத் தெருவில் விளையாடி வந்து விட்ட விபரத்தைச் சொல்லி மன்னிக்க வேண்டினார். மகளுக்கு, அவள் வருங்காலப் பொறுப்பு தெரியாத நிலையில் எப்படிச் சொல்லுகிறது என்னும் வேதனை. முடிவாக, ஏதோ படிக்கத் தெரிந்த வகையைப் பயன் படுத்திக் கன்னி மாடத்தில் சேர்த்து விடுகிறது என்ற தர்க்க ரீதியான முடிவுக்கு வந்தார். வீட்டின் மேல் கடன் வாங்கிக்கொள்ளச் சிந்தாமணியாரிடம் சம்மதித் தார். வாரிசற்ற சொத்தை வகைப்படுத்த லேவாதேவி செய்ப வருக்குத் தெரியாதா ?

இதே வேகத்தில், ரோகிணியின் மூளையில் சலனம் எழுந் தது. ஏழைப் புலவர் பரம்பரையைச் சேர்ந்த சந்திரனைக் காதலித்ததின் மூலம் தன் தகப்பனுருடைய பரம்பரை கௌர வம் தன்னுல் பறிபோகலாமா? பாவலர் மருமகனிடம் தனது மனசை வெளிப்படுத்தியதைத் தகப்பனுர் தெரிந்துகொண்டால் என்னுகும்? சந்திரன் வருவதைத் தடுக்கலாமா? ஆதரிக்க லாமா? இரண்டும் அவள் மனசிற்குப் பிடிக்காத விஷயங்களா கத் தகப்பனுர் எதிரில் பட்டன. மற்ற பெண்களைப் போல வாழ்வின் ரகஸ்யம், குழந்தைப் பேறு, தாய்மை அறியும் பாக்கி யம் தனக்குக் கிடைக்க வேண்டாமா ?

தகப்பனுர் அப்படி; பெண் இப்படி. இருவர் உள்ளங் களும் உண்மை பேசத் துடித்தன. ஆனல் உதடுகள் பேசமறுத் தன. இந்த இக்கட்டான சமயத்தில், அழகம்மா 'டீ' கொண்டு வரவே மௌனம் கலைந்தது. சொல்ல நினைத்ததை அவர் பாதி சொன்னுர் ரோகிணி சொல்லாமல் மௌனியானுள்.

* * *

அடுக்களைப் பிராந்தியத்தில் காலை ஆகாரம் தயாரித்துக் கொண்டிருந்தாள் அழகம்மாள். காப்பியின் மணம் நன்ருக இருந்தும் ரோகினி, 'வேண்டாம், காப்பி' என்ருள்.

"நேற்று உனக்குப் பூராக் கதையும் சொல்லவில்லையே".

பிறகு அழகம்மா பழைய கதையை, தனது அனுபவங்களைச் சொன்னாள். 'உன் அப்பாவுக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தன' என்றதும், 'அப்படியா உனக்கு இரட்டையா?' என்று ஆச்சரியமாகக் கேட்டாள் ரோகிணி.

"அவை செத்துப் பிறந்தன"! என்றாள் அழகம்மா வருத்தத்தோடு.

"ஐயோ! குழந்தை உண்டாகிறது என்றால், நினைக்கவே பயமாக இருக்கிறது!" என்று ரோகிணி சொல்லும்போது அவள் உடல் நடுக்கமுற்றது.

"இன்றுகூட எனக்குக் குழந்தை பெறும் ஆசை இருக்கிறது. ஆனால் ..." அந்த ஆனால் ...? குடும்ப விருத்தியின் ரகஸ்யத்தை யூகித்துக்கொள்ள ரோகிணிக்குத் தெரியும் என்று விஷமத்தனமாகக் கற்பனைக்கு விட்டு விட்டாள் அழகம்மா.

"நீ நினைக்கிறபடி பிள்ளைப் பேறு கஷ்டமன்று. துன்பத்திலும் இன்பம் அது ஒன்றுதான். நீ கூட ஒரு நாள் ... ... ..." என்றாள் அழகம்மா கொஞ்ச நேரம்கழித்து.

"ஐயோ ... அழகம்மா ... ... பேசாதே".

வெட்கம் தாங்காமல் முகத்தைத் திருப்பி ஜன்னல் வழியே பார்வையைச் செலுத்தினாள். அங்கே சந்திரன், மருதாணிச் செடியின் அருகாக வந்துகொண்டிருந்தான். இதயமே துணுக்குற்றது. திருட்டுத்தனமாக அங்கே ஓடிச் செடிக்குப் பின்னால் ஒளிந்து ஒளிந்து சென்றாள். வந்தவனை எதிர்கொண்டு அழைக்க வந்தாள்.

"எங்கே அதிகாலையில் வந்தீர்கள். பாடம் சொல்லி வைக்கவா?"

மெல்லிய குரல் கேட்டுச் சந்திரன் மறைவாக வந்தான்.

"பாடம் அல்ல; உன் அப்பாவைச் சந்திக்க வந்தேன்."

"அப்பாவையா ... ..."

"ஏன் தயக்கம்? அப்பா வந்துவிட்டதைக் கண்டேன்."

"வேண்டாம். இந்த ரோகிணியை மறந்து விடுங்கள். அடுத்த ஜன்மத்தில்தான் நமது காதல் கை கூடும்........"

" உன் அப்பாவைக் கேட்கிறேன் ".

ஜமீன்தார் அறைக்குள், அழகம்மாளின் குரல் கேட்டது, திருடியைப்போலப் பதுங்கிப் பதுங்கிப் பின் கட்டுக்குப் போய் விட்டாள் ரோகிணி. சந்திரன் நேர்ப்பாதை வழியே வந்தும், பாழடைந்த கட்டிடத்தில், தான்தோன்றியாய் கிளைத்திருந்த முட்கள் குத்தின. அவன் வாசலுக்கு வந்துவிட்டான். அவன் வரவை அறிந்த அழகம்மாள் தலையை நீட்டினுள். சைகை மூல மாகத் தான் ஜமீன்தாரைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னுன். இக் குறிப்பை அழகம்மா உள்ளே ஜமீன்தாரிடம் போய்ச் சொன்னுள்.

"எதற்காக என்னைப் பார்க்க வேண்டுமாம் ?" என்று உறுமினுர் ஜமீன்தார்.

ஜமீன்தார் இது நாள்வரை முகங்கொடுத்துப் பேசவில்லை. அவர் இன்று மனக்கொதிப்பில் இருந்தார்.

"எனக்கு என்ன தெரியும் ஐயா" என்ருள் அழகம்மா.

" அந்தச் சந்திரனைப் பார்க்க முடியாது. பாவலரை வரச் சொன்னதாகச் சொல் ".

"ரொம்ப முக்கியமான விஷயமாம். கண்டிப்பாகத் தங் களைப் பார்க்க வேண்டுமாம். முக்கியமான காரியமாம்" என்ருள் அழகம்மா.

பாவலர் பணம் கேட்டிருந்தார். அதற்காக இருக்கலாமோ ? செம்பாலடித்த தம்படி இல்லை ! ஜமீன்தாருக்கு எரிச்சல் அதிகமாயிற்று. "போகச் சொல் அவனை ... ..." என்று கத்தினுர். அவருடைய மகளைப் போலவே சரியானபடி தூங் காத கோளாறு ஒரு பக்கம். நடந்து வந்த அலுப்புங் கூட. அவர் கையில் பணமில்லை. தனது அசட்டுக் கௌரவத்தைச் சந்திரனிடம் தெரிவிக்க இஷ்டப்படவுமில்லை.

இன்னும் ஒரு வாரத்தில் கன்னி மாடத்தில் மகள் சேர்ந்து விடுவாள். வீடு வாசல், சிந்தாமணியார் அபகரித்து விடு வார் .... .... தமக்குப் போக்கிடம் ? தலையிலே துணியைப் போட் டுக் கொண்டு காசி கன்யாகுமரி போகிறதா ? ஜமீன்தார் மனசுக்குள் கிடந்து துடித்தார்.

ஜமீன்தார் காதில் விழும்படி எட்டி நின்று, "கண்டிப் பாக நான் சந்தித்துப்பேசியே ஆக வேண்டும்" என்று உரத்

துக்கூவினான் சந்திரன். தமது எதிரில், ஒருவன், உரக்கப் பேசுகிறதாவது? ஓகோ தன்னை என்ன என்று நினைத்துக் கொண்டான்?

"வரச்சொல், உள்ளே" என்று உறுமினார். மீசையை முறுக்கியபடி தமது சாய்வு நாற்காலியில் கள்ளிப் பலகைமேல் சாக்கு விரித்தது தெரியாதபடி மூடிய துண்டின்மீது அமர்ந்திருந்தார். உடலில் முறுக்கு ஏறியது. மீசை துடித்தது. அழகம்மா, அங்கிருந்து நகர்ந்தாள்.

அதுவரை தைர்யமாக நின்ற சந்திரன் உறுமும் ஜமீன்தாரை நேரில் கண்டதும் உடல் ஆட்டம் கண்டது. வியர்வை ஒழுகிற்று. அவன் உடலில் வாலிபத்தின் பகட்டு இருந்ததே தவிர கோழை மனசு. தைரியசாலியும் அன்று. பயந்த ஸ்வபாவத்தோடு, உள்ளே வந்தான். "மகாராஜா அவர்களுக்குத் தண்டனிடுகிறேன்" எனத் தலை வணங்கினான்.

ரோகிணியின் மீது கொண்ட அன்பு, அவளை அடைய வேண்டுமென்ற ஏக்கம் அப்படிச் செய்தான். பாவலர் செந்திருக்குமாரின் தங்கை மகனாகப் பிறந்தும், பல இன்னல்கள் இடுக்கண்கள் அடைந்தான். தாயும் தந்தையும் இல்லாத அநாதை அவன் வாழ்விலே குறுக்கிட்ட முதல் பெண், அவன் மனசைக் கவர்ந்த கள்ளி ஜமீன்தார் மகள் ரோகிணிதான். பாவம் அவன் என்ன செய்வான்?

இந்த வயசு வரை, வளர்ந்ததே கஷ்டம். துன்பங்கள் துயரங்களின் சுமையைச் சுமந்தது தவிர்த்து வாழ்வில் எவ்விதச் சந்துஷ்ட்டியையும் அடையாத அவனுக்குப் புத்துயிர் பிறந்தது. ஏரும் கலப்பையும் பிடித்து நெற்றி வியர்வை விழ உழைத்து உழைத்து ஒரு சுகமும் காணவில்லை. ஏதோ தமிழ்ப் பாடங்களில் ஒருவகை இன்பம்.

அந்தக் கசப்பு நிறைந்த வாழ்வு, இப்படிப்பட்ட உன்னத இன்பத்தில் கொண்டு விடுமென சந்திரன் நினைக்கவே இல்லை, கனவை நனவாக்கிக் கொள்ள ஆசைப்பட்டான். இதுவரை தேக உழைப்பு, மனக்கஷ்டம் இரண்டும் தீர்ந்தன. இப்போது மன இன்பம் இலக்கியப் பூங்கா, இல் வாழ்க்கையில் இன்பத்திற்கு ஒரு ஜோடி. அறிவும் இன்பமும் அவனுக்கு மண்டியிடப் போகின்றன. அந்த இன்பத்திற்கு, சொர்க்கத்திற்கு, ஜமீன்தாரின் 'ஆஹா, அப்படியே செய்' என்ற வாய்ச்சொல் கிடைத்து விடும் என்று நம்பினான்.

நம்பிக்கையின் எதிரியான ஜமீன்தார் முன் வந்து நின்று வணங்கினுன். அவன் உள்ளத்தில் இருந்த ஆணவம், உடம்பில் இல்லை. வயதான ஜமீன்தார் முன்னுல் தைரியமாக வர முடியவில்லை.

"என்னப்பா கண்ணுமூச்சியாடிக்கொண்டு மொணங்கிறே தெவச மந்திரம் மாதிரி? வா இப்படி" என்ருர் ஜமீன்தார்.

வீட்டிலிருந்து வரும் போதே பதிலை சாமர்த்தியமாகப் பேசி மனங்குளிர அனுமதி பெற வேண்டும் என்று ஒத்திகை செய்திருந்தான். அவர் கோபமாகப் பேசினுல் தானும் முக பாவத்தை இன்ன விதமாக வைத்துக்கொண்டு கடுமையான சொற்களால் பதிலளிக்க நினைத்தான். பில்ஹணனும், அம்பிகாபதியும் நடந்த கொண்ட விதங்களை நினைப்பூட்டித் தன்னைத் தயாரித்துக் கொண்டு வந்தும், பங்களா வாசலிலேயே எல்லாம் ஓடி மறைந்து விட்டன.

நேருக்கு நேர், ஜமீன்தார் முன்னிலையில் வந்ததும் சந்திரனின் தைரியம் பேச்சு வன்மை மணலில் கொட்டிய தண்ணீர் போல மறைந்து விட்டது. அவன், உறுமும் ஜமீன்தாரிடம் கேட்கப் போவது அவரது மகளையல்லவா?

"நான்......நான் இவ்விடம் வந்ததின் தாத்பர்யம்......"

"பாவலருடைய கால் குணமாகி விட்டதா? கோடாலி விழுந்ததே"

"பாவலர் குணமாகி வருகிருர்......ஆனுல்?"

"என்ன ஆனுல்"

"அவர் என்னை அனுப்பவில்லை"

"உமக்கும் ஒரு பட்ட மரம் எரி விறகாக வேண்டும்; அது தானே? போய் வெட்டிக் கொள்ளும் ஐயா"

"பட்டமரமல்ல; பற்றிப் படரும் கொடி, மல்லிகையன்ன கொடி"

ஜமீன்தார் பங்களா மல்லிகைப் பூவுக்கும் பேர் போனது. "அட வேண்டியதை அறுத்துக் கொண்டு போமய்யா இது தானு பிரமாதம்?" என்று சோம்பல் முறித்தார். பணம் கேட்காமல் விட்டானே என்று ஜமீன்தாருக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சி.

"உவமையாகச் சொன்னேன்" என்று குரல் கம்மச் சொன்ஞன் சந்திரன்.

"அட தமிழ் படித்தவர், நறுக்கித் தெறித்த மாதிரி வந்த விஷயத்தைத் தெரிவிக்க வேண்டாமா? என்ன?"

மீண்டும் அதைரியம் போர்வையிட்டது, கால்களில் நடுக்கம். "உங்களுக்கும் நமக்கும் ஒரு முக்கிய விஷயம்," என்று குழறிஞன்.

கேலியாக, "உங்களுக்கும் நமக்கும்! உனக்கும் எனக்கும் என்னய்யா ரகஸ்யம்?" என்ருர்.

"சொந்த—சொந்த விஷயம்"

"சொந்த விஷயம்?" ஜமீன்தார் சிரித்துச் சுவர்ப்பக்கம் பார்த்தார். அங்கேதான் பழைய துப்பாக்கி இருந்தது.

"ஆமாம்"

"உனக்கும் எனக்கும் சொந்த விஷயம் எதுவும் கிடையாது. நீ ஒரு வேளை பழைய இருப்புத் தகடு, செப்புத் தகடு வாங்குகிற பேர்வழியாக இருந்தால், இன்னொரு முறை வரலாம். நிறைய ஓட்டை உடைசல் இங்கே இருக்கின்றன" என்ருர்.

"தேவரீர் மனசில் கிருபை வேண்டும்.

செல்லாவிடத்துச் சினந்தீது, செல்லிடத்தும்
அல்லதனில் தீய பிற.

என்று குறளில் சொன்ன மாதிரி சுடு சொல் பேசாதீர்கள்."

"அட உமது குறளைக் கேட்க உம்மை அழைக்கும்போது வரலாம் போய் வாரும்."

பயந்து கொண்டு திரும்பிய சந்திரன், இரு விநாடி கழித்து அவர் முன் வந்தான்.

"உங்களையே என் வாழ்வு, நம்பி இருக்கிறது!"

"அட பாவி, இதுதாஞ பிரமாதம். என்னிடம் பைஸா இல்லை. இந்த வீட்டில் நான் காலந் தள்ளுவதே அதிசயம். ஏதாவது பணம் எனக்கு வந்தால் உதவி செய்கிறேன்."

"பணமல்ல; தாங்கள் ஆம் என்று சொன்னால்தான் இந்த அறையை விட்டுப் போவேன்."

"சொல்லித் தொலை, நச்சரிப்பாக இருக்கிறது. நீ சொல்வதைக் கேட்காவிட்டால் பிராணனை விட்டுவிடுவாயோ?"

பரிகாசம் என்று தெரிந்தும் சந்திரன் உடலைக் குறுக்கிப் பணிவாக, "தேவரீர் அவர்களுக்கு இது என் விண்ணப்பம். தங்கள் குமாரி ரோகிணியைத் திருமணம் செய்து கொடுக்கும்படி தாழ்மையுடன், கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று ஸ்பஷ்டமாகச் சொன்னான்.

சாம்பசிவப் பாண்டியர், இரைமோப்பம் பிடித்த சிங்கம் போல் உடம்பை உலுக்கினார். நெற்றிச் சுருக்கங்கள் அதிகமாயின. திடுக்கிட்டு அதிர்ச்சியடைந்தார். காது மந்தித்துப் போய்விட்டதோ என்று சந்தேகப்பட்டார்.

"நீ... நீ சொன்னது சரியான புத்தியோடு சொன்ன வார்த்தைகளா?"

"ஆமாம் மகராஜா!"

சொல்லில் உறுதியும், குரலில் நிச்சயமும் கண்களில் ஆனந்தமும் பொங்க நின்றான் சந்திரன்.

ஜமீன்தார் சாம்பசிவத்திற்கோ பேசமுடியவில்லை; வார்த்தைகள் உதட்டுக்குள் தயங்கின. உச்சரிக்க முயன்றும், கோப வெறியில் சிதறின. மெதுவாக எழுந்தார். கோபக் கனல் தெறிக்கும் கண்களை மூடினார். கன்னங்கள் உப்பி, நரம்புகள் புடைத்தன. முறுக்கேறிய வடக் கயிறு போல் ஆகிவிட்டது. மீண்டும் ஏதோ சொல்ல முயன்றார். எதையாவது சொல்ல நினைத்தார். ஒரு திட்டு வசவு, ஏதோ ஏச்சு, தமது மனசைத் தெரிவிக்க ஒரு கோப வார்த்தை. நாவில் சொற்கள் புரளவில்லை. நாக்கு உலர்ந்தது. இரண்டடி முன்னுக்கு வந்து விட்டார்.

விரிந்து நின்ற விரல்கள் மடங்கின. உள்ளத்தில் குமுறிய வெறுப்பைக் காட்ட, அஹிம்ஸா முறையில் "போ வெளியே" என்று சொல்ல முயற்சித்தும் ஜமீன்தார் குத்துச் சண்டைக்குக் கையை உதறி மடக்கும் பயில்வான் போன்று உள்ளங்கையை மடக்கினார். அவர் உடம்பெங்கும் கோபத்தின் கொதிப்பு துலங்கிற்று. முகம் சவம் போல் வெளுத்து விட்டது.

அந்த வேளை அந்த பயங்கர நிலையிலும் சந்திரன், சொல்லிய தெளிவான பேச்சு,—"மகாராஜா நான் தங்கள் வம்சத்தவன் அன்று ; நான் சாதாரண மனிதன். ஏழை. தங்களுடைய மகளை, நான் மனமாரக் காதலிக்கிறேன். அவளே எனது குல தெய்வம், அவளை நான் காதலிக்கிறேன். அதே போல அவளும் என்னைக் காதலிக்கிருள்."

காதல் !

கடைசி வார்த்தை ஜமீன்தாரின் நெஞ்சைப் பிளந்தது. மூளை தன்னடக்கத்தை மறந்து விட்டது. சந்திரன் அப்பாவி, ஒரு ஜமீன்தார் அல்லாத பயல்—காதலிக்கிருன் ! போக்கிரித் தனம், தமக்கு வந்து விட்டது கெட்ட காலம், பொய், அபவாதம், ஊர் ஏளனம்.

இவன். அவளிடம் தனது காதலை வெளியிட்டிருப்பான். அவள் இவன் மாயப் பேச்சில் மயங்கி இருப்பாள். இருவரும் மயங்கி ஒருவரை ஒருவர்...ஏன் இருக்கக்கூடாது ?

மீண்டும் அவர்கள் சந்தித்திருக்கும் கற்பனை, பல்லாயிரம் ஊசிகள் குத்தித் துளைத்த வேதனையாக ஜமீன்தார் நெஞ்சில் கிறியது. அந்த வேதனை மீண்டும் மீண்டும் மனசிலே எழுந்து விளையாடிற்று. தன் குடும்ப கௌரவம், பரம்பரை அழிந்து விட்டது தீட்டுப்பட்டு விட்டது. இனி ? அவருக்கு இப் பரந்த உலகில், வீடு ஒன்று தான் சதம், எல்லாம் கண் முன்னே அழிந்து விட்டன. அதே போல, மகளும் அழிந்து விட்டாள்......

தாங்க முடியாத ஆத்திரம்... 'டேய்......டேய்...' அவர் வார்த்தைகளுக்குத் தான் தயங்கினர். உடம்பிலே அந்த வயசிலும் எங்கிருந்தோ யானை பலம் குடி கொண்டது... சந்திரன் மீது குத்துக்களைச் சரமாரியாக விட்டார்,

முதல் அடி மூக்கின் மேல் படவே, சந்திரன் மயங்கி விழுந்தான், "ஐயோ" என அலறினன். மேலும் ஜமீன்தார் அவன் மீது அடிக்கு மேல் அடி வைத்து, அருகே இருந்த துப்பாக்கிக் கட்டையைத் தூக்கி இடி இடியென்று இடித்தார். புரட்டினர் எட்டி உதைத்தார். காறி உமிழ்ந்தார்... தூக்கித் தூக்கிப் போட்டு உதைத்துத் தள்ளினர்.

வெறி, கோப வெறியில் செய்வதின் காரியம் உணராமல், குருடனைப் போல் நடந்து கொண்டார். சாகும் எலியைப் பிடி

விட்டுக்கொடுத்துத் தலை தூக்கும் சமயத்தில் தலையில் ஓங்கி அடிக்கும் நாய் போல வள்ளென விழுந்தார்.

அவர் காதில், சந்திரன் சோகக் குரல், பரிதாப ஏக்கம் ஒன்றும் விழவில்லை. அவருக்கு ஒன்றும் தோன்றவில்லை; கேட்க வில்லை; தன் இருதயத்தின் வேகத்துடிப்பையே உணர்ந்தார்.

"சாக அடி, கொல்லு ... கொல்லு" இந்த மந்திரங்களே ஜமீன்தாரின் கண்ணிலும் மனசிலும் எழுந்தன.

அருகில் நின்ற அழகம்மை பயந்து நடுங்கிவிட்டாள். கூக் குரல் இடப் பயம். வீட்டுக்குள்ளே, பின் பக்கமிருந்து தகப்பன் குரலைச் செவி மடுத்த—ரோகிணி ஓடோடி வந்தாள். அந்த அறையில் அவள் கண்ட காட்சி? அடிப்பட்டுப் புரண்டு கிடக் கும் சந்திரன், வெற்றி வீராப்புடன் நிற்கும் தந்தை. இதற்குள் அவ்வழியே வந்த இரண்டொருவர்—பால்காரர், வெற்றிலைக்கா ரர், வந்து விட்டனர்.

"ஐயோ, எஜமான் இப்படிக் கொல்லலாமா?

"மகாராஜா, பாவம் விட்டு விடுங்கள்,"

"வேண்டாம் மகாராஜா."

இப்படியாகச் சிபார்சுகள் எழுந்தன. இந்த நிலையில் ரோகிணி வந்தாள். பின்னாலிருந்து அழகம்மா சேலைத் தலைப்பைப் பிடித்து இழுத்தாள். "வேண்டாம் அபவாதம். நாளை உன் வாழ்வு?" எனப் பிடித்து அறவுரை கூறி னாள். "அவர்கள் சண்டைக்கு ஊடே போய் உன் பெயரைக் கெடுத்துக் கொள்ளாதே ரோகிணி" என்று கெஞ்சினாள் அழகம்மா.

ஆனால் அது ரோகிணியின் காதில் விழவில்லை. பிடியை விலக்க வேலைக்காரியை உதறினாள். அழகம்மா உப்பு மூட்டை போல விழுகிற நேரத்திற்குள் தகப்பனார் அறைக்குள் நுழைந்து "ஐயோ ... ... சந்திரன் ... ... உங்களுக்கு இந்தக் கதியா?" என்று கதறினாள் ரோகிணி. பிறகு மாலை மாலையாகக் கண்ணீர் வடித்து சந்திரனருகில் வந்து அடிபட்ட இடத்தையும் ரத்தங் கசிந்த நெற்றியையும் அமுக்கிப் பிடித்தாள் ... ...

மௌனம் நிலவிற்று "யார் தங்களை அடித்தது? யார் அடித் தது. தங்கள் பொன்னுடம்பைப் புண்ணாக்கிய பாவி யார்?" என்று கட்டிக் கொண்டு கதறினாள். இதைக் கண்ணால் கண் டார் ஜமீன்தார்.

"அவர் உனது அருமைத் தந்தையார். அவர் மனசிலுள்ள குரோதம் இப்போதாவது போய் இருக்கும். அன்பு சுரக்க வில்லையா?" என்ருன் சந்திரன் பரிதாபமாக.

எழுந்தாள் ரோகிணி. தகப்பனுர் முகத்தைப் பார்த்தாள். அவர் முறைத்தார். இருவர் கண்களும் — முன் தினம் நாணத் தால் கலங்கிய அதே கண்கள் கோபத்தில் சந்தித்தன. அதே கோபம் அதே வீராப்பு. தகப்பனும் மகளும் எதிர் எதிரே நின் றனர். ஒருவரும் இமைக்கவில்லை.

"இந்த விநாடி முதல் என் தகப்பன் இறந்து விட்டான். என் தப்பன் அல்ல நீங்கள். எங்கள் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கிறபோதுதான் உங்களை என் தகப்பனுராகக் கருதுவேன்!" என்று வீடே அதிரும்படி கூறினுள். காதலின் வேகத்தில் அவள் புலிபோலத் தன் தந்தையைப் பார்த்துச் சீறினுள்.

பிறகு திரும்பிச் சந்திரன் உடலைத் தொட்டாள். அருகே நின்ற வெற்றிலைக்காரனும் பால்காரனும் அடிபட்டுக் கிடக்கும் சந்திரனைத் தூக்க வந்தனர்.

"இல்லை நானும் பாண்டிய வம்சப் பெண்! இவரைத் தூக்க முடியும்" எனப் பாதியைத் தன் உடம்பில் தூக்கியபடியே கால் தரையில் இழுபட நடந்தாள்.

கொஞ்ச நேரத்தில் காதலன் சந்திரனைத் தூக்கிக்கொண்டு ஊரின் கோடியில் இருந்த சத்திரத்திற்குப் போய்க்கொண்டிருந் தாள்.

ஊர் கூடி அங்கு வந்துவிட்டது. பலர் இரக்கம் காட்டி உதவி செய்ய வந்தனர். ஜமீன்தாரின் ஆட்டபாட்டங்களுக்கு எல்லோரும் எதிரிகள். இன்று கஷ்டப்படும் அவர் மகளுக்காகப் பரிந்து உதவி செய்ய வந்தனர்.

"என் தகப்பனுர் செய்த கொடுமைகள் பல. நான் சகிக்க முடியாத கொடுமையைச் செய்தார். அவரை ஒன்றும் செய்ய வேண்டாம். நானும் இந்தச் சந்திரனும் இங்கேயே இந்தச் சத்திரத்தில் வாழப்போகிருேம்"

கூட்டம் கலைந்தது. ரோகிணி காயம் பட்ட சந்திரனுக்கு மருத்துவம் செய்ய ஆரம்பித்தாள்.

அரண்மனையிலோ ஒரு மணி நேரம் சென்றும் ஜமீன் தாரின் கோபம் தணியவில்லை. குழாயிலிருந்து புகை சுருள்

சுருளாகப் புகை வளையங்களாக மிதந்தன. அந்தச் சுருள்களின் மத்தியில் அவர் கண்ட காட்சி.

" இனி என் தகப்பன் இல்லை நீங்கள்."

இவ் வார்த்தைகள் தெரிந்தன. எங்கிருந்தோ புகுந்தன. தலைகிறங்கிற்று. பெற்ற மகளின் வார்த்தைகள்! கொடிய சொற்கள். எவ்வளவு முட்டாள் தனமான பேச்சு.......!

இனிமேல் அவருடைய தகப்பன் இல்லை...ஏன்? அவர் பெற்றெடுத்த மகள் தானே? எவ்வளவு அன்போடு பாசத்தோடு கண்ணிமையாகக் காப்பாற்றினர்? மனக் கொழுந்துகள் சுற்றிப் படர்ந்தன. அவள் பிறந்த போது,.......

' ஜமீன்தாரய்யா, ஒரு பெண் பிறந்து விட்டாள்" என்று அழகம்மா சொன்னது இன்னும் ரீங்காரமிடுகிறது. அந்த முதல் அழுகை. மகளுடைய இன்பக் குரல் கேட்கிறது. மறையவில்லை, நினைவில் பதிந்திருந்தன. அச்செவியிலே என்ன கேட்கிறது?

"இனி நீ எனது தகப்பன் இல்லை".

மீண்டும் புகையை இழுத்து இழுத்து ஊதினர். காலைப் பொழுது கழிந்து, சூரியன் மேல் வானம் சென்று விட்டான். இரண்டொரு முறை அழகம்மா சாப்பிட அழைத்தும் அவர் பதில் பேசவில்லை. பகலவனின் பிரகாசம், அவர் வாழ்க்கையில் அஸ்தமனத்தைச் சுட்டிக் காட்டுவது போன்று மங்கிற்று. மனசிலே இருள் சூழ்ந்தது.

உலகமே அவருக்கு எதிரியாக மாறிவிட்டது. எங்கும் சூன்யம் சூன்யம்.

உலகத்தின் இன்பச்சாயை சத்திரத்தில் தங்கிய காதலர் வாழ்வில் பிரதிபலிக்க ஆரம்பித்தது. ஊர் ஜனங்கள் தங்கள் கடமையாகச் சுருதி அனுதிகளான சந்திரன் ரோகிணி திருமணத்திற்கு ஏற்பாடு செய்தனர். அதில் பங்கெடுத்துக் கொள்ளாதவர்கள் ரோகிணியின் தகப்பனுர் ஜமீன்தார் சாம்பசிவம், சந்திரனின் மாமா பாவலர் செந்திருக்குமாரர் இருவருமே!

கோவிலிலே கடவுள் முன்னிலையில் பலருடைய தர்ம உதவியைக் கொண்டு மேளதாளத்துடன் சந்திரன் ரோகிணி மண விழா நடந்தது.

நாதஸ்வரத்தின் இனிய நாதம், காலையில் பரம்பரை ஜமீன் மாளிகையிலிருந்த பாண்டியர் காதிலே நாராசமாக விழுந்தது. பாவலருக்குக் கால் புண் சரியாகியும் மனப்புண் ஆறவில்லை. எந்த வேளையில் ஜமீன்தார் தம்மையும் அடித்து உதைக்க வருவாரோ என்று பயம்!

அதேசமயம் கோயிலில்............

சந்திரன் ரோகிணியின் கரம் பற்றினான்; திருமணத்தின் பூமாலைகளை ஏந்தியவண்ணம்!

## அத்தியாயம் 5

காலம் ஓடிற்று. ரோகிணி வீட்டு வேலைகளைச் செய்து விட்டுத் திண்ணைப்பள்ளிக்கூடத்திலிருந்து வரும் கணவனை எதிர் பார்த்தாள். வீட்டுக்குப் பின்புறமுள்ள சவுக்கில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தான் சந்திரன். அத் தம்பதிகளின் வாழ்க்கைப் பிரயாணம், கிராமத்தைவிட்டு அருகேயிருந்த திருநெல்வேலி நகரம் நோக்கி வந்தது,

ஜமீன்தார் சாம்பசிவம் நினைத்தபடி அவர் பெண் மாடத் தெருவுக்குப் போகவில்லை. கண்ணியமாக வாழ்க்கை நடத்தினாள். தரும தாதா ஒருவர் சந்திரன் படிப்பையும், வாழ்க்கை நிலையையும் அறிந்து தரும பாடசாலை ஆரம்பித்து வைத்தார். சந்திரனுக்கு வெகு திருப்தி. புதிய வீட்டிற்கு வந்து வாரம் ஒன்று ஓடிவிட்டது.

"ரோகிணி! வாழ்க்கை எப்படி இருக்கிறது?" என்று கேட்டான் சந்திரன்.

"நினைத்ததை விடப்பன் மடங்கு இன்பகரமாய் இருக்கிறது என்று சிரித்தாள் ரோகிணி."

"அப்படியா? வாழ்க்கை அநித்தியமன்று-நித்யம், இந்த இன்பம், இந்தப் புன் முறுவல் சாஸ்வதம்..."

"உங்களைப் போல எனக்கு வார்த்தைகள் அகப்படுவதில்லை"

"அகராதியை மணந்திருப்பதாகச் சொல்லுகிருயா?"

அந்தச் சின்னஞ் சிறிய வீட்டிற்குள் அவர்களின் கலகல வென்ற சிரிப்பொலி கேட்டது. பின் பக்கம் சவுக்கையில் மாணவர்கள் 'முந்திரி வாய்ப்பாடு' முறைவைத்துக் கொண்டிருந்தனர்.

"நான் நினைத்தபடி அவதிப்படவில்லை" என்றாள் ரோகிணி.

"நம் வாழ்வு இன்பமயமானது. எனக்கு வாழ்வில் இரண்டு பொருள்கள் மீது அபார மோகம். ஒன்று நான், மற்றொன்று நீ, வர வர என்னை மறந்து உன்னையே தியானிக்கிறேன் ரோகிணி,

" இரு இதயங்கள் ஒரே மீட்டில் துடிப்பதுதான் வாழ்வு.

"பெரிய உண்மை" என்று அவள் அருகில் ஆசையோடு போனான். அவள் விலகிக்கொண்டாள்.

வீட்டு வேலைக்கு ஆள் கிடையாது. அதற்குப் போதிய வாருவாய் ஏது? திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியன். வீட்டுக்கு வெளியே கல்விமான், அறிஞன், படிப்பாளி என்று அவன் அறிவுத் திறமைக்கு உலகமே வணங்கிற்று. அவன் அறிவின் விலாசம் பிரசங்கங்கள் மூலம் வியாபித்தன. வீட்டுக்குள்ளே அவன் அறிவல்ல, உணர்ச்சியே ஆட்சிபுரிந்தது. இதயமும் தேகக்கட்டும் இணைந்து குடும்ப சுகத்திற்கு ஏங்கின.

அவள் வர வர, இலக்கிய சர்ச்சைகளை மறந்தாள். சமைத்தாள், ருசியாகப் புதிது புதிதாகப் பதார்த்தங்கள் செய்தாள். பாத்திரங்கள் கழுவி வீட்டை அலங்காரமாக வைத்தாள். நேரம் அதற்குத்தான் இருந்தது. கூளப்ப நாயக்கன் காதலும், விறலிவிடுதூதும் புளித்துப் போயின. படிப்பதைவிட அனுபவம் ரஸமாக இருந்தது.

இருவரும் குடும்பமாக வாழக்கடின வேலை செய்வது தீராப் பொறியாக இருந்தது. நல் வாழ்வு வாழ முற்பட்டனர், எப்போதும் வீட்டில் குதூகலச் சிரிப்பும் வேடிக்கையுமே நிலவும். கற்பனை கலந்த பேச்சுகள் உலாவின. இளங் காதலர்களின் ரஸமான கனவுக் குமிழிகள் எழும். அவர்களுக்குள் வளரும் அன்பு, இளமைக் கவர்ச்சி, இன்ப வெள்ளக் காதல் வளர் பிறையாகப் பூர்ணமாகிக் கொண்டே வந்தது,

நாட்கள் சென்றன. விசிம்பில் கார் ஓடிற்று. காலம் சென்றது. அவள் தகப்பனுருடைய பேச்சைப் பேசவில்லை. சந்திரன் நெற்றியிலுள்ள காயத்தைப் பார்த்ததும், தகப்பனுரை நினைக்கமாட்டாள்.

தகப்பனை மறந்தேவிட்டாளா? ஆம் தகப்பன் இருக்கிறுன் என்று எண்ணச் சுவடே அழிந்து விட்டதா? காதலன் நெற்றியிலுள்ள அந்தக்காய வடுக்கூட எப்படி அந்தக்கோரசம்பவத்தை

நினைப்பூட்டாமல் இருக்கும்? அவள் நெஞ்சிலிருந்து தகப்பன் மறைந்து விட்டான்! அவன் வடுக்கூட மகளின் நெஞ்சில் இல்லை.

ஒரு நாள் சந்திரன் ஏதோ பேச்செடுத்தான். கிராமத்தி லிருந்து வந்த பால்காரன் ஜமீன்தாரைப் பற்றி ரத வீதியில் பேசிக்கொண்டிருந்தான். "அந்தக் கொலைகாரப் பயல் எத்தனை குடும்பங்களை அழித்த பாவி. உங்களைக் கொல்ல நினைத்தானே. பாவம் நீங்கள் தங்கம். அந்த ஜமீன்தாரிணி அம்மா தங்கக் கம்பி. நீங்கள் சௌக்கியமா வாழ்ந்தால் போதும்" என்று சொன்னான். அது நினைப்புவந்ததும் ஜமீன்தாரைப் போய்ப் பார்த்து வர ஆசை பிறக்கும். தனது மன நிலையைச் சந்திரன் தன் மனைவி ரோகிணியிடம் சொன்னான்.

"அவர் மிக நல்லவர், எனக்குத்தான் போதாதவேளை" என்று சந்திரன் தன்னைக் குற்றவாளி ஆக்கிக் கொண்டான். அந்த நினைவுச் சாயையில் ரோகிணியிடம் தகப்பனுரைப் பற்றிப் பிரஸ்தாபித்தான். ஆனால் தகப்பன் பேச்சை எடுத்ததுமே அவள் காதைப் பொத்திக் கொண்டாள். அன்று அதற்கு மேலாகப் பேசுவது தவறு என்று நிறுத்திக் கொண்டான் சந்திரன்.

* * *

ஒரு மாதம் வீட்டுக்குள் அடைந்து கிடந்து சாம்பிய உள்ளத்தோடு கூடிய ஜமீன்தார் சாம்பசிவப் பாண்டியருக்கு உடம்பும் துரும்பாயிற்று. உலகில் அவருக்கு உறவு இல்லை. அவர் தனிக்கட்டை. விடாப்பிடியாக பரம்பரை ஜமீனில் அழகம்மை ஒருத்திதான் இருந்தாள். ஆனால் தன் மகள் ரோகிணி அந்த வீட்டைவிட்டுப் போனபின்பு அவருக்கு அது சுடுகாடாகத் தெரிந்தது. வாரீசு அவருக்கு இனி யார்? மனக் கவலையின் கிறக்கத்தில் சிந்தாமணியார் லேவாதேவிக் கடையில் விற்க பூர்ண சுதந்திரம்கொடுத்து அந்தப் பாழும் அரண்மனையை விற்றார். ஒரு சில பெட்டி துணிமணிகளுடன் அவர் யாத்திரை செய்யும் நோக்கத்தோடு புறப்பட்டார்.

ஜமீன்தாரின் பக்தி மார்க்கம், துறவு மனப்பான்மை, இவையறிந்த, அவரது காதலியர்கள் பலர் தாமாக முன் வந்து காப்பாற்றுவதாக வாக்களித்தனர். நல்ல செயலுள்ள இடத்தை அண்டிப் பிழைத்தவர்கள் இப்போது விரும்பி ஏற்க முற்பட்டனர். ஆனால் அவருக்கு வெறுப்பு, கோபம், 'உலகமே பொல்லாதது; ஆண்டவனே நல்லவன்!' என்ற மனப்பக்குவம் பெற்ற யோகிபோல எல்லோர் வேண்டுகோளை

யும் மறுத்தார். தேவமாது ஜவ்வாது சுப்பம்மை, ஒரு பெரிய இடத்தைத் தனது இளம் வளர்ப்புப் பெண் மூலம் பிடித்திருந்த நம்பிக்கையில் "வீட்டோடு வாசலாக இருங்கள்" என்று ஜமீன் தாரிடம் வந்து கெஞ்சினுள். எல்லாம் வியர்த்தம் பெற்றது. "ஜமீன் தார்வாள், நம்முடைய பழைய சினேகிதத்தை எந்த சமயத்திலும் மறக்கமாட்டேன். என்னைக் குலத்தை யொட்டி எண்ணுதீர்கள். நான் மனுஷங்களைப்போல நன்றி பாசம் உள்ள வள். மனிதத்தன்மை எனக்கு உன்டென் றமுறையில் வாழலாம். வாருங்கள், பணத்தைப் பறிக்க அழைக்கவில்லை. பணம் தருகி றேன்" என்ருள் ஜவ்வாது சுப்பம்மை.

சுப்பம்மை நன்றிக்குத் தாயகமாகக் கெஞ்சியும் அவர் மறுத்து விட்டார். லேவாதேவிக் கடையில் வாங்கிய தொகையை எடுத்துக்கொண்டு ஸ்தல யாத்திரைக்கு ஒரு நாள் அவர் அழகம்மாளிடம் சொல்லாமல்கொள்ளாமல் புறப்பட்டார்.

அமாவாசை இருளோடு இருளாக, இருள் நிறைந்த நெஞ் சத்தோடு, பாவங்களின் சிருஷ்டி கர்த்தாவான அந்த உருவம் இருளிலே ஒளியைத் தேடிப் புறப்பட்டது.

* * *

அவர் துறவு கொள்ளப் போவதை அண்டை அயலார் மூலம் அறிந்த சந்திரன் மனைவியிடம் சொன்னுன். ரோகிணி சிரித்தாள். "பாபிகள்தான் சந்நியாசத்திற்கு ஏற்றவர்கள். துன்பங்களும் துயரங்களும் செய்யாதவன் துறவியல்ல. அவர் மிகவும் தகுதி வாய்ந்தவர்" என்ருள். அதை அவள் எவ்வளவு நெஞ்சழுத்தத்தோடு சொன்னுள்!

தரும பாடசாலையின் சொந்தக்காரர் சந்திரனைக் கூப்பிட்டு, "ஆசிரியரே, உமது மாமனுர் 'அரமனை' விற்ற ரொக்கம் வைத்திருக்கிருர். அதை அடைய வழி தேடும்" என்று உப தேசம் செய்தார்.

"அவரது ஒரே செல்வந்தான் எனது மனைவி. மற்றபடி பொருள் பணத்தை அவரே கொண்டு செல்லட்டும்!" என்ருன் சந்திரன்.

"பாவம், அவரைத் தடுத்து இங்கே அழைக்க முடியாதா?" என்று கேட்டார் தரும பாடசாலை தர்மகர்த்தா.

"முடியும், நான் போய் முயன்று பார்க்கிறேன்."

"தாங்கள் போகவே கூடாது. இந்தச் சமயம் தாங்கள் போனுல்,ரோகிணி தங்களை இழந்துவிடுவாள்" என்று பாடசாலை அதிபர் சந்திரனை ஜமீந்தாரிடம் போகவிட மறுத்துவிட்டார்.

“ அப்படியானுல் என்ன செய்கிறது ? தாங்கள் எங்களைக் காப்பாற்றினீர்கள், வாழ வழி வைத்தீர்கள். ஒரு யோசனை சொல்லுங்கள்”

சந்திரனுக்கு ஜமீந்தாரை அனுதையாகத் திரியும்படி விட மனமில்லை. எப்படியும் தனது வீட்டோடு கூட்டி வர ஆசை பிறந்தது.

“ உமது மனைவி .... முயன்ருல் ”

“ ரோகிணியா ?”

குரலிலே தன்னம்பிக்கையில்லை. பயம் வேறு தொனித்தது.

“ அவள் போனுல், உமக்கு மன்னிப்புக் கிடைக்கும், அவசியம் கிடைக்கும் !”

தலையாட்டிவிட்டு, “ ஊஹூம் அவள் பிடிவாதக்காரி. ஜமீன்தாரின் பெண்தானே ? அத்தனையும் பிடிவாதம் !” என்ருன் சந்திரன்.

“ எப்படியும் தகப்பனைச் சீர்திருத்த, மனசை மாற்ற அவர் போனுல் காரியம் நடக்கும். செய்யச் சொல்லுங்கள். ”

“ அவள் குணம் எனக்குத் தெரியும். அவள் போகமாட்டாள்.”

“ தங்கள் மீதுள்ள காதலை எண்ணிப் பார்க்கச் சொல்லுங்கள் உமது அன்பின் விலைக்காக அவள் செய்வாள், சொல்லும், கெஞ்சும்.”

“ நான் மீண்டும் முயற்சி செய்கிறேன் ” என்று விடைபெற்று வீட்டுக்கு வந்தான்.

* * *

இரவிலே சாப்பாடு முடிந்தது. வெற்றிலை போட்டுக் கொண்டு சந்திரன் வெளித்திண்ணையில் உட்கார்ந்தபோது “இன்று பள்ளிக்கூடத்தின் ஸ்தாபகரைப்பார்த்தேன்” (என்று பேச்சைத் தொடங்கினுன்.)

“ அவர் என்ன சொன்னுர் ?”

“ உன் அப்பாவைப்பற்றிக் கேட்டார்......”

“ எனக்கு அப்பாவே கிடையாதே ! ”

"சொல்வதைக் கேள்!"

"நான் ஒரு அனுதை, தங்களை அடைக்கலமாக அடைந்தவள், என் மனசைப் புண்படுத்த வேண்டாம்!"

"பள்ளிக்கூடத்து ஸ்தாபகர் சொன்னூர். உனது தகப்பனூர் துறவியாக......"

"என் தகப்பனூர் எப்போதோ இறந்துவிட்டார்."

கொஞ்சம்கூட அச்சமோ, வருத்தமோ தோன்ருது கூறிஞள். அன்பு, கருணை, பச்சாத்தாபம் குரலில் வேண்டுமே! மனச்சாட்சியின் ஊற்றுக்கூட அடைபட்டுவிட்டதோ? உணர்ச்சிக்கு அடிமையாகாமல், பாசத்திற்கு ஆளாகாமல் சொன்ஞள். இதயத்தின் ஒரு மூலையிலாவது பெற்ற பாசத்தின் சாயை இல்லை. அவள் நிலையும், சொல்லும், சந்திரனுக்கு வியப்பாகவும் அதிதமாகவும் இருந்தன. அவன் கண்கலங்கிப் பெருமூச்செறிந்தான்.

"ரோகிணி, நீ பெண்ணல்ல, மனித இதயமற்ற பிராணி!"

"அப்படியா? இந்த இதயமற்ற கல் தங்களை நம்புகிறது, காதல் கொள்ளுகிறது."

"எனக்காக என்மீது கொண்டுள்ள காதலுக்காக உன் தகப்பனூரைப் போய்..."

மீண்டும் அதே சுருதியில், "என் தகப்பன் இறந்துவிட்டார்!" என்று கூறிவிட்டு குரலை இனிமையாக மாற்றி, "இன்று சமையல் வெகு குஷி. உங்களுக்குப் பிடித்தமான விளாம்பழ ரஸம், மாங்காய்ப் பச்சடி, மோர்க்குழம்பு." எனச் சிரித்தவள், இலையெடுத்துப்போட்டு, ஒன்றும் நடக்காதவள் போலப் பரிமாற ஆரம்பித்தாள்.

சிரிப்பதா? அழுவதா? சந்திரன் பிரமித்துப் போனூன். எப்படிப் போய் மனைவியின் அர்த்தமற்ற வைராக்கியத்தைச் சொல்வது என்று குழம்பினூன். பள்ளிக்கூட ஸ்தாபகர் தன் மீது கோபிக்காமல் என்ன விதமாக நடப்பது என்று யோசனை செய்தான்.

"சாப்பிட்டால் உலகத்துள்ள துக்கங்களில் பாதி ஓடிப் போய்விடுகின்றன. யோசனை அப்புறம். வாருங்கள் சாப்பிட!" என்று ஆசையோடு கூப்பிட்டாள் ரோகிணி.

பதுமைபோல வந்து இலை முன் அமர்ந்தான் சந்திரன்.

*     *     *

அதிகாலையில் கோழி கூவுவதற்கு முன்னதாக யாரோ வந்து கதவைத் தட்டினார்கள். படுத்திருந்த ரோகிணி எழுந்தாள். அவள் எழுவதைக் கண்ட சந்திரன் விழித்துக்கொண்டு, "இந்த நேரத்திலா வீட்டு வேலை, வேண்டாம் விடியட்டும்" என்றான்.

அவளோ, படுக்கையில் இருந்த தலையணை ஒன்றைக் கீழே தனியாகத் தள்ளிப்போட்டாள். ஒரு பாயை எடுத்து விரித்துவிட்டுத் கதவைத் திறக்கப் போனாள். வருகிறவர்கள் நாகரிகமாக நினைத்துக்கொள்ள வேண்டுமென்பதில் பெண்கள் கெட்டிக்காரர்கள்.

அவள் யாரைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லையோ அந்த நபர் வாசலில் நின்றுகொண்டிருந்தது! யாரென அடையாளம் தெரிந்ததும், "அழகம்மாவா... வாம்மா உள்ளே" என்று மனங்குழையக் கூப்பிட்டாள் ரோகிணி. அழகம்மாவோ தன் மேல் கோபமில்லால் அன்போடு ரோகிணி வரவேற்பாள் என்று நினைக்கவேயில்லை.

"ரோகிணி" என்றாள் அழகம்மா. அடுத்த கணம் ஓடி வந்து தன் பெண்போன்ற ரோகிணியை ஆவிசேர்த்துக் கட்டிக் கொண்டு உச்சிமுகர்ந்தாள்.

கண்ணீர்த்துளிகள் வழிந்தோடின. ஆனந்தத்தால் ரோகிணி விக்கினாள். "அழகம்மா அழாதே. ஏன் அழவேண்டும்?" என்று ஆசுவாசப்படுத்தவே, "எப்படியம்மா இத்தனை மாசமாக உன்னைக் காணுமல் என்னால் இருக்க முடிந்தது? உன்னைக் கண்டு பேசவே நான் வந்தேன்" என்றாள் அழகம்மா.

படுக்கையில் படுத்திருந்த சந்திரன் அழகம்மாளின் குரல் கேட்டு "பாட்டியா? வரணும் வரணும்", என்றான்.

அழகம்மா அன்பு ததும்ப "கடவுள் ரோகிணிக்கு நல்ல வழி விட்டார். ஒரு காரியமாக வந்தேன் தம்பி..." என்று தயங்கினாள்.

குறிப்பை அறிந்து கொண்டவளாக ரோகிணி சட்டென்று "அழகம்மா! எதை வேண்டுமானாலும் சொல், ஆனால் ஒரு காலத்தில் என் தந்தையாக இருந்தவரை மட்டும் நினைவு படுத்தாதே!" என்றாள்.

"என்னம்மா குழந்தை, இன்னும் நீ குழந்தையா? நான் சொல்வதைக் கேள்."

"கடவுள்தான் அவரை மன்னிக்க முடியும், நான் ஒரு பெண்."

"அவருடைய பெண்" என்முள் அழகம்மா அழுத்தமாக.

"அவருடைய பெண்ணுக நான் இருந்தால், அவருடைய மருமகனுக இவர் இருந்தால், அவர் எங்கள் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டாக வேண்டும்!"

கொடிய சோதனை. உண்மையாகவே பேசுகிருயா?"

"ஆம், வேஷத்திற்கும் குரோதத்திற்கும் பேசவில்லை. நியாயத்தைச் சொன்னேன்."

அவள் குரலில் மன்னிப்பு இல்லை. நியாயத்தின் எதிரொலி தொனித்தது. பச்சாத்தாபத்திற்கு இடமே இல்லை.

"உன் தகப்பனுர் இப்போது அனுதை. அவருக்கு வயதாகி விட்டது."

"நான் வாலிப அனுதை" என்முள் ரேர்கிணி

"உனது பெற்ற தகப்பன் அல்லவா? உன்னுடைய கடமை என்னுவது?"

"அவர் தகப்பனுக இருந்தார், நான் மகளாக இருந்தேன். தகப்பனுக அவர் நடந்து கொள்ளவில்லை. நான் மட்டும் மகளாக நடப்பது எப்படி?"

"அவர் என்ன இருந்தாலும், எத்தனை பணத்தைத் தொலைத்தாலும் ஜமீன்தார். அவருடைய ரத்தம் ... ..."

"அதனுல் என்ன?"

"அவருடைய குணம் எப்படி மாறும்? துறவியாகப் போகப் போகிருர். பிடிவாதம் அவருக்கு இருந்தால் உனக்கும்!" என்று அழகம்மா வழக்காடினுள்.

"அவர் மகளுக்கு, ஜமீன்தாரிணிக்கு, அதைவிடப்பிடிவாதம் உண்டு. அவரை விட நான் எப்படிக் குறைந்தவள்? குலப் பெருமை எனக்கும் உண்டு. மமதையும் உண்டு, அவரை விட எந்த விதத்திலும், கௌரவத்திலும் நான் குறைந்தவளல்ல.

அவருக்கு அவர் கொள்கை வேதம், எனக்கு எனது கொள்கை வேதம் ... ... "

"இருந்தாலும் உன் தகப்பனுர் ஆண்பிள்ளை அல்லவா ... "

"அதனுல் என்ன உயர்வு ?"

"இந்த மாதிரி சமயத்தில் ஆண்களின் மனப்போக்குப்படி நடப்பது, விட்டுக் கொடுப்பது பெண்கள் செய்ய வேண்டியது. ரோகிணி, அவருக்கு நீதி கற்பிக்காதே."

"எனக்கு, ஒரு பெண்ணுக்கு, அவர் நீதி புகட்ட வேண்டியதில்லை."

"அவர் உன்னைப் பெற்றவர் !"

" நானும் .... ...பெறக் கூடியவள் ! "

அதற்குமேல் அவள் பேசவில்லை. சொல்ல வந்ததை நிறுத்தி விட்டாள். விடி வெள்ளியின் பிரகாசத்தைவிட அவள் முகத்தில் தாய்மையின் பிரகாசம் ஒளிர்ந்தது....

" ஓ! நீ பிள்ளைத்தாச்சியா ? "

சந்திரன் இதைக் கேட்டுத் திடுக்கிட்டான். சிரித்தும் விட்டான். 'அப்படியா சமாச்சாரம் !' என்று ஆனந்தம் கொண்டான்.

" ஆமாம் அழகம்மா. நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசுவோம். வா, வீட்டிற்குள். "

அழகம்மா, " கடவுள் கிருபையாலே நல்ல விதமாகக் குழந்தையும் தாயும் வெவ்வேறு ஆக வேண்டும். பிறக்கும் குழந்தை ஆணுக இருக்கட்டும்...." என்று நெற்றியில்கைவைத்துத் திருஷ்டி நெறித்தாள். பொல பொல வெனத் தன் குழந்தைகளை நினைத்துப் பொருமினுள் அழகம்மா. " எத்தனை பெற்றேன்... ஒன்றும் எனக்கு உதவவில்லை. குழந்தைகளை இழந்தேன், நான் பெற்றும் அந்தக் குழந்தைகளோடு வாழ முடியாத அபாக்கியவதி" என்ற நினைப்பில் கோவெனக் கதறினுள். சந்திரனும் ரோகிணியும் சமாதானம் செய்தனர். பின்னர் ஏதோ சாப்பிட்டு விட்டு, அவசர அவசரமாக விடைபெற்றுச்சென்ருள் அழகம்மா.

அவள் போனதும், "அழகம்மா எங்கே வந்தாள் ? " என்று பேச்சுக் கொடுத்தான் சந்திரன்.

"பிள்ளைப் பேறு பார்க்கத் தான் வருவதாகச் சொல்ல வந்தாள்."

"ஓகோ, அவளுக்கு எப்படி இந்த விஷயம் தெரிந்தது?"

இருவரும் சிரித்துக் கொண்டனர். அவள் முகத்திலே புதிய களை இருப்பதைக் கண்டான். "பேரனை எடுத்துக் கொண்டு அப்பாவிடம் போய் மன்னிப்புக் கோரப் போகின்றுளா?" என்ருன் விளையாட்டாக.

"குழந்தை பிறந்து விட்டால், நான் கோழையாகி விடுவேனு? என் குழந்தைக்காக எனது காதலரின் மேனியைப் புண் படுத்தியதை மறக்க முடியுமா? மிருகத்தனமாக, கொடூரமாக நடந்து கொண்ட அந்த அநீதியை மறக்க முடியுமா? கீழே தரையில் போட்டுத் துப்பாக்கிக் கட்டையால் குத்திய ஜாதி வெறியை, குலத்திமிரை மறக்கவா சொல்லுகிறீர்கள்? முகத்திலே ரத்தம். உங்கள் உடலெல்லாம் ரணமான வேதனை, அடியும் மிதியும் என் நெஞ்சிலே அல்லவா விழுந்தன? தங்கள் உடம்பில் அல்ல. நீங்கள் மறந்து விட்டீர்கள். நான் மறக்கவில்லை!"

அவள் பேசிய தோரணையும் ஆவேசமும், சந்திரனுக்கே குணம் மாறிக் கோபத்தைத் தூண்டின.

"சாந்தப் படுத்திக் கொள், இனி உனது தகப்பனுர் பெயரை எடுக்கமாட்டேன். அழகம்மா என்னென்னவோ ரகஸியமாகச் சொன்னுளே?"

"நான் உண்பது உறங்குவது, எப்படி எப்படி என்று சில புத்திமதிகள் சொன்னுள்."

"கர்ப்பிணிக்குப் புத்திமதிகள். இனிமேல் என் பாடு ..."

அவன் குறைப் பேச்சையும் கேட்காமல், நாணிக் கொண்டு அவ்விடத்தைவிட்டு நகர்ந்தாள் ரோகிணி.

"நீ பிரியப்படுகிற பொருள்களைக் கேள் ... எதுவாக இருந்தாலும் நான் வாங்கி வந்து விடுகிறேன் ... ..."

"தங்கள் அன்பு. அன்பு. அன்பு. மற்ருென்று என் தகப்பனுரிடம் பச்சாத்தாபம் கொள்ளவே கூடாது. ... ..."

"இப்படியும் வைராக்கியம் இருக்குமா? சுரை ஒன்று போட்டால் விதை யொன்ரு முளைக்கும் ... ?"

சந்திரன் பின்புறமுள்ள சவுக்கைக்குள் பாடம் நடத்தப் புகுந்தான்.

*　　　*　　　*

ஜமீன்தார் சாம்பசிவப் பாண்டியர், தீர்மானம் செய்து கொண்டிருந்தார். இரவோடு இரவாகப் போய்விட்ட அழகம்மா வைக் காணவில்லை. ஒரு வேளை தம் மீது கோபம் கொண்டு அவளும் போய்விட்டாளோ? தமது கையிலுள்ள ரொக்கத்தில் பாதிக்கு மேலாக அவளிடம் ஒப்படைக்க அன்று தீர்மானம் செய்திருந்தார். அதற்குள் அவள் மறைந்து விட்டாளா?

மாலை வேளையில் அந்த வீட்டிற்குள்ளாக அழகம்மா வருவ தைக் கண்டு ஆச்சர்யப் பட்டார்.

"எங்கே போயிருந்தது, கட்டை?"

"ஜாதகம் பார்க்கப் போயிருந்தது இந்தக் கட்டை!" என்ருள்.

"ஜாதகமா? யாருக்கு? எனக்கும் உனக்கும் ஆண்டவன் முன்னமே எழுதி முடித்துவிட்டானே!"

"பிறக்கப் போகும் பிள்ளைக்கு!"

"பிறக்கப் போகிற பிள்ளையா?"

"தங்களுடைய பேரன்!"

அந்த வார்த்தை கேட்டு உள்ளம், சிலிர்த்தது. பேரன் பிறந்தால் அவர் பாட்டனுர். ஆனுல் ஜம்பம் குறுக்கிட்டுச் சந்தோஷத்தைத் தடை செய்தது.

"மகளும் மருமகனும் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிருர் கள் தெரியுமா?"

"மகளா? அப்படி எனக்கு ஒரு பெண் இல்லவே இல்லை!."

"பொய், மனமறிந்து பொய் சொல்ல வேண்டாம். வீண் கௌரவத்திற்கு ஆளாக வேண்டாம். அவள் மலைபோல இருக் கிருள். எவ்வளவு அழகாக, ஆனந்தமாக இருக்கிருர்கள்! பலகாலம் வாழட்டும். பிறக்கும் பிள்ளை ஆண் குழந்தையாக இருக்கட்டும்.... முருகன் செயலால்."

சாம்பசிவம் புன்சிரிப்புச் சிரித்தார், திரிபுரம் எரிக்கும் சிவனைப்போல. அழகம்மா அவர் கையைப் பிடித்து, "இப் பிடி

வாதம் தவறுனது, சொல்வதைக் கேளுங்கள்,'' என்று கெஞ்சினுள்.

"இந்தச் சாம்பசிவம் இன்னெரு ஜன்மம் எடுக்க வேண்டும். விட்டுவிடு!" இதற்கு மேல் அவர் பேசவில்லை. தமது பங்களாவைவிட்டுத் தோளிலே சந்திரனைத் தூக்கிப் போட்டுத் தெருவழியே ரோகிணி இழுத்துக் கொண்டு போன காட்சி, அதையடுத்து 'குவா, குவா,' என்று பிறந்த குழந்தையான ரோகிணியை அழகம்மா ஏந்தி வரக்கூடிய காட்சியும் தெரிந்தது. சின்னஞ்சிறு பிஞ்சுவிரல்கள், கன்னக் கதுப்புகள், மிரள மிரள விழிக்கும் பூச்செண்டு...... இன்பசாகரத்தில் மிதந்தார்...... குழந்தையின் முதல் அழுகை எவ்வளவு இன்பரஸத்தை இதய வீணையில் மீட்டுகிறது.

ஆனல் அதே இதயத்தில், துன்பஸ்வரங்களையல்லவா மீட்டினுள் ரோகிணி. எவ்வளவு கொடிய சொல்லம்புகள்?

"இனி தாங்கள் என் தந்தையல்ல."

இச் சொற்களே இப்போது சுற்றிச் சுற்றி ரீங்காரமிட்டன. அந்த நினைவு, தாங்காமல், "அழகம்மா, எனக்கு ஒரு பெண் இல்லை. உலகத்தில் நான் தனி!" என்ருர்.

"நான்......?"

"நீ! உனக்கு என்று கடமை இதுதான். இதோ பார் பாழடைந்த பங்களா விற்ற பணத்தின் பெரும் பகுதி. உனது வாழ்நாளை இதைக்கொண்டு தள்ள முயற்சி செய்..."

பணத்தின் மீது கண் சென்றது. அழகம்மா மறுபடியும் சாம்பசிவத்தை ஏறிட்டுப் பார்த்தபோது அவர் மௌனமாக உட்கார்ந்திருந்தார். அவர் மனசை அதற்குமேல் புண் படுத்த ஆசை கொள்ளாமல் வீட்டு வேலையில் ஈடு பட்டாள். ஆகாரம் தயாரித்தாள்.

அன்றிரவு நடுச்சாமத்தில், சாம்பசிவம் எழுந்து வாயிற் கதவைத் திறந்தார். புத்தர் அரண்மனையை விட்டு வெளியே போனது போல, எல்லாம் மறந்தார். அவர் இருளில் இருளாக வீதிகளைக் கடந்து போய்க் கொண்டிருந்தார்.

சிற்றின்ப வெள்ளத்திலே நீந்தி விளையாடியவர், பேரின்பத்தின் கரையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

அழகம்மா காலையில் அவரைத் தேடினுள்; காணுமல் தவியாய்த் தவித்தாள். யாரோ ஒருத்தியை இழுத்துக் கொண்டு காசியை நோக்கிப் போய்விட்டதாகச் சிலர் சொன்னுர்கள். ஆற்றிலோ குளத்திலோ விழுந்ததாகச் சொன்னவர் பலர். ஊரில் பல விதமாக வதந்தி பரவிற்று. அவர் முடிவு என்ன வென்று அங்குள்ளவர்களால் தீர்மானிக்க முடியவில்லை.

அழகம்மா வீட்டை இழுத்துப் பூட்டிவிட்டு ரோகிணியிடம் தஞ்சம் புகப் புறப்பட்டாள். அவள் கையில் பண மூட்டை இருந்தது. சர்வசாக்கிரதையாகக் குக்கிராமத்தை விட்டுத் திருநெல்வேலிக்கு நடக்க ஆரம்பித்தாள்.

## அத்தியாயம் 6

பெரிய பெரிய கோயில்கள் உள்ள ஊரில் மடங்கள் இருப்பதும், மடங்களிலே ஆத்ம விசாரணை, தெய்வ வழிபாடு, நடப்பதும் இயல்பு. திருச்செந்தூர் முருகன் கிருபையைக் காண அநேக தர்ம மடங்கள் எழுந்தன. அதிலே ஒரு மடத்திலே உள்ள சாமியார் செயலளவிலும் துறவியாக இருந்து புண்பட்ட மனத்தோடு சாந்தி தேடி வருகிறவர்களை வழிகாட்டி உசிதமாகப் பேசிக்கொண்டிருப்பது வழக்கம்.

"ஸ்வாமிகளே, அந்தக்கட்டைக்குப்பூர்வீகம் எந்த ஊரோ?" என்று மடத்துப் பெரியசாமி கேட்டது.

" இந்தக் கட்டை ஆதியில் பெரிய பாவம் செய்தது. பணத் திமிருலும் வாலிப மிடுக்கினுலும் செய்த அக்கிரமங்கள் பல ஸ்வாமி."

"பாவத்தைச் செய்தவன் தான், மோட்சத்தில் சுகத்தை உணர முயல்கிருன். அப்பன் அருணகிரியாரை நினைத்தால் பால்யத்தை எண்ணி, அதன்பின் யோக நிலையை எண்ணுங்கள். பூலோகத்தில் யோக்கியமாக இருந்து விடுகிறவர்களுக்கு வான லோகம் கசப்பாக இருக்கும் ஸ்வாமி."

"என் மனம், வாக்கு, காயம் அத்தனையும் விஷப்பாண்டங்கள். இந்தக் கட்டையின் அக்கிரமங்களுக்குக் கணக்கே கிடையாது. இந்த வயதில் நான் சாந்தியை நாடித் தேசாந்திரம் புறப்பட்டேன். தங்கள் திருநாமம் கேள்விப்பட்டு மடத்திற்கு வந்தது இந்தக் கட்டை."

மடத்து ஸ்வாமிகள், வந்தவருடைய உறுதியையும் மனச்சாட்சியையும் கண்டு அவரோடு அளவளாவிக்கொண்டிருந்தார். அவருடைய பூர்வீக நாமம் சாம்பசிவப் பாண்டியர் என்றும், தமது கருத்துக்கு மாருக மகள் ரோகிணி கலியாணம் செய்து கொண்ட விபரமும் மடத்து ஸ்வாமிகள் அறிந்தார்.

"ஸ்வாமி, தாங்கள் எல்லாப் பாசங்களேயும் கடந்துவிட்டீர்கள். ஆனுல் மகள்மீது கொண்ட பாசத்தைக் கடக்க வில்லே. மனேவியே இல்லாதவனுக்கு உலகம் துளிமாத்திரம். குடும்பத்தில் அழுந்தி அதன்பின் சந்நியாசம் பெறுகிறவனே தீரன். பிள்ளேயற்ற மலடு, சீக்கிரம் துறவியாக முடியும். பிள்ளேகுட்டியுடன் வாழ்ந்து துறவியாக வந்தாலும் ஆதியில் நம் முன்னேர், கடந்த முனிவர்களும் கடப்பரோ மக்கள் மேற் காதல் என்று சொல்லியமாதிரி மக்கள் பாசத்தைக் கடக்க முடியாத நிலேயில் தாங்கள் இருக்கிறீர்கள்!"

"நான் அதைக் கடந்து விட்டேன்!"

"இன்று நான் விவாதிக்க விரும்பவில்லே. இன்னெருமுறை அது பற்றி விவாதிக்கலாம். வாருங்கள்" போஜன வேளே

அந்த மடத்திலே, புலனடக்கம் உண்டேயொழிய போஜன அடக்கம் கிடையாது. நாவின் சுவையை மறப்பதன் மூலம் மனிதன் யோகியாக முடியாது; மனசை அடக்க முயல்வதே யோக மார்க்கம் என்றமுடிவு கண்டவர்கள்.

ஒரு காலத்தில் கூளப்பநாயக்கன் காதலும் விறலிவிடு தூதும், தனிப்பாடல்களில் அப்பட்டமான சுவையுமே ரஸங்களாகத் தெரிந்த சாம்பசிவக் கட்டைக்குத் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் அமிர்தமாக இருந்தன.

சப்ரமஞ்சக் கட்டிலிலே சயனித்த அந்த உடம்பு, தரையிலே கொடுங்கையைத் தலேயணேயாக வைத்துத் தூங்குவதில் சுகம் கண்டது. இனிப்பில் கடைக்கோடிதான் கசப்பு என்ற இலக்கணத்திற்கொப்ப, சிருங்காரத்தின் எல்லேக் கோடுதான் சிவசக்தியின் எல்லேத் துறவு என்பதைக் கண்டார்.

மடத்தில் பெரிய சாமிகள் ஜமீன்தாரின் மனதிற்கு உசிதமான வார்த்தைகள் சொல்லி, அவரை ஆழம் பார்த்தார்கள். முடிவிலே ஒரு நாள். "அந்தக் கட்டை, இம்மடத்தில் சேர இச்சை கொள்வதை நான் தடை செய்யவில்லே. மனமறிந்து எந்த உயிருக்கும் கெடுதலோ, தீங்கோ செய்யாமல் வருகிற

வனே துறவி. தாங்கள் மகளின்மீது கொண்ட வருத்தம் நீங்காமலேயே வந்திருக்கிறீர்கள். மனிதன் பெரியவன். துறவி ஆகிருன் என்ருல் அவனுக்கு உலகத்தில் எதிரியே இல்லையென இருக்கவேண்டாமா? தங்களுக்கு மனம் இன்னும் பக்குவடையவில்லை. பெற்ற குழந்தையிடம் மனசைப் பறிகொடுத்து அதை மன்னிக்காதவன், உலகத்திடம் அன்பு கொள்வது விசித்திரம். இது என் அறிவு'' என்று பெரிய கட்டை இவ்வாறு தன் மனக் கருத்தை வெளியிட்டது.

"எப்போதும் இந்தக் கட்டை ரோகிணியை நினைப்பதில்லை. ஒரு வருஷத்திற்கு மேலாகியும், இரண்டொரு தடவை நினைத்ததுண்டு.''

"என்னேடும், மற்றுமுள்ள நபர்களோடும் பேசுகிற தினுசில், தங்கள் குமாரியிடமும் தங்கள் மருமகனிடமும் பேச முடியுமா?''

சாம்பசிவக் கட்டை சற்றுத்திகைத்தது சொல்லும்போதே அவருடைய பழைய ஸ்வபாவம் தலை தூக்கிற்று.

"இந்த உலகில் துறவிக்கு எதிரி யாருமே இருக்கக்கூடாது. நமக்கு எதிரி இறைவன் ஒருவனே. அவனேடுதான் நாம் கோபங்கொள்ளலாம்'' என்ருர்.

ஞான உதயம் ஏற்படலாயிற்று, சாம்பசிவக் கட்டைக்கு. அவர் பழைய ஜோரில் இல்லை. காதிலே குண்டலம், கையில் கமண்டலம், கட்கத்தில் தண்டம், காவியேற்றிய உடை...... இப்படி வேஷத்திற்குள் புகுந்துகொண்ட பின்பு அவருக்கு அந்த உடைமீதும், வாழ்வுமீதும் பற்று ஏற்பட்டது. உண்மையில் கடவுள் சிந்தனையில் ஈடுபட்டால், தமது வாழ்வு, சௌக்கியமாகும், ஆத்மா புண்ணியமடையும் என்ற நம்பிக்கையில் அழுந்திவிட்டார்.

மடத்து ஸ்வாமிகள் மாலைப்பூஜை முடிந்து, கடற்கரைப் பக்கமாக உலாவச் சென்ருர். சாம்பசிவப் பண்டாரமும், (பாண்டியரல்ல இப்போது,) கூடவே போனுர்.

"இந்தக் கட்டையின் கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.''

"சொல்லுங்கள் ஸ்வாமி!'' என்ருர்.

மடத்துப் பெரிய சாமிகள் தம் கதையைப் புதுக்கட்டை சாம்பசிவத்தை நோக்கிச் சொல்ல ஆரம்பித்தது.

"மதுரை ஜில்லாவின் சிறிய கிராமம் ஒன்றிலே எங்கள் குடும்பம் பணத்தின் சௌகரியங்களைப் பெற்றிருந்தது. நான் அந்த வயசில் அழகாக இருப்பேன். என் அழகின் முறுக்கில் எனக்கு வெகு பிரீதி. எந்தப் பெண்ணும் எனது வலையில் வீழ்ந்தேவிடுவாள் என்று கனவு கண்டேன். நாம் நினைக்கிற படி காதல் உலகம் இல்லை. வீண் கனவுகள். அடுத்த கிராமத்தில், சாதாரணப் பணக்காரர் இருந்தார். எங்களுக்கும் அவருக்கும் பரம்பரையாக ஒரு நிலத்தைப் பொறுத்துத் தாவா நடந்து கொண்டிருந்தது. அந்த நிலம் இருவருக்கும் சொந்தமாகாமல், பாழடைந்து வந்தது.

"நான் அதைப் பார்க்க நினைத்தேன். அந்த நிலத்தில் ஏதாவது பயிரிட்டால் பலன் கிடைக்குமா யென்று ஆராய்ச்சி செய்யப்போனேன். ஆனால், அதே சமயம், ஆம் அதே சமயம், அங்கே நான் ஒரு அழகான பெண்ணைக் கண்டேன். நான் யாரென்று அவளுக்குத் தெரியாது. அவள் யாரென்று எனக்குத் தெரியாது. அன்பால் நாங்கள் இருவரும் ஆகர்ஷிக்கப்பட்டோம். நானும் அப்பெண்ணை மணக்க முடிவுசெய்தேன். அவளும் என்னை மனக்க முடிவுசெய்தாள். இருவரும் ஒருவர் குடும்பத்தை மற்றவருக்குச் சொன்னபோது இடி விழுந்த நிலையில் இருந்தோம்...

"எங்கள் குடும்பங்களுக்குள் ஜன்மப் பகை. ஆனால் எங்கள் காதல் உள்ளங்களுக்குள் ஊழி ஊழிக்காலத்திய அன்பு குமிழிவிட்டது.

"பெண்ணின்மீது மிகுந்த அன்பு கொண்டவர் பகையை மறந்து என்னை மருமகனாக ஏற்றுக்கொள்ள இருந்தார். ஆனால் என் தகப்பனார் எனக்கு எதிரியாக இருந்து எனக்குப் போதனை செய்தார். அப்பாவுக்கு என்மீது அளவற்ற பிரியம். அவர் எண்ணத்திற்கு எதிரியாக நான் காதலுக்காகக் குடும்பத்தை மறந்தேன். மாமனார் வீட்டோடு குடிபுகுந்தேன். நான் சௌக்கியமாக வாழ்ந்தேன். தகப்பனாருக்கு என்மீது அளவற்ற பாசம் இருந்ததே, அத்தனையும் வெறுப்பாக மாறி என்னைக் கொல்வதற்கு ஆட்களை வைத்தார். நம்பமுடியாதுதான். மகனைவிடப் பழைய பகைமை அவருக்கு உயர்வாகப்பட்டது. என்னைவிட, எதிராளியின் வம்பு அவருக்குப் பிரமாதமாகப் பட்டது. பெற்ற பிள்ளைக்காக அவர் தமது குரோதத்தை மறக்கச் சித்தமாக இல்லை. நான் இரு குடும்பங்களையும் சமரஸப் படுத்த முயன்றேன்.

"என்னை வஞ்சனையாக அழைத்துக் காலில் கிடந்த செருப்பினால் அவர்—யார்—பெற்ற தகப்பன்—அடித்தார்! சமரஸம் கோரிவந்த எனக்கு அவரது சம்மானம் செருப்புப் பூசை. நான் தகப்பன் என்ற பாசத்துக்காக, கௌரவத்துக்காக மன்னித்தேன். அதைப் பொருட்படுத்தவில்லை. அவரோ செருப்புப் பிய்கிறமட்டும் அடித்தார். நான் செத்துமடிய வேண்டுமென உதைத்தார். சாகவில்லை குற்றுயிரும் குலையுயிருமாக நடந்து மாமன் வீட்டுக்குச் சென்றேன்.

"என் நிலையைக் கண்ட மாமனார், ஆள் படைகளைத் திரட்டிக்கொண்டு மல்யுத்தத்திற்கே புறப்பட்டார். என் மனைவி, தகப்பனார் காலில் விழுந்து தடுக்காவிட்டால் இருபக்கத்திலும் நூற்றுக்கணக்கான உயிர்கள் சேதமாயிருக்கும். பழைய மோகத்தில் விரோதியின் மருமகன் என்ற நினைப்பில் எனக்குப் பல இடையூறுகளைப் 'பெற்ற தகப்பன்' செய்தார்! பெற்ற பிள்ளை என்ற தன்மையை மறந்தார். நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். எனக்கே சகிக்கவில்லை- அவரைத் தீர்த்துக்கட்டினால்தான் என் வாழ்வு சுகப்படுமென்று தீர்மானித்தேன். கொடிய சோதனை. அப்பனுக்குள்ள வீரம் பிள்ளைக்கு இருக்காதா? மேலும் அவர் வயதாளி, நான் இளஞ் சிங்கம்...

"எதிர்பாராதவிதமாக அவரை நான் மறித்துக்கொண்டு உதை உதையென உதைக்கச் சமயம் பார்த்தேன். சந்தர்ப்பம் வாய்த்தது. நானும் எனது மனைவியுமாகக் கோவிலுக்குப் போய்விட்டு வில்வண்டியில் வந்துகொண்டிருந்தபோது அவர் வயல்வெளிகளைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார். இரையைக் கண்டதும் வரிப்புலி உறுமுவதுபோல நான் வண்டியிலிருந்து பாய்ந்தேன். என் உடம்பிலேபட்ட செருப்படிகள் அப்போதுதான் படுவதைப்போன்ற உணர்ச்சித் துடிப்பு. எனது உடல் நிலைகொள்ளவில்லை மனைவியும் என்னைத் தொடர்ந்து ஓடிவந்திருக்கிறாள். நான் ஓங்கி ஒரு அறை என் தகப்பன் முகத்தில் அறைந்தேன். அடுத்த அறை என் மனைவியின் மேல் விழுந்தது, "மாமாவை அடிக்காதீர்கள்" என்று பிடித்துக்கொண்டாள். 'பெண்ணுக்கு விரோதியை மறந்துவிடும் ஸ்வபாவம் உண்டு. என் தகப்பனுக்கு அவமானம் அவர் பேசவில்லை. என்னை வலிந்து வண்டிக்குள் இழுத்துக்கொண்டு வந்து திட்டு திட்டெனத் திட்டினாள். நான் தவறு இழைத்தது, அடித்தது முட்டாள்தனம் என்று திட்டினாள். எனக்கு உண்மை புலனாயிற்று. அவளுக்குள்ள ஞானம் எனக்கு இல்லை,

ஐயா. யாராக இருந்தாலும் பலஹீனமானவனை அடிப்பது தவறு என்று உணர்ந்தேன்.

" நாலைந்து வருஷங்களுக்குப் பிறகு எங்களுக்குக் காதலின் சின்னமாக ஒரு குழந்தை பிறந்தது. இரண்டு வயதாக இருந்த குழந்தையுடன் சித்திரத் திருவிழா பார்க்கப் போனோம். கூட்டம் அதிகம். அதிலே யாரோ எங்கள் குழந்தையைத் திருடிவிட்டார்கள். நாங்கள் தேடித் தேடி அலைந்தோம், புழுவாகத் துடித்தோம். கிடைக்கவில்லை ஊருக்கு அழுதபடியே வந்தோம். சிலநாள் சென்ற பிறகு என் குழந்தையைத் திருடிப் போன நபர் என் தந்தையே என்றறிந்தோம். என் ரத்தம் கொதித்தது. நான் அந்த வீட்டிற்குள் காலெடுத்து வைக்கு முன்னதாகவே என் மனைவி என் அனுமதியில்லாமலே என் வீட்டிற்கு – மன்னிக்கவும் - என் தகப்பனுர் வீட்டிற்கு ஓடோடிப் போய்விட்டாள். அவள் பெற்ற குழந்தைக்காக......!

"என் தந்தை வீடு என்ருல் புலிக்குகை என்பது என் அகராதிப்படி அர்த்தம். எனது விரோதியின் வீட்டிற்குள் போய்விட்டாள். என்னிடம் அனுமதி கேட்டாளா? குழந்தை மீதுள்ள பாசம், பெற்ற பாசம், அவளுக்குக் கணவனின் காதலைவிடப் பெரிதாகத் தோன்றியதா? நான் ஸ்தம்பித்துவிட்டேன். என் தந்தை ஓடிவந்த என் மனைவியிடம் "என் பிள்ளையை நீ அபகரித்துச் சென்று அவமானம் அடையச் செய்தாய் இப்போது இந்த உன் குழந்தையைக் கொன்று உன்னைத் தவி தவிக்கவிடுகிறேன்." என நரசிம்ம அவதாரம் போல் நின்றிருக்கிருர். அவருக்கு நாடகப் பழக்கம் உண்டு, வேஷப் பேச்சுகள் பேசியதை, அவள் உண்மையென நம்பி, "எது வேண்டுமானுலும் செய்யத் தாயார்" என மாமனுர் காலில் விழுந்து குழந்தையை ஒன்றும் செய்யாதிருக்க வேண்டுமெனக் கெஞ்சினுள்.

"என் பையன், தன் தவறுகளை ஒப்புக்கொண்டு நான் சொன்னபடி நடப்பதாக ஒப்புக்கொண்டால் நீ இந்த வீட்டை விட்டுப் போகலாம். உனது பிள்ளை உன்னிடம் வரும். இல்லை, பிள்ளையை இழந்து விடுவாய்!" என்ருர்...

"என் தகப்பனுரின் பயமுறுத்தலுக்கு என்மனைவி இணங்கி விட்டாள்; அங்கேயே இருக்க முடிவு செய்தாள் எனக்கும் எனது மாமனுருக்கும் ஆத்திரம். எப்படியாவது அவளையும் குழந்தையையும் வரும்படி தூது அனுப்பினேம் அவள் முடியாது என்று சாதித்து விட்டாள், பயமுறுத்தினேம்; அவள்

வரவில்லை. அடிக்கடி கலகங்கள் எழும். வர வர எனக்கு மனைவியிடமுள்ள அன்பு வெறுப்பாக மாறியது. அவளுக்குக் குழந்தைப் பாசம், கணவனைவிடப் பெரிதாகப்பட்டது. அவள் மனசில் நான் துச்சமானேன்! எனக்கு உலகமே கசந்தது.

“நான் மனம் நொந்து கோவிலுக்கு வந்தேன். இங்கே அப்போதிருந்த மடத்துச்சாமி எனக்குப் புத்தி சொன்னார். நான் பிடிவாதமாக இருந்தேன். தகப்பன், மனைவி இருவரையும் மறந்தேன். ஆனால் ஒரு பாவமும் அறியாத பிள்ளையை மறக்கமட்டும் முடியவில்லை. எல்லோரும் என்னை அழைத்துக் கொள்ள வேறு வழியில்லாமல் சமாதானமாகப் போய் விடுவதாகச் சொன்னார்கள். நான் சம்மதித்தேன். ஆனால் தெய்வ சித்தம் மனைவிக்கு நோய் கண்டு அவள் காலமானாள். குழந்தையை வளர்க்கும் பொறுப்பு என் தலையில் விழும். மற்றும் ஓர் தாரம்...... மீண்டும் என் வாழ்விலே பாரதப்போர். வேண்டாம் ஐயோ வேண்டாம். குழந்தைப் பாசம் வைத்தால் சகல துன்பங்களுக்கும் திறவுகோலாக முடியும். நான் குழந்தையை மறந்தேன். வைராக்கியமாக இருந்துவிட்டேன். யாருக்காகவாவது நான் ஒரு கணம் கண்ணீர் உகுத்தால் எங்கோ எந்த ஊரிலோ இருக்கும் என் பையனுக்காகத்தான். அவனுக்காகக் கண்ணீர் இன்றுகூடத் துளிர்க்கிறது........”

தன் கதையைச் சொல்லிய மடத்துச்சாமி கண்ணைத் துடைத்துக்கொண்டார். வைராக்கிய உடம்பிலே வைரம் போன்ற கண்ணீர்த்துளிகள் சிந்தின. அதைப் பார்த்து மனமுருகிய சாம்பசிவப்பண்டாரம், “ஸ்வாமி, நானும் ரோகிணியை மறந்துவிட்டேன்” என்றார்.

“இல்லை, உங்கள் நெஞ்சம் துறவு மனப்பான்மையில் ஈடுபட்டிருந்தால் சலனமின்றிப் போய் உங்கள் மகள் ரோகிணியைப் பார்த்துவிட்டு வந்துவிடுங்கள். இந்த மடத்தில் தங்களுக்கு என்று வந்தாலும் இடமுண்டு!”

“இது பெரிய சோதனை” என்று முணு முணுத்தார் சாம்பசிவப் பண்டாரம்.

“போய் வாருங்கள். விரைவில் வந்துவிடுங்கள். மடத்திற்குப் போகலாமா?” என்று மடத்துச்சாமி மடம் நோக்கி நடக்க அவரைச் சாம்பசிவக் கட்டை பின் தொடர்ந்தது.

கோவில் மணியின் நாதமும், கடலலைகளின் கோஷமும் இரண்டறக் கலந்தன. சாம்பசிவக் கட்டை, ரோகிணி தமது

மகளாயில்லாமல் தமது மகனாக இருந்தால், மடத்துசாமியின் மகனைப்போலத் தன்னை என்ன பாடு படுத்தமுடியும் என்று எண்ணமிட்டார். பெரிய சாமி, உணர்த்தாமல் உணர்த்திய அவர் சரிதத்தில் ஓர் உண்மை இருப்பதை அறிந்தார். பழைய சம்பிரதாயங்களையும், கல்யாணம் இரு இளம் உள்ளங்களின் ஐக்கியமே தவிர, அங்கே பெற்றோருக்குப் பூர்ண அதிகாரம் கிடையாதென்ற உண்மையையும் கண்டார்.

"குரோதமும், விரோதமும் கொண்டவர்கள், தியானம் செய்துமுக்திபெறுவதோ மனக்கட்டுப்பாடு செய்வதோ இயலாத காரியம். மனைவியை மறந்து துறந்து வந்துவிடலாம். பெற்ற பிள்ளைகளை மறப்பது என்பது முடியாத காரியமா? உலகத்திலே பெரிய பாசம் பெற்ற பாசந்தான்!"

பெரியசாமி சொல்லிய வார்த்தைகள் மீண்டும் நினைவில் எழும்.

சாம்பசிவப் பண்டாரத்தின் மனசிலே பற்பல அலைகள் மோதின. முடிவுக்கு வர முடியாமல் இருக்கும்போது, கோவில் வாசல் குறுக்கிட்டது.

## அத்தியாயம் 7

ரோகிணிக்கு இரண்டு மூன்று நாட்களாக ஒரு இடத்திலும் இருக்க முடியவில்லை; நடக்கவும் கூடவில்லை. ஏதோ அவளைத் தொல்லை செய்வதாக உணர்ந்தாள். குழந்தையின் துடிப்பு ஆரம்பமாகிவிட்டது.

புருஷனிடம் சொல்லலாமா? நல்ல வேலையாகத் தன் வீடே சதமென்று அழகம்மா வந்து சேர்ந்துவிட்டாள். அவள் உதவியே போதும். ஆனாலும் தலைப் பிரசவம். டாக்டர் உதவி தேவையாக இருந்தால்? சந்திரன் ஒரு மருத்துவச்சியிடம் சொல்லி வைத்திருந்தான். அவசரத்திற்கு வருவதாக ஒப்புக்கொண்டுமிருந்தாள். படுத்த படுக்கையாகப் புரண்டு கொண்டிருந்தாள் ரோகிணி.

மாலை மங்கிவிட்டது. அழகம்மா அடுக்களையில் சாதம் வடித்துக் கொண்டிருந்தவள், சந்திரன் காலடி ஓசை கேட்க, 'சாப்பிடலாம்' என்றாள். அடுத்த அறைக்குள் பார்த்தான். நாற்கட்டிலில் படுத்திருந்தாள் ரோகிணி.

"சாப்பிட்டாளா ரோகிணி?"

"சாப்பாடுதான் வேண்டியிருக்குமா ?"

"ஏன் ?"

"இன்னும் இரண்டு மாசம் அடுத்த அறையில்தான் உனக்குத் தனி வாழ்க்கை. படுக்கையை இங்கிருந்து எடுத்துப் போய் விடலாம்!"

குறும்பாகப் பேசினுள் அழகம்மா. ரோகிணி முனகினுள். அதாவது உள்ளே வாருங்கள் என்று குறிப்பு. சந்திரன் வந்து அந்தக் கட்டிலின் அருகிலே அமர்ந்தான்.

"நான் பிழைப்பேனு?" என்ருள் தாயாகப் போகும் ரோகிணி வேதனையோடு.

"சை. அசட்டுத்தனமாகச் சொல்லாதே," என்ருன் சந்திரன்.

"என் அப்பாவிடம் எவ்வளவு கொடூரமாக இருந்தேன்? அவர் நினைவு உங்கள் நெற்றியைக் கண்டதும், அவர்மீதுள்ள பாசம் எல்லாம் போய்விடுகிறது..........."

"உன்னுல்தான் அவரை இழந்தோம்."

"வருவாரா ?"

"இன்றுதான் அவரைப்பற்றிச் சிந்திக்கிருய். ரோகிணி, நீ விநோத உள்ளம் கொண்டவள்!"

"நான் அவரிடம் மன்னிப்புக் கேட்டதாகச் சொல்லுங்கள்!"

"இப்படியெல்லாம் பேசாதே ரோகிணி, பேசாமல் தூங்கு........."

"நான் விளையாட்டாகச் சொல்லவில்லை. உறுதியாகவே சொல்லுகிறேன். நான் பிழைத்துக் கொண்டால், நானே மன்னிக்கும்படி என் தகப்பனுரிடம் கேட்கிறேன். இல்லை, என் சார்பாக, என் குழந்தையோடு."

அழுகை வந்து விட்டது. விக்கி விக்கி அழுதாள். சந்திரன் மனம் வேதனையடையவே, "உன்னைப்போல் அல்ல நான்;

முன்பே மறந்து விட்டேன் ; மன்னித்துக்கூட விட்டேன். அவர் இருக்கிற இடங்களை அறிய முயற்சியும் செய்கிறேன்.''

"நீங்கள் அவரை மன்னித்து விடுங்கள், மனிதராக ஏற்றுக் கொள்ளுங்கள். இதுதான் ஸ்மரணை இருக்கும்போது நான் சொல்ல விரும்பியது'' என்றாள் ரோகிணி.

பிறகு அவன் கையைப் பிடித்துக்கொண்டு 'கோ' வென அழுதாள்......நெஞ்சோடு தலை புதைத்து விம்மினாள்.

அவள் மனசிலே தகப்பனைப் பார்க்க ஆவல் பிறந்தது. 'அப்பா' என்று ஆசையுடன் கூப்பிட நினைத்தாள். அவர் குரல், அவர் உருவம், அவருடைய பேச்சு, அவள் கேட்கத் தவித்தாள். கடைசிக் காலமே தனக்கு வந்து விட்டதாக எண்ணினாள்.

அவள் சோக நினைவை மாற்ற சந்திரன் அவள் கன்னத்தில் குசாலாகக் கிள்ளினான். உடனே ரோகிணிக்கும் உள்ளப் பூரிப்பு வந்து விட்டது.

மீண்டும் இன்பமயமான எண்ணக் குவியல்கள்....... சென்ற நாட்களில் நடைபெற்ற காதல், சந்திப்பு, கவிதை முதலான பொருள்களை ஆனந்தமாகச் சம்பாஷித்தார்கள். அழகம்மா பொறுத்துப் பார்த்தாள்.

"அட இப்பத்தான் கல்யாணம் ஆகியிருக்கிறமாதிரி என்ன பேச்சு... எழுந்திரு தம்பி, போ சாப்பிட'' என்று குறுக்கிட்டாள். அவனுடைய படுக்கையை அந்தக் கட்டிலிலிருந்து அடுத்த அறைக்குள் கொண்டுபோய்ப் போட்டாள் அழகம்மா.

"இந்தமாதிரி சமயா சமயம் தெரியாமல் இருக்கலாமோ? இது பிரசவ அறை. ஆண் பிள்ளைகள் போய்விடவேண்டுமே? உம்... உம்...''

"அழகம்மா, ஒரே ஒரு வேண்டுகோள்'' என்றாள் ரோகிணி.

"என்னம்மா ரோகிணி, உனக்கு என்ன வேண்டுமோ கேள்.''

"நான் ஒரு வேளை பிரசவத்தில் செத்துப்போய்விட்டால் இவர் இன்னொரு தாரம் கல்யாணம் கட்டாமல் நீ பார்த்துக் கொள்ள வேண்டும்!''

சட்டென்று அழகம்மா, "நானே கட்டிக்கிறேன்'' என்று குறும்பாகச் சொல்லி அந்தக் கிழவி சிரி சிரியெனச் சிரித்தாள்.

இருவரும் சிரித்தபடியே பிரிந்தனர். கட்டிலில் புரண்டு படுத்தாள் ரோகிணி. பூர்ணக் கர்ப்பவதியான அவளிடம் சில மாறுதல்கள்; ஒவ்வொரு அவயவத்திலும் பிரசவத்தின் துன்ப உணர்ச்சி; ஆனாலும் தனது குழந்தையைக்காண ஆர்வம். இன்பமும் துன்பமும் மாறிமாறி அனுபவித்தாள். வெளியே நிலா பூச்சொரிந்து கொண்டிருந்தது. தென்னோலைகளுக்கு ஊடே நிலவின் சீதளக் கதிர்கள் எட்டிப் பார்க்கும் தோற்றம். தான் சந்திரனைத் தன் கிராமத்துக் கிணற்றடியில் பார்த்த நினைவில் கொண்டுவந்துவிட்டதுஅந்த நிலாக் கதிர்.

சந்திரன் நாட்டு வைத்தியரை அழைக்கப் புறப்பட்டான். "நல்ல பிள்ளையப்பா. வைத்தியர் எதுக்கு? தெருக்கோடியில் ஒரு மருத்துவச்சி இருக்கிறாள். அவளை அழைத்துவந்தால் போதும்...."

அழகம்மாவின் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்து ஓடினான். மருத்துவப் பெண் நல்ல கைராசி உள்ளவள். வந்தவள் ரோகிணியின் உடல் தளர்ந்து வலி அதிகமாகிப் பிரசவ நிலையை அடைவதையும் கண்டாள்.

மீண்டும் இன்ப வாதனை; துன்ப வாதனை; வலியின் சிகரம்; உடம்பே நொறுங்கி விடுமோ என்று பயம்; இடம் பெயர்ந்தது; என்ன ஹிம்ஸை; எவ்வளவு பாரம்... ஆனால் அடுத்த விநாடி அவள் கண்ணை மூடிக்கொண்டாள். உணர்ச்சி ஒன்றும் இல்லை. வாழைத்தண்டு போலச் சக்தியற்றுக் கிடந்தாள்.

ஐந்து நிமிஷம் சென்றது. வெளியே அங்குமிங்கும் கவலையுடன் உலாத்திக்கொண்டிருந்த சந்திரன், மனோவியாகூலத்தின் உருவாக நின்றான். அழகம்மா ஓடிவந்து "தம்பீ, தம்பீ!" என்றாள்.

"என்ன?" என்றான். என்ன குழந்தை என்று அறிய வெளியே நின்ற அவனுக்கு ஒரே ஆவல்.

அதற்குள்ளாக அங்கே, யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. உள்ளே வலியின் வேதனையில் முனகினாள் ரோகிணி.

"அட அது யாரப்பா. இந்த நேரத்திலே ராப்பிச்சை இல்லை, போய்யா சாமியாரே!" என்று சள்ளென தெருவாசலை நோக்கிக் கத்தினாள் அழகம்மா. அந்த வேளையில் பிச்சைக்கு வந்தால் அவளுக்குக் கோபம் வரத்தானே செய்யும்?

பிச்சைக்கு வந்த பண்டாரம் மௌனமாகத் தெரு வாசலிலேயே நின்றார்.

அழகம்மா, "தம்பி.... உனக்குக் குழந்தை வேண்டுமா? ரோகிணி வேண்டுமா?" என்று ஆத்திரத்தோடு கேட்டாள்.

சந்திரன் திகைத்தான். யார் வேண்டும்? மனைவியா? குழந்தையா? "ஏன் அழகம்மா ரோகிணிக்கு ஆபத்தா?"

சாமியார் இந்த நெருக்கடியில் "என் குழந்தையை நான் பார்க்கக் கூடாதா?" என்று ஓவென்று கூவிவிட்டார். அந்தச் சாமிகள் வேறுயாருமல்ல, சாட்சாத் சாம்பசிவப் பண்டாரம்! முன்பு ஜமீன்தார் சாம்பசிவப் பாண்டியராய் விளங்கியவர்.

"நீங்களா....? இந்தக் கோலத்தில்?" அழகம்மா கிட்டே வந்து சாமியார் முகத்தைப் பார்த்தாள். அவர் தன் ஆசைக்குரிய ஜமீந்தார்தான்! சாமியார் கோலத்தில் நிற்பதைக்கண்டு "ஸ்வாமி தாங்கள் யார்? அடியாளைத் தெரிகிறதா?" என்று அபிநயம் பிடித்தாள் அழகம்மா. விபூதிப்பட்டைக் கையைத் தூக்கி வேடிக்கையாகத் தன் இருகைக்குள் வைத்துத்தட்டினாள். கட்டையைக் கண்ட ஆனந்தம் அவளுக்கு!

"அழகம்மா போ. உள்ளே போய் ரோகிணியைக் கவனி" என்று அதிகாரம் செய்தார் காஷாயதாரி.

"உங்களுக்கு மகள் வேண்டுமா? பேரன் வேண்டுமா?" என்று சாம்பசிவச் சாமியாரை அழகம்மா கேட்டாள்.

அழகம்மாவின் கொஞ்சல் அதிகமாற்று.

"ரோகிணி பிழைக்க மாட்டாளா? அவள் கிடைத்தால் போதும்."

"உங்களுக்கு உங்கள் மகள் ரோகிணிதான் உயர்வு! சரி தம்பி, உனக்குப் பெண்சாதியா? பிள்ளையா?" என்று சந்திரனை நோக்கிக் கேட்டாள்.

"எனக்கு இரண்டும் வேண்டும்!"

"நீ கெட்டிக்காரன். ரோகிணிக்கு அவள் குழந்தைதான் வேண்டுமாம். தனது உயிர் போனாலும் போகட்டுமென்கிறாள்!" என்று இந்த விவகாரத்தை மேலும் கிளறாமல் உள்ளே போனாள் அழகம்மா.

அந்தச் சொற்கள் சாமியார் காதில் விழுந்தபோது நாராசமாக இருந்தன. குழந்தையே பெரிது........தான் துச்சம். எவ்வளவு உயர்ந்த லட்சியம் என்று நினைத்தது சாம்பசிவம்.

"மாமா மன்னித்துவிடுங்கள்" என்றபோது அவர் சந்திரன் கையைப் பிடித்துக் கண்ணில் ஒற்றிக்கொண்டார். தடுத்தான் அழாதபடியே.

அவன் முகத்திலே புதிய ஒளியைக் கண்டார். சந்திரன் முகமும் குரலும் எங்கோ கேட்ட சாயையாகத் தெரிந்தது. அந்தக் குரலில் புதிய சக்தி நாதம் தருவதை எண்ணினர்.

"தம்பீ, உனது தகப்பனுர் யார்?"

"மாமா, அவர் என்னை இரண்டு மூன்று வயதிலேயே அனுதையாக விட்டு விட்டுச் சந்நியாசியாகப் போய்விட்டதாகக் கேள்வி. நான் மதுரை ஜில்லாவைச் சேர்ந்தவன். அம்மாவோ அதே வயசில் என்னை விட்டு மனஸ்தாபத்தால் இறந்துவிட்டாள். ........." சாம்பசிவத்திற்கு இப்போது எல்லாம் புரிந்துவிட்டது. இந்தச் சந்திரன்தான் திருச்செந்தூர் மடத்துப் பெரிய சாமியின் புத்திரனுகயிருக்க வேண்டும். அவர் சொன்ன பூர்வாசிரமத்திலிருந்து இதைச் சாம்பசிவத்தால் யூகிக்க முடிந்தது.

"தம்பீ........என்னை மன்னித்துவிடு."

சந்திரன் கால்களைக் கண்ணீரால் நனைத்தபோது அவருக்குத் திருச்செந்தூரில் சந்தித்த பெரிய சாமிகள் நினைப்பு வந்தது. .........அவர்தான் சந்திரனின் தந்தை என்று சொல்வதா? கூடாதா? இந்தக் குழப்பத்தில் இருந்தபோது, வீட்டுக்குள்ளேயிருந்து ஒரு குரல் கேட்டது.

'என்ன பெரியம்மா அங்கே போய் விளையாடுறே?" என்று மருத்துவப் பெண் கத்தினுள். அழகம்மா வீட்டுக்குள் போனுள். காலத்தின் அருமை தெரிகிற நேரம். மௌனம் நிலவிற்று. அடுத்த விநாடி இளங் குரலில் 'குவா, குவா" என்ற குழந்தையின் அலறல்...... வீட்டுக்குள்ளிருந்து "ஆண் குழந்தை......ஆண் குழந்தை" என்று கத்தினுள் அழகம்மா.

சாமியார் கோலத்திலிருந்த மாமனுரைச் சந்திரன் பார்த்தான். அவர் தலையை நிமிர்த்தவில்லை. அந்தக் கட்டையிடம் பாசம் தளிர்விட்டுக்கொண்டு, பாசத்தின் பளு தாங்காது தலை வணங்கியவர் போலிருந்தார். சிறிது நேரம் சென்றது. அமைதி நிலவிற்று.

கட்டிலில் கிழித்துப் போட்ட வாழைநார் போல் படுத் திருந்தாள் ரோகிணி. உடம்பிலே இருந்த பொலிவு, வனப்பு எங்கே? எல்லாம் மங்கிவிட்டன. இல்லை, மறு உருவாகக் குழந்தையின் ரூபத்தில் தரையில் நெளிந்துகொண்டிருந்தது. பிஞ்சுவிரல் பிஞ்சுக்காலால் உதைத்துக்கொண்டிருந்தது.

அந்த அறைக்குள் ஜன்னல் வழியாகச் சந்திரன் எட்டிப் பார்த்தான்.

"அப்பாடா கண்ணு, அப்பா" என்று குழந்தையைக் கையிலேந்தி அழகம்மா கூத்தாடினாள். பிஞ்சு விரல்கள்; பிஞ் சுக் கால்கள்; பரக்கப் பரக்க விழிக்கும் கண்கள்; கொள கொள வென ஆடும் உடம்பு.

படுக்கையில் மெலிந்து கிடந்த ரோகிணி மெல்ல புருஷன் நின்ற திக்கு நோக்கினாள். அவளது தாய்மைக் களையோடு சோர்ந்த முகத்தில் வெட்கத்தின் சாயை கண்களில் தேங்கப் பார்த்தாள். புன்னகை மலர்ந்தது. பிறகு அறையைச் சுற்றிப் பார்த்தாள். அப்போது அருகே நிற்பது யார்? கண்ணை இடுக் கிப் பார்த்தாள். "நமஸ்காரம்" என்ற குரல் எழவே, "அப்பா ......" அவள் குரல் தழ தழத்தது. 'அப்பாவா?' என்று ஆனந் தத்தால் கூவியே விட்டாள்! பிறகு அவள் சிரித்தாள். தன் தந்தை சாம்பசிவத்தை நோக்கி நமஸ்காரம் செய்யக் கைகூப்ப முயற்சித்தாள். மருத்துவச்சி தடுத்து, "ஆடாமல் அசையாமல் படுத்திரம்மா" என்றாள்.

"என்னால் எழ முடியவில்லை, அப்பா! இல்லாவிட்டால் உங் கள் காலில் வந்து விழுந்திருப்பேன், மன்னியுங்கள்!" என்றாள் ரோகிணி.

"நீதான் என்னை மன்னிக்க வேண்டும், அம்மா!" என்றார் சாம்பசிவச் சாமியார்.

அவர் கண்களிலே ஆனந்தம் துளிர்த்தது. அப்போது அரு கில் நின்ற அழகம்மா, "யாரய்யா நீங்கள் துறவியாரே...... பேரனையும் மடத்துக்கு அழைத்துப் போக வந்தீர்களோ?" என்று சிரித்தாள். கிட்டே நெருங்கிப் பேரனைப் பார்த்தார். அவர் மனசிலிருந்த கோபம், பொருமையெல்லாம் எங்கோ பறந்தது.

மெதுவாக "அவனுக்குப் பெயர் என்ன வைக்கப் போகிறீர் கள்?" என்று கேட்டாள் ரோகிணி.

"என் தகப்பனார் பெயர் இடுவது வழக்கம், இங்கே உன் அப்பாவின் மன்னிப்பைக் கருதி......"

"சாம்பசிவம். டேய் குட்டிச்சாம்பசிவம், மட்டி சாம்பசிவம்" என்று ஜமீன்தாரின் பெயரை அழகம்மா உற்சாகமாகக் குழந்தையை நோக்கி உச்சரித்தாள்.

"அப்படியே செய்யுங்கள். உங்களுக்கு எப்படிப் பிரியம், அப்பா?"

சந்திரன், சாமியார் கோலத்திலிருந்தவரைப் பார்த்தான்; அவர் கொடியில் கிடந்த வெள்ளை வேஷ்டியொன்றைப் பார்த்தார். சிரிப்பு வந்து சந்திரன் மனைவியைப் பார்க்க, மனைவியோ குட்டிச் சாம்பசிவத்தைப் பார்த்தாள்.

குழந்தை பிறந்தது; குற்றங்கள் மறைந்தன. அவர்களுடைய காதலுக்குக் கோபங்கொண்ட சாம்பசிவம் அப்போது காதலின் கனியைக் கண்டு சிரிப்படைந்தார்.

தம்பதிகளின் ரத்தத்தின் ரத்தமாய், எலும்பின் எலும்பாய்ப் பிறந்துவிட்டது—பிள்ளை!

இப்போது எது உண்மை?

ஜாதியா? சமயமா? உயர் குலமா? தாழ் குலமா? எல்லாம் பொய். ஆண்—பெண், இதுதான் ஜாதி.

அவள் காதலித்தாள்; அவனும் காதலித்தான். காதல்—கனிந்தது. விதி நமக்குத் தெரியாமலேயே, நம்மைக் கேளாமலே, இருளிலிருந்து புறப்பட்டு எங்கோ இழுத்துச் செல்லுகிறது.

"அழகம்மா, நீ ஒரு நிமிஷத்தில் பயமுறுத்திவிட்டாயே." என்று சந்திரன் கேட்டதற்கு "ஆமாம். உனது பாசம் யாரிடமிருக்கிறது என்று உளவு பார்க்க வந்தேன். இந்தச் சாமியார் வருவார் என்று கண்டேனா?" என்றாள் அழகம்மா.

காஷாய உடைகளைக் களைந்தெறிந்துவிட்டுத் துல்லிய வெண்மையான உடைதரித்து வந்த மாஜி சாம்பசிவ ஜமீன்தார், "இந்தா அழகம்மா வாயாடித்தனமாக இனிமேல் பேசினே...... இந்தப் பயலுக்கு உன்னைக் கட்டி வைப்பேன்" என்று பேச ஆரம்பித்தார்.

எங்கும் ஆனந்தமயமான பேச்சு; இன்பம் பிறந்தது. சின்னஞ் சிறிய 'குவா குவா' என்ற இனிய அழுகுரல் வீட்டுக்குள் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டே இருந்தது!

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

காதல் வெளியீடு 1



## நீங்கள்

## படித்தீர்களா ?

அரு. ராமநாதன்

எழுதிய

# முதல் முத்தம்

○ பூமியை ஆகாயம் முத்தமிட்டது. மலரை மந்த மாருதம் முத்தமிட்டது வானத்தை வளர்பிறை முத்த மிட்டது. அந்த ஒரு கணத்தில் அவளும் அவனும் உல கத்தை மறந்திருந்தார்கள். அந்த முதல் முத்தத்தின் சுவையில் சகல கனவுலகங்களையும் கண்டாள் காவேரி...

—முதல் முத்தம்

○ "மாறும் என் கண்களை நம்ப வேண்டாம். பிற ளும் என் நாவை நம்ப வேண்டாம் பாசாங்கு என்ற பல்லாங்குழி வைத்து விளையாடும் என் பஞ்சேந்திரியங் களையும் நம்ப வேண்டாம். ஐம்புலன்களையும் தாண்டி அப்பால் நிற்கும் என் இதயத்தின் துடிப்பை நம்புங்கள்! உங்களுக்காக என் பளிங்கு மாளிகை, பொற்களஞ்சியம் போக போக்கியங்கள் சகலத்தையும் துறந்து உங்களோடு வெளியேறி வயல் வரப்புகளில் கூலி வேலை செய்யவும் தயார்!"

—தேவதாஸி

சோழ வரலாற்றுப் பின்னணியில் உருக்கமாகக் கற் பனை செய்யப்பட்ட இரண்டு நீண்ட காதற் கதைகள்.

**விலை அணா 12**

சாதாரணத் தபாலில் பெற விரும்புவர்கள் 13 அணா மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டர் அல்லது தபால் தலைகள் அனுப்பலாம்.

அடுத்த காதல் வெளியீடு

பிப்ரவரி மாதம் வெளி வரும்



ஜெக சிற்பியன்
எழுதிய

# உறவு முள்

(நாவல்)

**உள்ளத்தைக் கிள்ளி உணர்ச்சிக்கு உயிர் ஊட்டும் ஒப்பற்ற கருத்தோட்ட நாவல்**

○ உலகத்திலே உடன் பிறந்த சகோதரிகள் எப்படி எப்படியோ இருக்கிறார்கள். இளமை காலத்தில் எலியும் பூனையுமாக இருந்தவர்கள். புத்தி தெரிந்ததும் நாரும் பூவுமாக மாறிவிடுகிறார்கள்! இதற்கு மாறாக ஓசையும் குழலுமாக இருந்தவர்கள், மணமானதும் சக்களத்தி ஜன்மமாய் மாறிவிடுவதும் உண்டு! ஆனால் ரேவதியும் அவள் தங்கை மோகனாவும்?........

○ அக்காள் புருஷன்மீது மோகனாவுக்கு ஏன் அத்தனை பிரேமை? அதன் ஆதியும் அந்தமும்?........

○ மாலையிட்டவன்மீது ரேவதிக்கு மாளாத அன்பு தான். ஆனால் அந்த அன்பு, கணவன் மரணப் படுக்கையிலிருக்கும்போது மைத்துனனுக்காக அதிகம் அனுதாபப்படுவதேன்?........

○ இவர்களையெல்லாம் ஒன்று படுத்துகிறது அந்த ஓர் இரவு. அந்தப் பாதி இரவின் விளைவு என்ன ஆயிற்று? ரோஜாப் பூவைப்போலக் கவர்ச்சியாய் இருந்த மன உறவு மனச்சாட்சியின் முள்ளாய் குத்தியதேன்?........ மிகவும் சுவாரஸ்யமான நாவல்!

**விலை அணா 12 தான்.**

அதிக விலையில் வெளிவரக் கூடிய

- அபூர்வமான புத்தகங்களை -

குறைந்த விலையில் கவர்ச்சிகரமாகத்

தருபவை காதல் வெளியீடுகள்

# இந் நாவலாசிரியர்



## பிறப்பு 1917

'சுகி' என்ற புனைப் பெயரில் தமிழ் நாட்டின் பிரபல எழுத்தாளராக விளங்குபவர் தான் மேலே உள்ள சுப்ரமணியம் அவர்கள். இவர் திருநெல்வேலி ஜில்லாவில் மதவக்குறிச்சி என்ற கிராமத்தில் 1917-ம் வருஷம் மார்ச் மாதம் 22-ந்தேதி பிறந்தவர். இருபதாவது வயதிலிருந்து இலக்கியத் தொண்டில் ஈடுபட்டார். இவர் எழுதாத விஷயமும், பத்திரிகையும் கிடையாது. அவ்வளவு தூரம் தமிழ் மக்களின் அன்புக்குப் பாத்திரமானவர். இவரது திறமையை திருச்சி அகில இந்திய ரேடியோ நிலையத்தார் பத்து வருஷமாகப் பயன்படுத்திக்கொண்டு வருகின்றனர். தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரின் பாராட்டுப் பத்திரப் பரிசுக்கு உரியதான 'விதிவழியே' என்ற மகத்தான நாவலைச் சிருஷ்டித்தவர். பல நாவல்களும், ஹாஸ்யக் கட்டுரைகளும் ஏராளமான சிறு கதைகளும், எண்ணற்ற ரேடியோ நிகழ்ச்சிகளும் எழுதியுள்ளார். அரசியலிலும் கட்சிகளிலும் வேறு விவகாரத்திலும் பங்கு பெறாமல் தனக்கென இலக்கியத்தில் ஒரு தனிப்பாணி வகுத்துக்கொண்டு வெற்றி காண்கிறார்.

இந்த நாவல் இவரது எழுத்துப் போக்கிலே ஒரு புதுமையான முயற்சி.

# காதல் வெளியீடு

Wrapper Printed at Rainbow Printers, Tiruchi.